கல்கி

KALKI 22·1·84 ரூ 1·20

இடைத்தேர்தல் அறிவிப்பாரா இந்திரா?

சபரிமலை-மறுபக்கம்

கோடைக்காலம், குளிர்காலம் என்பது போல் 'சபரிமலை' காலம் என்று சொல்லலாம் போலிருக்கிறது. அந்த அளவிற்குப் பிரபலமாகியிருக்கிறார் சுவாமி ஐயப்பன்.

எதிர்பக்க வண்ணப்படத்தைப் பார்த்ததும்...

உங்கள் சந்தேகம்:

"என்ன காப்பி ஜெயமாகிருக்கிறது. இவர் ஏன் குடிக்காமல் இருக்கிறார்?"

ஜெயந்தியின் பதில்:

"ம்... நீங்கள் நன்றாக ஏமாந்து போனீர்கள்! என் கையில் வைத்திருப்பது நிஜமான கப் அண்ட் சாஸர் இல்லை. அதில் காப்பியும் இல்லை. அது ஒரு புதுமாதிரியான பிளாஸ்டிக்கிலானது. சிங்கப்பூரிலிருந்து வாங்கி வந்தது. விலை சுமார் அறுபது ரூபாய். இந்த வருடம் மியூனிச் சீசன் முழுவதும் இதில் தான் நான் இளநீரைப் பருகினேன்". இதனை வாங்கி வந்தவர்

எஸ். ஆர். நாராயணன்.

தகவல்: மௌனஷ்மி.

வண்ணப்படம்: ஜெம்மோகன்.

இக்கோயில் கேரளத்தில் இருந்தாலும் வருகிறவர்களில் பாதிக்குமேல் தமிழர்கள் தான்.

சபரிமலை சாஸ்தா என்பது மலை கடுமையான ஒன்று. இதில் போதிய வசதியின்மையால் பக்தர்களின் சிரமம் மேலும் கூடுகிறது.

மலைக்குத் தனியார் பஸ் வசதி கிடையாது. அரசு பஸ் மட்டும் தான் போகலாம், வரலாம். அரசு பஸ்ஸோ, போதுமான அளவில் விடப்படவில்லை.

முன்னறிவிப்பு இல்லாமல், எந்தவிதக் காரணமும் காட்டாமல் இந்த சேவைக்குக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது அரசு.

போலீஸ் வாகனங்கள் பம்பா நதிக்கரையில் தான் நிறுத்தப்பட வேண்டும். ஆனால் அங்கே போதுமான பாதுகாப்போ, பராமரிப்போ, ஒழுங்கு முறையோ எதுவுமே கிடையாது. முன்னால் போய் நிறுத்தியவர்கள் வாகனங்களைப் பின்னால் வருபவரை கேட்டு செய்துதான் திரும்ப.

மலை ஏறும் முன்பு பக்தர்கள் பம்பாவில் குளித்து விட்டு ஏறுவது தான் வழக்கம்.

அங்கே லெட்ரின் வசதி கிடையாது. கொஞ்ச தூரம் (அப்பச்சிமேட்டுப்போகும்) தெருப் போகிறும் 'லக்கேஜ்' என எழுதி வைத்திருக்கிறார்கள். பக்கத்தில் ஒரு பைப் மட்டும் இருக்கிறது.

அதைதவிர, மறைவோ கிடையாது. பலன் — அந்த இடமே மணக்கிறது! சுற்றிலும் அசிங்கங்கள்.

ஐயப்ப விரதத்தில் சுத்தம் — சுகாதாரம் முக்கியமான ஒன்று. ஆனால் அங்கே சுத்தமும் இல்லை, சுகாதாரமும் இல்லை.

பக்தர்களின் பசி போக்க வேண்டு [illegible]



உண்டு. ஆனால் விலைதான் மலையை விட உயரம்!

சீழிருந்து பொருட்களைக் கொண்டுசென்று மலையில் உணவு தயாரிப்பது சிரமம் — விலை கூடியிருக்கலாம் ஆனால்...

மலை அடிவாரத்திலும் அதே விலைப்பட்டியல் என்றால்...? பக்தர்கள் முணுமுணுக்கிறார்கள். அரசாங்கம் இந்த விஷயத்தைக் கண்டு கொள்வதுமில்லை. காதில் போட்டுக் கொள்வதுமில்லை.

மலை ஏறும் வழி குறுகலானது. கல்லும், கட்டியும் நிறைந்தது. இதைச் சீர்படுத்துவது என்ன அவ்வளவு கஷ்டமா? இரவில் மலை ஏறுபவர்களுக்காக வழிநெடுகப்போட்டிருக்கிற விளக்குகளும் போதுமானதாக இல்லை...

பக்தர்கள் சாதாரணமாய் இரவில் மலை மேல் தங்குவது வழக்கம். இதுவரை அவர்கள் பனியிலும், குளிரிலும், மழையிலும் வெட்ட வெளியில் தான் இருந்து வந்தார்கள். இந்த வருடம் தான் அரசாங்கத்துடன் போராடி ஒரு ஷெட் கட்டியிருக்கிறது தேவஸ்தானம்.

மக்கள் புழங்குவதற்கு ஏற்ப போதிய தண்ணீர் வசதி மலைமேல் இல்லை. இல்லை யென்றால் கோவில் தேவஸ்தானத்தின் கோரிக்கை தோற்றுக் கொண்டேயிருக்கிறது.

மகர விளக்கின் போது கூடுகிற கூட்டம் சொல்லி மாளாது. அந்த நேரத்தில் பக்தர்களை, நெரிசல்களை, ஒழுங்கு படுத்த, வசதி செய்து கொடுக்க, எக்கச்சக்கமாய் போலீஸ் படை தேவைப்படும்.

தேவையான போலீஸ்காரர்களைத் தந்திருக்கிற அரசு, பாவம் — அவர்கள் தங்க எந்த வசதியும் செய்து தரவில்லை.

தேவஸ்தானம் ஓர் இடத்தை ஒதுக்கித் தந்தது. அதற்குக் கூடாரம் கூடப் போடப் படாமல் இருக்கிறது.

கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு குளம் இருக்கிறது. அதில் குளித்த பின்தான் ஐயப்ப தரிசனத்திற்குச் செல்ல வேண்டும். ஆனால் அந்தக் குளமும், அதிலிருக்கிற நீரும் — மன்னியுங்கள், சொன்னால் பாவம்.

சென்ற வருடத்தில் – பிரதமர் இந்திரா மகரவிளக்கு தரிசனம் செய்ய விரும்ப அவர் ஹெலிகாப்டரில் போய் இறங்க வசதியாக கட்டிக் கொண்டு பெரிய திட்டத்தையே செய்ய முனைந்தது அரசு.

அங்கே ஹெலிகாப்டர் வரக் கூடாது. புனிதம் கெட்டுவிடும் என எதிர்ப்புக் கிளம்ப அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

எப்போதோ ஒரு முறை வருகிற பிரதமருக்காக ஹெலிகாப்டர் தளமே அமைக்க முனைந்த அரசு—

எப்போதும் வருகிற பக்தர்களுக்காகப் போதிய வசதிகள் செய்யாதிருப்பது ஏன்..?

—என். இ. மோகன்தாஸ்

குடத்தில் வைத்த தீபங்கள்

இயக்குநர் மாலி அவர்களுக்கு.

● முரளி மனோகர் ஆரம்பித்து வைத்தாலும் வைத்தார். பெண்மையைக் கொடுமைப்படுத்தும் ஆண்களின் சுயநலத்தை நீங்களும் நாடக மேடைகளில் நன்றாகத்தான் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறீர்கள்!

முதலில் 'கோபுரம் தாங்கும் பொம்மை'களில் தான். இதேமாதிரி கதையை வேறு கோணத்தில் அணுகினீர்கள் என்றால், இதில் கொஞ்சம் நேரடித் தாக்குதலே நடத்தி விட்டீர்கள். ஆண்களின் பலவீனத்தைப்

பெண் எழுத்தாளர்கள் வேறு வரிந்து கட்டிக் கொண்டு தாக்கிவரும் போது, ஒரு வேங்கைப் போகும் மனைவியின் பிரச்சினையைச் சரியான கோணத்தில் வழங்கிய உங்களை அவ்வளவு எளிதில் 'ஜெம் வைத்து ஜால் போடுகிறவர்' என்று குற்றம் சாட்ட முடியாது.

'பெண் தனக்கு ஒரு பாதுகாப்புத் தேவை என்றுதான் ஒருவனை மணக்கிறாள். அது எப்போது அவளுக்குக் கிடைக்கவில்லையோ, அப்போது அவள் அவனுடன் அல்லல்பட்டுக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும் என்று என்ன கட்டாயம் இருக்கிறது?' என்று கதாநாயகி கங்கா கடைசியில் பிரபாகருக்கு ஒரு சவுக்கடி கொடுக்கிறாளே, அழுத்தம் அதிகமாகவே விழுந்திருக்கிறது.

கந்தசாமியின் இயல்பான நடிப்பும் அவருக்கு ஏற்றாற்போல் அமைந்த வசனங்களும் கைத்தட்டல்களை நிறைய மாகவே பெறுகின்றன. மற்றவர்களும் தங்கள் பாத்திரங்களில் பளிச்சிட, நீங்களும் சௌந்தர்யாவுக்காகவும் எழுதிய வசனங்களும், உங்கள் டைரக்ஷனும் கைகொடுக்கின்றன.

ஒரு யோசனை. ஒரு மாறுதலுக்கு, அடுத்ததாக ஒரு சமுதாயப் பிரச்சினையைக் கையாண்டு பாருங்களேன்!

நன்றியுடன்,
சாருகேசி.

ஜனநாயகமா? கத்திக்குத்து அரசியலா?



- ஆனந்தா, அருப்புக்கோட்டை.

? ஆண்டில் ஒன்பது மாதங்களுக்கு மட்டும் தியேட்டர்களுக்கு தமிழ் சினிமா காட்டியே ஆக வேண்டுமாமே?

! 1) இத்தகைய ஒரு சட்டம் முன்பே பிறப்பிக்கப்பட்டு ஹைகோர்ட்டும் அடிபட்டுப் போயிற்று. மறுபடியும் புதும் ஜெபமிருக்கிறது. 2) இந்த உத்தரவால் தமிழ் சினிமாவின் தரம் உயர்ந்து விடப் போவதில்லை. அதற்கு வேறு வழிகளைக் கையாள வேண்டும். 3) தமிழ் சினிமாவுக்குத் தரமான தியேட்டர் கிடைப்பதில்லை என்பதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது என்ற காரணம் அபத்தமானது. தரமான படத்துக்குத் தரமான தியேட்டர் கிடைக்கும். 4) குப்பைப் படங்களையும் உயர்தர தியேட்டர்களில் கட்டாயமே என்று திரையிட்டால் (அ) தியேட்டருக்கு வசூலில் நஷ்டம் (ஆ) அசுத்தமாவதாலும் ஆசனங்கள் கிழிபடுவதாலும் மேலும் நஷ்டம். 5) இந்தப் படத்தைத்தான் திரையிட வேண்டும், இதைத் திரையிடக் கூடாது என்று தியேட்டர் காரரை வற்புறுத்துவது அரசியல் சாசனம் வழங்கும் அடிப்படை உரிமைகளுக்கு முரணானதாகும். தியேட்டர் காரர்களை மட்டுமின்றி ரசிகர்களையும் இது கட்டாயப்படுத்துவதாகிறது.

- கண்மணி, மதுரை.

? என். டி. ஆரின் ஓராண்டு ஆட்சி குறித்து?

! ஓராண்டுச் சாதனை என்று பக்கம்பக்கமாக நாளிதழ்களில் விளம்பரம் தந்திருக்கிறது ஆந்திர அரசு. ஆட்சியின் சாதனைகளெல்லாம் கட்சியின் சாதனைகளாக்கப்பட்டு அரசுச் செலவில் விளம்பரம் பெறப்படுகிறது. என். டி. ஆரின் பெரிய பெரிய உருவங்கள், பக்கங்களை அலங்கரித்து தனி நபர் பிரபையை வளர்க்கின்றன. வாழ்த்துக்குரிய சாதனைகளிடையே வேதனை தரும் அம்சம் இது. என். டி. ஆரிடமும் சில பலவீனங்கள் இருப்பது வேறு சில நிகழ்ச்சிகளாலும் தெரிய வந்துள்ளது.

- குமரேசன், மதுரம்.

? என். டி. ஆர். மீது கத்திக்குத்துத் தாக்குதல் சம்பவம் கண்டனத்துக்குரியதல்லவா?

! சந்தேகத்துக்கிடமில்லாமல் கண்டிக்க வேண்டியதுதான். அதே சமயம் நமது ஜனநாயகம், கட்சிக் கொள்கைகள் அடிப்படையிலன்றி, தனி நபர் பிரபை அடிப்படையில் நடப்பதால் விபரீதம் கூடிய ஆபத்துகளையும் சுட்டிக்காட்டுகிறது இந்நிகழ்ச்சி.



- ஆறுமுகம், ஆலங்குளம்.

? தி. மு. க. பந்தல் எரிந்ததற்கு என்ன காரணம்?

! அ. தி. மு. க.வைச் சேர்ந்த விஷமிகள் என்று கலைஞர் குற்றம் சாட்டியபோதிலும் மின்சாரம் 'ஷார்ட் சர்க்கியூட்' ஆனதால் நிகழ்ந்த விபத்து என்று முதலில் வந்த செய்தியே மெய்யாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஊர்வல நடையில் வந்த தி. மு. க. தொண்டர்கள் விஷமிகளால் இடையூறு நேராமல் போதிய பாதுகாப்பு செய்து கொண்டவர்களாக இருந்திருப்பார்கள்! இனி, இதுபோன்ற ஆபத்துக்களைத் தவிர்க்க மிகப் பெரிய பந்தல்களுக்குத் தடை விதிக்கலாம். தலைவர்கள் கூட்டத்தை நல்லதொரு மண்டபத்தில் நடத்தி விட்டுத் தொண்டர்கள் கூட்டத்தை மாலை நேரத்தில் திறந்தவெளிகளில் நடத்தலாம்.

நீங்கள் கேட்டவை — தராசு

○ சேகரன், திருச்சி.

? நெருக்கடியின் ஞானஸ்தி ஆட்சி முடிவுற்றிருக்கிறதே?

! ஓராண்டு முடிவில் முதுகெலும்பு பிரச்னை அவரை சிகிச்சைக்காக மருத்துவமனையில் கொண்டு போய்ச் சேர்த்திருந்தாலும் அவர் முதுகெலும்பு இல்லாதவர் அல்ல. ஓராண்டுக்கு அதிகமான சாதனைகள் நிகழாததற்குக் காரணம் ஆட்சியில் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவே கால விரயமாகி விடுவதாக இருக்கலாம். தொழில், பொருளாதார முன்னேற்றத்துக்கு அதிகாரக் குழுவும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க லோக ஆயுக்தாவும் அமைந்தன. நகராட்சித் தேர்தல் நடந்தது. கிராமங்களில் குடிநீர் வசதி, சிறு தொழில்கள் வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தியும் அமைச்சர்களுக்கான ஆடம்பரச் செலவினங்களைக் குறைத்தும் நற்பெயர் வாங்கியுள்ளார். விலைவாசி உயர்வு (மத்திய அரசும் காரணம்) மைனஸ் பாயிண்ட்.

○ சந்திரன், சென்னை.

? அமிதாப் பச்சனை போயிருக்கிறீர்களே?

! கூலி படத்தில் நடித்ததற்குப் பிராயச்சித்தம் பண்ணப் போயிருக்கலாம். படம் முடியாதா வீடு திரும்ப மாட்டோமா என்றாகி விட்டது. கதை என்று ஏதோ இழுத்தடித்து விட்டுத் தமிழர்களை குதிப்பாகப் பார்ப்பவரைக் கேலிக்குரியவர்களாகக் காட்டுகிறார்கள். அமிதாபுக்கு அடிபட்டிருக்காவிட்டாலும் படத்துக்கு நிச்சயம் அடிபட்டிருக்கும்!

○ எஸ். அன்புமணி, ஈரோடு.

? யாரையாவது மனதாரப் பாராட்ட வேண்டும் என்று தோன்றியதா சமீபத்தில்?

! பி. டி. கோயங்கா அறக்கட்டளை பரிசான ஒரு லட்சம் ரூபாயை பத்திரிகைத் துறையில் சிறந்து விளங்கியதற்காகப் பெற்ற திரு. வி. கே. நரசிம்மனை மனமாரப் பாராட்டுவோம். விருப்பு வெறுப்பின்றி நாட்டுக்கு நல்லதை எடுத்துக் கூறி பல ஆங்கில நாளிதழ்களில் அரும்பணியாற்றிய அவர் சுபாவத்தால் மிகவும் மென்மையானவர். அத்தகையவர் எமர்ஜென்சி கால கட்டத்தில் அஞ்சா நெஞ்சினராய் வீறு கொண்டெழுந்தது நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் அநீதியை அழுத்தமாக வலியுறுத்தியது.

○ எஸ். சரவணன், சென்னை

? ஏதாவது ஒரு ஜோக்!

! மகாராஷ்டிர மாநில அமைச்சர் பாலி ராம் தபார் "ஜனத்தொகைப் பெருக்கத்துக்கு அனுசரணையாக சாராயக் கடைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது; இதென்ன நியாயம்?" என்று கேட்டிருக்கிறார். இதை விடப் பெரிய ஜோக் என்ன இருக்க முடியும்? ஜனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப சாலைகள் பள்ளிக் கூடங்களை அதிகரிக்க முடியவில்லை. ஆஸ்பத்திரிகளை அதிகரிக்க முடியவில்லை, சாலைகளைப் போட முடியவில்லை, இன்னும் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆனால் சாராயக் கடைகள் அதிகரித்துவிட்டன என்று அமைச்சர் பெருமைப்படுகிறார்!

○ சி. பூபாலசிங்கம், சென்னை. ★

? காங்கிரஸ் கட்டுப்பாட்டிலிருக்கும் பாரதத்தின் தொலைக்காட்சி நிலையத்தை ராஜீவ் தொடங்கி வைத்திருக்கிறாரே, சரிதானா?

! தப்புதான் ஸ்வாமி, தப்புத்தான். ஆனால் சொன்னால் கேட்கவா போகிறார்கள்! தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் 40,000 ஏழைகளுக்குக் கடனுதவியை வழங்க ராஜீவைத்தான் அழைத்தன. புதுவையில் படாடோப விழா நடத்தின. கட்சிக்கும் ஆட்சிக்கும் வித்தியாசமே இல்லாமல் போய் விட்டது. ஆட்சியின் ஒவ்வொரு பணியும் கட்சிக்கும் தலைவருக்கும் பிரபல்யம் தேடித் தருவதாகவே திட்டமிடப்படுகிறது.

○ மாதூர் மைந்தன், நெடுங்குடி.

? வளர்ச்சி, ஆபாசம் விளக்குக.

! வளர்ச்சியில் ஆபாசம் இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆபாசத்தில் வளர்ச்சி உண்டு.

○ எம். ஜகந்நாதன், வேதாரண்யம்.

? டெல்லியுடன் நிலுவைகளை எளிதில் திருப்பி அளிக்கவில்லை என்று மத்திய நிதி அமைச்சர் கூறியது பற்றி?

! தொண்டைக் குழிவரைக்காவது சுருக்கினது சாக்கு அவப்பட்டது. இவ்விடம் அதுகூட இல்லை.

○ மணிகண்டன் கைலாசம், நெய்வேலி.

? இந்து திருமண அங்கமும் மதச்சார்பற்றவர்களில் இல்லாதவர்கள் சேர்க்கப்பட்டவர்கள் என்று மீண்டும் பாகதத்துக்காகத் தான் என்று வாதாடுகிறாரே வீரமணி?

! வேடிக்கையாய்!

○ ஜீ. ராஜகுமார், புதியம்புத்தூர்.

? தி. மு. க. உடன் ஜனதா கூட்டு வைத்துக் கொள்ளும் என்று இரா. செழியன் கூறியதை தேசிய தலைமை மறுத்திருக்கிறார்களே, முடிவு என்ன ஆகும்?

! இ. காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணி வெல்லும்.

○ செ. சேகரன், மயிலாடுதுறை.

? மாருதி கார் ஏன் இந்தத் தயாரிப்பு இல்லையே?

! ஆரம்பத்தில் ஜப்பானிய மோட்டார் கார் பாகங்களைத் தருவித்து இணைப்பார்கள்; படிப்படியாக இங்கேயே அப்பாகங்களை உற்பத்தி செய்யத் தொடங்குவார்கள். அதனால்தான் ஆரம்பக் கட்டத்திலேயே கார் பெற ஏகப் போட்டி!

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
சி. பூபாலசிங்கம்,
4/7, [illegible],
நந்தனம், சென்னை—600035

டெபாசிட்தாரர்களுக்கு

24%

வட்டி வழங்கப்படுகிறது

மேற்படி கூடுதல் வட்டி
பென்ஷனர், மகளிர், மைனர்களுக்கு மட்டும்
''வெள்ளிக் குத்துவிளக்கு'' அன்பளிப்புடன் வழங்கப்படும்.

கீழ்க்கண்ட வட்டி விகிதங்களில்
டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

1-வருடம்	2-வருடங்கள்	3-வருடங்கள்	5-வருடங்கள்
17%	18%	19%	22%

ஜெயசக்தி பைனான்சியர்ஸ்

(A LEADING HIRE PURCHASE FINANCIERS)

சென்னை	:	39, நடேச ஐயர் தெரு (2வது மாடி) (சிவா-விஷ்ணு கோவில் அருகில்) உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-600 017 போன் : 447188
பெங்களூர்	:	24/1-A, மார்கோஸா ரோடு (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003, போன் : 366971
திருச்சி	:	22 மதுரை ரோடு (முதல் மாடி) திருச்சிராப்பள்ளி-620 008
பாண்டிச்சேரி	:	11, நேரு தெரு (கனரா வங்கி எதிரில்) பாண்டிச்சேரி-605 001
தஞ்சாவூர்	:	எண் : 2 & 3, முதல் மாடி, தி. ஏ. கனல் ரோடு, தஞ்சாவூர்-613 001 போன் : 1626
திருவண்ணாமலை	:	14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601 போன் : 483
பட்டுக்கோட்டை	:	9-A, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை-614 601 போன் : 453

CHARI

ஆனால் கட்சியினரால் நடத்தப்படும் மாநாடுகள் போன்றவற்றைப் பார்த்தால் தேர்தல்கள் மார்ச் மாதத்தில் வந்தால் ஆச்சரியப்படவேண்டாம்'' என்கிறார் சன்முகம்.

கடைசியாக இ. காங்கிரஸ் கட்சியில் என்ன சொல்லுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள, மேலிடத்து அரசியல் அறிந்துள்ள தமிழக இளைஞர் இ. காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவிடம் பேசியபோது அவர் சொன்னார்:

''இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள் 'தேர்தல்' என்ற ஒரே பிரச்னையைவைத்து ஒன்றுபடப் பார்க்கின்றன. எவ்வளவு சீக்கிரம் தேர்தல் வருகிறதோ, அவ்வளவுக்கு அவர்களுக்கு நல்லது. ஆனால் பிரதமர் ''தேர்தல் குறிப்பிட்ட காலத்தில் தான் நடக்கும்'' என்று தெளிவாகக் கூறிவிட்டார். கட்சியின் மாநாடுகள் நடத்துவதால் சீக்கிரம் தேர்தல் வரும் என்பது அர்த்தம் அல்ல. கட்சிக்காரர்களையும் மக்களையும் சந்திப்பதற்காகத்தான் இது போன்ற மாநாடுகள் நடக்கின்றன.''

தலைவர்கள் கூறுவதை ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கும்போது இடைத் தேர்தல் வருவதற்கான சாத்தியக் கூறுகளே தெரிகின்றன.

ஜனாதிபதி ஆட்சிமுறை வருமா?

தற்போது பரவலாக விவாதிக்கப்பட்டு வரும் ஒரு விஷயம் 'இந்திராகாந்தி, இந்தியாவை ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு மாற்றி விடுவாரா?' என்பது. அதோடு 'ஜனாதிபதி ஆட்சிமுறை இந்தியாவுக்கு ஏற்றதா?' என்றும் தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டோம்.

சுப்பிரமணிய சுவாமி: நிச்சயமாக ஜனாதிபதி ஆட்சி முறைக்கு இந்திரா இந்தியாவை மாற்ற மாட்டார். ஏனென்றால் தற்போது உள்ள ஆட்சி முறையில்தான் ஊழல் செய்வதற்கு வாய்ப்புக்கள் அதிகம். இப்போதுள்ள முறையில் 272 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால் போதும். ஆனால் ஜனாதிபதி ஆட்சி வந்தால், நாட்டிலுள்ள சுமார் 40 கோடி மக்களின் ஆதரவு தேவைப்படும். இந்திரா அந்த அளவு 'ரிஸ்க்' எடுக்கமாட்டார்.

வாஜ்பாய் சரண்சிங்: ஜனாதிபதி ஆட்சி முறைக்கு இன்னொரு பெயர் சர்வாதிகார

தேர்தல் வருமா, வராதா என்பது பற்றித் தலைவர்கள் கருத்து ஒருபக்கம் இருக்கட்டும். பொது மக்கள் என்ன சொல்கிறார்கள்?



என். ரவி: எப்போது தேர்தல் வந்தாலும் வெற்றி பெறப் போவது இ. காங்கிரஸ்தான். எதிர்க்கட்சிகளின் லட்சணத்தை மக்கள் பார்த்தாயிற்று. சாதாரண மக்களின் பிரச்னை இடைத் தேர்தல் பற்றி அல்ல. அன்றாடத் தேவைகள் பற்றியதுதான்.

டாக்டர் ஜேம்ஸ் நடராஜன்: இப்போதுள்ள சூழ்நிலையில் இந்திராகாந்தி அவர்கள் வெகு விரைவாகத் தேர்தல்களை நடத்தினால் ஆச்சரியப் படவேண்டாம். சீக்கிரமாகத் தேர்தலை நடத்தி, பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் பெரும்பான்மை பெற்று அரசியல் சட்டத்தைத் திருத்தி ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாறிவிடுவார் என்று நம்புவதற்கு நிறைய அறிகுறிகள் தெரிகின்றன.

ஆர். வெங்கடேசன்: தேர்தல் கமிஷனின் சில பரிந்துரைகள் ஒப்புக் கொள்ள முடியாதவை. முக்கியமாக மாநில சட்டசபைகளைக் கலைப்பது பற்றிய பரிந்துரை. நடமாடும் வோட்டுச் சாவடிகளை வரவேற்கலாம். ஆனால் நிலையான வோட்டுச் சாவடிகளிலேயே குண்டர்கள் கைப்பற்றும் போது இந்த நடமாடும் வோட்டுச் சாவடிகள் என்னகதி ஆகும்?

லலிதா சேகர்: இந்தியாவை ஒற்றுமையாக வைப்பதற்கு இந்திராவைத் தவிர வேறு எந்தத் தலைவராலும் முடியாது. இதை இந்திய மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால், எப்போது தேர்தல் நடந்தாலும் இந்திரா தலைமையிலுள்ள கட்சி தான் வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

[illegible] ஆட்சிதான். அது வராது. வரக்கூடாது. அது நல்லதல்ல.

ராமமூர்த்தி: ஜனாதிபதி ஆட்சி முறைக்கு இ. காங்கிரஸின் தலைவர்கள் கூட (முக்கியமாக சஞ்சய் காந்தியின் நண்பர்கள்) ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஜனாதிபதி ஆட்சி முறை நல்லதல்ல. ஜனாதிபதியால் நியமிக்கப்படும் மந்திரிகள் யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை. இந்த நிலை ஊழலுக்கு வழிவகுக்கும்.

தேர்தல் கமிஷனின் பரிந்துரைகள்

தேர்தல் சமயத்தில் சட்டமன்றத்தைக் கலைத்துவிட வேண்டும் என்ற தேர்தல் கமிஷனின் பரிந்துரையை எதிர்க்கட்சித் தலைவர்கள் எதிர்க்கிறார்கள். "மாநிலங்கள் [illegible] சிக்கச் சொல்கிறார்கள். அவ்வாறானால் பதவியிலுள்ள ஆளும் கட்சி மாநிலங்களில் தேர்தல் நடக்கும் போது அதிகார துஷ்பிரயோகம் செய்யுமே! அதை எப்படித் தடுப்பது?"

தேர்தல்களில் நிற்கும் வேட்பாளர்கள் செலவிடக் கூடிய தொகைக்கு உச்சவரம்பை உயர்த்த வேண்டும் என்பது எதிர்க்கட்சித் தலைவர்களின் வேண்டுகோள். "தேர்தல்களில் முக்கியமான செலவு பெட்ரோலுக்கும் போஸ்டர்களுக்கும் தான். அரசாங்கமே இந்தச் செலவுகளுக்குப் பணம் கொடுத்தால் தேர்தல்களில் கறுப்புப் பண ஆதிக்கத்தைப் பெருமளவு கட்டுப்படுத்தலாம்" என்றார் சுப்பிரமணியசுவாமி.

தேர்தல் முறையையே மாற்ற வேண்டும் என்கிறார் ராமமூர்த்தி. "விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை அமுல்படுத்தினால், தேர்தல்களில் நடக்கும் ஊழல்கள் ஓரளவு குறைய வாய்ப்புள்ளது" என்கிறார்.

தேர்தல்களுக்கு எலெக்ட்ரானிக் வோட்டு மெஷின்களை வைப்பது மிகவும் நல்லது. ஆனால் இதை அமுல்படுத்த இந்திரா அரசு பயப்படுகிறது என்று குற்றம் சாட்டுகிறார்கள் சுவாமியும், வாஜ்பாயும். அவர்கள் சொல்லும் இன்னொரு முக்கியமான கருத்து: "தேர்தல் கமிஷன் ஒரு நபர் கமிஷனாக இல்லாமல், நான்கைந்து பேர் கொண்ட குழுவாகச் செயல்பட வேண்டும். அது சுதந்திரமாக இயங்கவேண்டும்."

தொகுப்பு: சீனிவாசன்; சந்திரமௌலி

இதர தேசங்களில்...

ஸ்விட்சர்லாந்தில் தேர்தல். ஜனநாயகம் இருந்து வருகிறது. பொதுவாக அரசியல் நிர்ணயச் சட்டத்தின் ஒரு திருத்தம் பெற்றுவிட்டு அங்கத்தினர்களால் 'ஏற்றுக்' கொள்ளப்படுகிறது என வைத்துக்கொள்ளுங்கள். அதை மற்ற மாநிலங்களின் அபிப்பிராயத்தைக் கேட்பது மாதிரி, வோட்டுக்கு விடுவார்கள். எல்லாச் சட்டங்களையும் அல்ல. மக்களை நேரடியாகப் பாதிக்கக் கூடிய அடிப்படைப் பிரச்னைகளை மட்டும் வோட்டுக்கு விடுவார்கள். மக்களை நேரிடையாகப் பாதிக்கும் எதையும் மக்களேதான் தீர்மானிக்க வேண்டும் அங்கே.

பிரான்ஸ் நாட்டுப் பொதுவாகக் கூட்டணி ஆட்சிதான். 'ஸ்திரத் தன்மை' என்கிற வார்த்தையில் நம்பிக்கை இல்லாதவர்கள். ஒரு பழமொழி கூடச் சொல்வதுண்டு. ஒரு பிரெஞ்சுக்காரன் தனித்திருந்தால் காதலில் ஈடுபடுவான்; இரண்டு பேர் சேர்ந்தால் ஆட்சியைப் பிடிப்பார்கள்; மூன்று பேரானால் ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்று யோசிப்பார்கள்!" அந்த நாட்டுச் ஜனாதிபதிக்கு ஏராளமாக அதிகாரங்கள் குவிந்துள்ளன.

இத்தாலி, மேற்கு ஜெர்மனி: மத்திய அரசு, மாநில அரசுகள் என்று கிட்டத்தட்ட இந்தியாவில் உள்ளது போலத்தான். ஆனால், இந்திய ஜனாதிபதியை விட அங்கு ஜனாதிபதிகளுக்கு அதிகாரம் அதிகம். அதிகாரத்தைப் பயன்படுத்தவும் வசதிகள் இருக்கின்றன. ஆனால் பயன்படுத்துவது கிடையாது. பொதுவான முக்கிய காரணமாக ஹிட்லரின் சரித்திரம் இருப்பதால் அவர்கள் ஜாக்கிரதையாகவே ஜனநாயகத்தைப் பாதுகாத்து வருகிறார்கள்.

ரஷ்யாவில் இருப்பது ஜனநாயகம் என்று சொல்லிக் கொண்டாலும், ஒரே நபர் தேர்தலுக்கு நின்றால் கூட, எல்லாரும் போய் வோட்டுப் போட்டுவிட்டு வர வேண்டும். வோட்டளிக்காமல் இருப்பது அங்கு கிரிமினல் குற்றம். கோட்டுப் போடுவது. அடிப்படை உரிமைகள் எல்லாம் ஏட்டளவில் இருந்தாலும், "இப்படித்தான் செய்ய வேண்டும்" என்று மறைமுகமாக மக்களைக் கட்டுப் போடுவதுதான் இந்நிலை

ஸமரியாஸ் பைனான்ஸஸ்

புத்தாண்டு முதலீடு வெகுமதி மாதம்

கிடைக்கும் மாதங்கள்	வருடாந்திர வட்டி %	கூட்டுவட்டி %	தொகை	வெகுமதிகள்
6	15	16.5	1,000	[illegible]
12	17	18.5	2,000	[illegible]
24	18	19.5	3,000	[illegible]
36	19	20.5	4,000	[illegible]
60	19.5	21	5,000	[illegible]
120	20	21.5	10,000	[illegible]
			20,000	[illegible]
			25,000	[illegible]

எங்களது கீழ்க்கண்ட கிளைகளில் முதலீடுகள் ஏற்றுக்கொள்ளப்படும்:
திருவனந்தபுரம்-4, திருவல்லா-1, [illegible]-1, கோட்டயம்-1, கொச்சின்-1, ஆலப்புழை-1, கள்ளிக்கோட்டை-2, [illegible]-42, சென்னை-5.

நிர்வாக அலுவலகம்:
ஸமரியாஸ் ஹவுஸ், 29 [illegible] -600 004
போன்: 75523 75524

''போலி ஜனநாயகம்'' என்று நான் சொல்லவேண்டும்.

இங்கிலாந்தில் விசித்திரம் என்னவென்றால் அரசியல் நிர்ணயச் சட்டம் என்பதே இல்லை; ஏற்கெனவே இருந்து வருகின்ற (கன்வென்ஷன்) சம்பிரதாயங்களின் அடிப்படையில் எல்லாக் காரியங்களும் செய்யப்பட்டு வருகின்றன.

பெல்ஜியம், நியூஸிலாண்ட் போன்ற சிறிய நாடுகளில், தேர்தலுக்குச் சொற்ப காலம் முன்பு ஆளும் கட்சி பதவியிலிருந்து ராஜினாமா செய்து, மறுபடியும் ஆட்சியைப் பிடிக்கத் தேர்தலில் போட்டியிடும்.

இந்தியாவில் தேர்தல், ஊழலையும் கள்ளப் பணத்தையும் வளர்க்கிறது. ஓரளவு இதைக் குறைக்க மே. ஜெர்மனி முறையைப் பின்பற்றலாம். பதிவான மொத்த ஓட்டுக்களில், குறைந்த பட்சம் ஐந்து சதவிகிதமாவது பெறுகிற கட்சிகளுக்கு, அரசு மானியம் வழங்குகிறது; மேலும் அங்கு 20,000 'மார்க்'குக்கு மேல் கட்சிக்கு நன்கொடையாகக் கிடைக்கிற தொகையை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். இந்தியாவிலும் இது போன்ற சில சீர்திருத்தங்களைச் செய்யலாம்.

அரசியல் விஞ்ஞானம் போதிக்கும் கல்லூரிப் பேராசிரியர்களிடமிருந்து தகவல் திரட்டியவர்:

-தமயந்தி

வாரம் ஒரு புத்தகம்

பத்தாயிரம் ரூபாய் பரிசு நூல்

● இந்த ஆண்டு சாகித்திய அகாதமி பரிசு பெற்றவர் சிதம்பர ரகுநாதன். புத்தகம் ''பாரதி காலமும், கருத்தும்.''

இந்திய நாட்டுப் புரட்சி இயக்கத்திலே பாரதிக்கு எப்போதும் தொடர்பும் இருந்ததா என்று ஆராய்ந்து, ''நிச்சயம் இருக்கிறது'' என்று ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தியிருக்கிறார் ஆசிரியர். இருந்தாலும் காந்தியுகம் தோன்றி அவரது அறப்போர் வழியைப் போற்றத் தொடங்கியவர்கள் பாரதியின் ''புரட்சி'' மனப்பான்மை பற்றிய செய்தியை மறைக்க முயன்றிருக்கிறார்கள் என்ற ஆசிரியரின் கருத்து சர்ச்சைக்குரியது.

தான் எடுத்துக் கொண்ட முதல் கருத்தை நிலைநாட்ட, மிக ஆழ்ந்து கவனித்து ஆராய்ச்சி செய்திருக்கிறார் ரகுநாதன். உதாரணம்:

''வேல்ஸ் இளவரசருக்குப் பாரதகண்டத் தாய் நல்வரவு கூறுதல்...'' என்ற தலைப்பிட்டுப் பாடலைத் தொடங்கும் பாரதி, அந்தத் தலைப்புக்கு அடியிலேயே அடைப்புக் குறிகளுக்குள் ''பாரத மாதா தானே பணித்தது'' என்று குறிப்பும் எழுதியுள்ளார். இந்த அடிக் குறிப்புக்கு என்ன அர்த்தம்?

இப்படிப்பட்ட பாடலை எழுது என்று பாரதமாதா எனக்குக் கட்டளையிடவில்லை என்பதுதானே பொருள்? அப்படியானால் கட்டளையிட்டது யார்?... பத்திராதிபர் ஜி. சுப்பிரமணிய ஐயர்தான் என்பது தெளிவு.

இது போலவே நூல் பூராவும், நுணுகி நுணுகி அலசி எடுத்திருக்கிறார்; பலருடைய கருத்துக்களுக்கு, வாதமும், பிரதி வாதமும் செய்திருக்கிறார். திரும்பத் திரும்ப 'புரட்சி'யையே வலியுறுத்தும். இப்புத்தகத்தில் இன்னொரு இடம்:

சரீர பயம் என்ற தலைப்பில் மற்றொரு கட்டுரையையும் பாரதி எழுதினான்.

மெடிகல் காலேஜ் பிள்ளைகளுக்கும், மற்றொரு கட்டடக்காரருக்கும் பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. அப்போது ஒரு தமிழ் வாலிபருக்கும், ஒரு பரங்கிப் பையனுக்கும் சண்டை உண்டாயிற்று. பரங்கிப் பையன் சிதம்பரனை அடித்து விட்டான். தமிழ வாலிபன் ஆறு வயதுப் பெண் குழந்தைபோலே கண்ணீர் விட்டுத் தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டான்.

இப்போ! சரீர வேதனைக்கு இவ்வாறு அஞ்சுவதும், அதைரியம் அடைவதும் வாலிபர்களுக்கு அழகாகுமா?... முன்னிருந்த ஆரியர் முன் வைப்பதற்குக் கூடத் தகுதியாக மாட்டார்கள்.

கண்ணன் பாட்டு, தெய்விகப் பாடல்கள், பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, வேறு பல கவிகள் — ஆகிய எதையுமே ரகுநாதன் தொடக் காணோம். பாரதி மீது இருந்த பற்றை விட, கம்யூனிசப் புரட்சி மேல் ஆசிரியருக்கு இருக்கும் ஈடுபாடே தெரிகிறது.

-ஈஸ்வர் குமார்.

மீனாட்சி புத்தக நிலையம், 60, மேலக் கோபுரத் தெரு, மதுரை—1. விலை ரூ. 40.

ராதா மாதவம்: நாதலயம்

அதே கண்ணன்தான். ஆனால் அவரை மீரையின் அவன் வடிவம் ஒருவிதம். புரிஜைத் நாதத்தில் வேறொரு விதம். குருவாயூரில் மற்றுமொரு விதம். மன்னார்குடியில் ஒரு தனி விதம். வெவ்வேறு க்ஷேத்திரங்களில் அந்த ஒருவனையே நூதன நூதன ரூபத்தில் தரிசிக்கிறோம். க்ஷேத்திரங்களில் போலவே நாம் ஸ்தோத்திரங்களிலும். ராதையின் அதிகமான பக்திப் பிரேமை; அதற்காக அவளுக்குக் கண்ணன் தனி வாஞ்சை அளித்தது; அதில் அவளுமே சற்றுச் செருக்குற்றது; அந்தக் கணமே அவன் அவளைவிட்டுப் பிரிந்தது; அவள் விரகத்தில் துடியாய்த் துடித்தது; செருக்கழிந்தது. 'நான்' என்பதே அழிந்து, அவள் பரிபூர்ண சரணாகதி செய்தது! உடனுக்குடனே அவன் அவளிடமும் கூடியது – இந்த விஷயத்தை எத்தனையோ பக்த கவிகள் கையாண்டிருக்கின்றனர். ஒவ்வொருவர் கையிலும் அதே பொருள் தனித்தன்மை வாய்ந்த அழகோடு உருவெடுத்திருக்கிறது. இந்த உருவங்களில் ஸ்வாமி ஆத்மானந்தரின் 'ராதா மாதவம்' உணர்வு நுட்பம், தத்துவத் திட்பம் இரண்டிலுமே பெருமை பெற்றதாக ஒளிர்கிறது. எளிமையான மொழியில் ஸம்ஸ்க்ருதத்தின் காம்பீர்யத்தையும் அடக்கிக்கொண்டு கவிதையே காவியமாகிறது.

இதனை நம் ஆத்மாவுக்கு அருகாமையே ஆக்கிப் படைத்திருக்கிறார் – எந்த நெஞ்சையும் தமது இசையால் கனிவிடம் உருகச் செய்யத்தெரிந்துள்ள ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி.

இசையரசி புதிதாக வழங்கும் ராதா மாதவ இசைத்தட்டு ஆத்மானந்தர் வாக்கத்தில் தொடங்கும்போதே நம் ஆத்மா ஆனந்தத்தில் சொருகத் தொடங்குகிறது. நாட்டை, மோஹனம், கேதாரகௌளை சாவேரி, முகாரி போன்ற கனமான ராகங்களும் கொண்ட ராகங்களும், கல்யாணவசந்தம், ரேவதி, யமுனாகல்யாணி, ஆஹிர் பைரவி போன்ற மிருதுவான பிரேமைப் பண்களுமாக, மொத்தம் பதினெட்டு ராகங்களில் "ராதா மாதவ"த்தின் தாத்பர்யத்தொட்டு கவிதைகளும் ஓர் அற்புத பக்திமய கோலமாகவே விரிகின்றன. தாமதமில்லாமல், ஆயிரம் விருத்தம் என்பதாக வாதித்துப்பதை விட்டு வசீகரத்தில் வஞ்சனை செய்வதாகவும் இல்லாமல், வாதசிருஷ்டிக்குப் பொருகைகம் பூட்டுவதுபோல இழைய இழைய வச்சித்ததைக் கொண்டு போகிறார் ஸ்ரீமதி எம். எஸ். அவரது சாரீரத்தின் தயவும் வளமும் தெள்ளத் தெளிவே அமைந்த உச்சரிப்பு, உள்ளம் தோய்ந்த பக்தி பாவம் இவையெல்லாம் கலந்துவிட, நாம் இசைவெள்ளத்தில் நிர்த்தமாடுகிறோம்.

பிரிந்த துன்பத்தை மட்டுமின்றிப் பிரிக்க முடியாத அத்வைத இன்பத்தை இறுதிக் காட்டுவதே இந்த பக்திப்பாவின் தனிச் சிறப்பு. எங்கெங்கும் அவனைக் காணுத தேடும் ராதை முடிவில் தன்னுள்ளேயும், தன்னிலுமே அவனைக் கண்டு கொண்டு விடுகிறாள். இந்த ஆத்மானந்த விசாரத்தினை நாமும் தொட்டு விடுகிறோம் இசைத்தட்டு முடியும்போது.

காலத்தோடு காலம் கைகோர்த்து உலவுகிறதாலே எம். எஸ். ஸின் பெருமை! ஸ்வாமி ஆத்மானந்தரின் திருச்சமாதியைத் துள்ள பேரனு நாட்டு மாலைகளால் அவர் சாற்றிய பீடத்தை இன்றும் மங்காது காத்து வருகிறார் அவரது பூர்வாஸ்ரமப் புதல்வர். இன்றைக்கு குருதேவ் என்று அன்பராலும் அழைக்கப்படும் ஸ்ரீ பத்மநாப மேனன்.

அவர் நாட்டினர் உள்பட அநேக அடியார்களும், வாசகர்களும் இந்த நன்னாளைப் பெற்று வரும் மாலைகளை ஆசிர்வதித்தே எம். எஸ். ஸுக்கு இசையாராய் காணிக்கையாக்கப்படுகிறது.

—கண்ண

● புதுதில்லி, பம்பாய், சென்னை நகரங்களில் இசைத்தட்டு விழாக்களில் வெளியிட்ட பிரமுகர், சிவலோகநாதன், அருள் நம்பூரி.



கல்கத்தா மாநாடு

கல்கி



1984 ஜூலை 22
ருத்ரோத்காரி ஆடி 6
மலர் : 42 இதழ் : 25

பொறுப்பின்மை, நம் நாட்டுடைமை!

இந்தியா போன்ற ஒரு மாபெரும் தேசத்தைச் சிறந்த முறையில் வெற்றிகரமாக ஆள ஒரே ஒரு மார்க்கம்தான் உண்டு. கிராமப் பஞ்சாயத்து தொடங்கி மத்திய நாடாளுமன்றம் வரை அனைத்து நிலைகளிலும் ஜனநாயகப் பண்புகளை வளர்ப்பதுடன் அதிகாரங்களைப் பரவலாக்கவும் வேண்டும். அந்தந்த மட்டத்தில் ஜனநாயக முறையில் பதவிக்கு வந்தவர்கள் தமக்குள் பிரச்னைகளை விவாதித்து, முடிவெடுத்து, அம்முடிவுகளை அமல்படுத்தவும் அவற்றுக்குப் பொறுப்பேற்கவும் வேண்டும். இதற்கு நேர்மாறாக, சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து படிப்படியாக அதிகாரங்கள் பலவும் பறிக்கப்பட்டு நாட்டின் தலைநகரிலேயே ஒட்டுமொத்தமாய்க் குவிவதைக் காண்கிறோம். துரதிர்ஷ்டவசமான இந்தப் போக்கு தேசத்தின் துரித முன்னேற்றத்துக்கும் மக்களின் சுபிட்ச வாழ்வுக்கும் பெரும் தடையாக இருப்பதுடன் பல்வேறு புதிய பிரச்னைகளையும் தோற்றுவித்து வருகிறது. இதனை மத்திய – மாநில உறவுகளை விவாதிக்கச் சென்னையில் கூடிய மிக முக்கியமான மாநாட்டின் நடவடிக்கைகள் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளன.

"தமிழ்நாடு அரசியல் விஞ்ஞான அகாதமி" நடத்திய இம்மாநாட்டில் கலந்து கொண்ட மேற்கு வங்க நிதி அமைச்சர் டாக்டர் மித்ரா, 'மத்திய அரசின் வரி வருவாயில் முப்பது சதவீதமே அனைத்து மாநிலங்களுக்கும் பிரித்து வழங்கப்படுகிறது என்றும் எழுபது சதத்தை மத்திய அரசே நிர்வகிக்கிறது' என்றும் சுட்டிக் காட்டினார். இருபது ஆண்டுகளுக்கு முன்பு கூட மாநிலங்களின் பங்கு 55 சதமாக இருந்ததை நினைவூட்டினார்.

முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் 'அடித்தள மக்களுக்கு வோட்டுரிமை வழங்கினால் போதாது. அவர்கள் குரல் அழுத்தமாக ஒலிக்க வழி ஏற்பட வேண்டும்' என்றார். 'பஞ்சாயத்து நகரசபைத் தேர்தல்களை நடத்த முன்வராத மாநில அரசுகள் மத்தியில் அதிகாரங்கள் குவிகிறதே என்று புலம்பும்போது அவர்கள் பேச்சும் தார்மீக பலம் இழந்து விடுகிறது.' மாநிலங்கள் தனியாகத் திட்டமிட்டுப் பாடுபட்டு முன்னேற வாய்ப்பளிக்காத மத்தியத் திட்டக் கமிஷன் கிருஷ்ணய்யரின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாயிற்று.

[illegible] பேசிய பலரும், 'பலமான மத்திய அரசுதான் நாட்டைக் காக்க முடியும்' என்று பூச்சாண்டி காட்டப்படுவதை இகழ்ந்து, மாநில அரசுகள் பலம் பெற்றால்தான் மத்திய அரசும் பலப்படும் என்ற நிதர்சன உண்மையை எடுத்துரைத்தனர்.

கடைசி நாளன்று பேசிய தமிழக முதல்வர், 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கோருவது நியாயமானதே' என்றார். 'அதிக அதிகாரங்கள் கேட்பவர்கள் நாட்டைத் துண்டாட முனைவதாகப் பிரசாரம் செய்வது அநீதி' என்று கண்டித்தார். "மாநிலங்கள் மத்திய அரசிடம் கையேந்திப் பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன. ஒருபக்கம் மத்திய அரசு, 'மின் கட்டணத்தை உயர்த்து' என்று வற்புறுத்துகிறது. அதே நேரத்தில் அதே கட்சியின் மாநில அமைப்பு 'மின் கட்டணத்தை உயர்த்தினால் போராட்டம் நடத்துவோம்' என்று எச்சரிக்கிறது!"

இவ்வாறு மாநில சுயாட்சி மறுக்கப்படுவதால் ஏற்படும் பல விபரீத விளைவுகளையும் பிரச்னைகளையும் விவாதித்தது இம்மாநாடு. மாநில அளவில் மட்டுமின்றி இன்னும் கீழே பஞ்சாயத்துக்கள் நகரசபைகள் போன்றவற்றுக்கும் சுயாட்சி தேவை. அந்தந்த நிலைகளின் வருவாயும் அதைச் செலவிடும் அதிகாரங்களும் வரையறுக்கப்பட்டால் யாரும் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க முடியாது. ஆனால் இன்றுள்ள நடைமுறையிலோ எல்லோருமே தமக்கு மேலே உள்ளவர் மீது பழி சுமத்திவிட்டுத் தப்பிவிடுகிறார்கள். பொறுப்பின்மை தேசிய பழக்கமாகிவிட்டது!

[illegible]
[illegible]

[illegible]

பம்பாயில் படவிழா

அன்புள்ள வாசகருக்கு,

பம்பாயில் பட விழா. மேற்படி தலைப்பை நீங்களும் கவனித்திருப்பீர்கள். கொஞ்சம் [illegible] தொண்டைக் குரல் உதவியுடன் உச்சரித்துப் பாருங்கள். மத்திய அரசின் செய்தி [illegible] போதும். [illegible] 'சாந்தி' புகழ் [illegible] உதவியுடன் [illegible] காட்டி. அப்புறம் [illegible] நடிகர், நடிகைகளோடு, [illegible] 'ஆம்பிளை' பெண்கள். [illegible] இந்திய [illegible] அப்புறம் [illegible] அப்புறம்? [illegible]

[illegible]

1974-ல் [illegible] ஆரம்பித்த [illegible] 78-ல் [illegible] 80-ல் [illegible] 83-ல் [illegible] பம்பாய்!

[illegible]

[illegible] கதை சொல்லும் படக் [illegible] எப்படி? [illegible]

[illegible] MASCOT: [illegible] 'இந்தா [illegible]' [illegible] (அப்படியே [illegible]) [illegible] அப்பா [illegible] அம்மா [illegible] [illegible] அப்பா - அம்மாவை [illegible]

○ புது நாடா

○ ஸ்லின் ஆர் டேஸ்ட். (மேற்கு ஜெர்மனி) என்கிற படத்தின் டைரக்டர் பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறார். அருகில் அவரது மனைவி.

○ பாக்கர்.

மாய் அமைந்து, அதில் ஆண் குழந்தை இருடி. பின் மாட்டி — என்னத்திற்காக அநாவசியமாய் நீட்டி முழக்க வேண்டும்? கடைசி கடைசியில் பார்வையாளர்களிடம் ஒரு பச்சாதாபத்தைப் பெறுவதற்காக இரண்டு குழந்தைகளையும் மூழ்க வைக்கிறார் டைரக்டர் (ரோஸாவோ என்னவோ).

படத்திற்கு தமிழில் ராமு, பிரியா என்று கதா பாத்திரங்களின் பெயரை வைக்கிற மாதிரி மாஸ்காட் — அந்தப் பெண் குழந்தையின் பெயர்.

'முத்தும் குமரா என்கிற என் செல்லக் கிளியே — அடுத்தபடியாக எத்தனைதையெடுத்து நம் வாசகர்களுக்காக ஆராயலாம் என்று வெளியே வந்து நம்பிபோனாய் சொல்லுகிறது.'

'க்கீ... க்கீ...'

'ஆ... ப்ளூ தண்டர் வந்திருக்கிறது. நிறைய டமால் டுமீல் எல்லாம் எதிர் பார்க்க வைக்கிற படம் போல் இருக்கிறது. சபாஷ் முத்துக் குமரா... இந்தா உனக்கு நெல்மணி. எங்கே உள்ளே ஓடு பார்க்கலாம்.'

BLUE THUNDER (U.S.A.) 'நீல இடி'— ஹெலிகாப்டருக்கு வைக்கப்பட்ட செல்லப் பெயர். அதைச் செலுத்தும் கதாநாயகர் விபட்நாம் போரில் பணிபுரிந்து அந்த நாட்களின் கோரத்தழும்புகளை மனத்தில் சுமப்பவர். தற்சமயம் ஒரு மாறுதலுக்காக லாஸ் ஏஞ்சல்ஸின் போலீஸ் பிரிவில் சேர்ந்து இந்த ஹெலிகாப்டரை இயக்கி....

அது அப்படியிருக்க, ஹெலிகாப்டரில் என்ன விசேஷம்?

லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் விளையாட்டின் போது எந்தப் பக்கத்திலிருந்தும் வன்முறைகளும் கலவரங்களும் எழலாம். அப்போது அமைதியை அடக்கும் நாராயணன் கைச் சக்கராயுதமாக இந்த ஹெலிகாப்டர் இயங்கும். 'ஆதி மூலத்தை' அழைக்கிறவர்களைப் போலக் காப்பாற்றும். முதலைகளை அழிக்கும்.

பறக்கும் போலீஸ் ஹெலிகாப்டர் (நீல இடி அல்ல) ஒன்று இடிதொலைக்கிறது இறங்க வேண்டியதிருப்பத்தும், தரையில் மோதித்தான் ஆகவேண்டும். மோதுகிறது. கதாநாயகனும் (என்ன இருந்தாலும் கதாநாயகன் அல்லவா) அவர் கூட்டாளியும் உயிர்ச்சேதம் கூட இன்றித் தப்பித்து ஹெலிகாப்டர் கீழே இறங்கக் காரணமாயிருந்ததுபிரபலமானவர் என்று பிடிக்க ஆரம்பித்து எதிர்கொண்டே தான் ஒவ்வாதவர் என்று ஒதுக்கிவிட்ட ஒருமேஜர் காரி காரணம் என்று சண்டயித்து.... அப்புறமென்ன, சதித்திட்டங்கள்முறியடிக்கப் படுகின்றன; நீல இடி ஜெயிக்கிறது.

சரி, இத்தோடு இப்போதைக்குப் போதும். மிஞ்சியவைகளைக் கொஞ்சம், கொஞ்சமாய் அப்புறம் பார்ப்போமே வந்தனங்களுடன்,

(T)

Filmotsav 84

டி. எஸ். ராஜம்

★ கவிஞர் பதுமநாபன்:

எங்கள் குடும்பத்திலே பெரியப்பா ராஜத்தை தர்மபுத்திரன் என்றே அழைப் பார்கள். சிறு வயதிலேயே காலமான என் தகப்பனார் துரைசாமி (மேனேஜர்; டி. வி. எஸ். மதுரை) — அர்ஜுனன். தருமன் சகோதரர் களை நேசிப்பார்களும் எனக்கு உண்டு. தொழிலை விட ஒரு படி அதிகமாகவே குடும்பத்தின் மீது பெரியப்பா ராஜத்துக்கு அதிகமான பற்று. தமது சொந் தங்களைக் கவனித்துக் கொண்டதுடன்; ஆறுதல் எல்லாரிடமும் அன்புடன் பழகி, குடும் பத்தைக் கட்டிக் காப்பதிலே வல்லவராக விளங்கினார்.

அந்தப் பொறுப்பைத் தம்பியின் மகனும் பெரியப்பா — பெரியம்மாவைத்தான் கூற வேண்டும். என் கல்யாணத்தின் போது, புகைத்து • பணியாளர்களுடன் பேசி, என் தகப்பனார் ஸ்தானத்தில் இருந்து கல்யாணம் சிறப்பாக நடக்க அவர்தான் உறுதுணையாக இருந்தார்.

★ ஸ்ரீ. ராமானுஜம்

(ஐ. என். டி. டி. சி.):

பத்து ஆண்டுகளுக்கு முன் இருக்கும். பெங்களூரில் ரோட்டரி கிளப்பில் பேசிக் கொண்டிருந்தேன். முதலாளி — தொழிலாளி உறவைப் பற்றிக் கூறும்போது, நிறுவனத் தின் வளர்ச்சியில் இரு பாலாருக்குமே சம பங்கு உண்டு: பரஸ்பரம் நம்பிக்கை அவசியம் என்றெல்லாம் சொல்லிவிட்டு ''இதற்கு ஒரு நல்ல உதாரணம் டி. வி. எஸ். கம்பெனிகள்'' என்று சொன்னேன்.

பேச்சு முடிந்ததும் பின்னாலிருந்து எழுந்து வந்து கைகளைப் பற்றிக் குலுக்கினார் திரு. ராஜம். ''நீங்கள் இருப்பதைக் கவனிக் கவே இல்லையே!'' என்றேன் ஆச்சரியத் துடன்.

''அதனால்தான் பாராட்டுகிறேன்; என் முகத்தைப் பார்த்து விட்டுப் பேசி யிருந்தால் என்ன பிரயோசனம்?'' என்று சிரித்தார்.

திரு. ராஜத்திடம் ஓர் அருமையான அணுகு முறை உண்டு. அந்த நிமிடத்தில் காரியம் சாதிப்பதற்காக வேண்டி, தற்காலிக மாக பேச்சு இடையாது. பேச்சுவார்த்தை களின் போது, பொறுத்தன்மையுடன் நடந்து கொள்ளுவார். கம்பெனியைப் பற்றிய உண்மைகளை அப்பட்டமாகத் தெரிவிக்க அவர் தயங்கவே மாட்டார்.

★ ஒரு வசீரியக் அதிகாரி (கிட்டத் தட்ட 25 ஆண்டு காலம் டி. வி. எஸ். குரூப்பில் பணி புரிந்தவர்):

நேரம் தவறாமையை திரு. ராஜம் முக்கியமாகக் கடைப்பிடித்து வந்தார். முன்னதாகவே ஒப்புக் கொண்டு விட்டால், எந்தக் கட்டத்துக்கும் ஒரு நிமிடம் கூட அவர் தாமதமாக வந்ததே கிடையாது.

அந்த வயதிலும், அவர் சோம்பல் பட்டோ, ஓய்வாகக் கதிரில் சாய்ந்து இருக்கவே முடியாது. ஒரு பொறியியல் பட்டதாரி 1918-ல் முதலாவதாகத் தன்னுடன் ஒத்துழைக்க கம்பெனியில் சேர்த்தவர்; கம்பெனியின் தரம் கொஞ்சம் போகாது காத்து வந்தார்.

மிகத் தீவிரமான மதப் பற்று, கடவுள் நம்பிக்கை கொண்டவர். இன்று பெரும் தொகையுடன் விளங்கும் ''டி. வி. எஸ். சாரிட்டீஸ்,' மத கல்வி, மத, தர்ம ஸ்தாப னங்களுக்குத் தாராளமாக உதவி வருகிற தென்றால் அதற்கு ராஜம் அவர்களின் முக்கிய காரணம் சொந்த ஊரான திருக்குறுங்குடியில், ஊரார் எங்கும் போலாத வசதிகளின்றி இருந்தது. கிராம வளர்ச்சிக்கு மட்டுமல்லாது, வறுமையில் வாடுபவர்களுக் கும் உதவி புரிந்து வந்தார்.

★ டி. எஸ். ரங்கராஜன்

(செயலாளர் மியூசிக் அகாடமி):

டி. கே. வெங்கடராமய்யர் மியூசிக் அகாடமி தலைவராக இருக்கும் போது, ராஜம் துணைத் தலைவராக இருந்தார். 1971-76-ல் தலைவராகப் பதவி வகித் தார். பெங்களூரில் சேர்க்கமாக இருந் தாலும், தவறாமல் கமிட்டிக் கூட்டங்களுக்கு வந்து கொண்டிருந்தார். இசையில் தேர்ந்த ஞானமும், நல்ல ரசனையும் அவருக்கு உண்டு.

சிரம நிலைமையில் இருக்கும் சங்கீத வித்துவான்களுக்கு உதவ நிதி வழங்குவ தற்கு 1978-ல் ரூ. 10,000/- அளித்து, அறக்கட்டளை நிறுவ ஏற்பாடு செய்தார். இப்போது அந்தத் தொகை ஒரு லட்சமாக உயர்ந்து, பல வித்வான்களுக்கு உபயோக மாக இருந்து வருகிறது.

தொகுப்பு: சாருகேசி, தமயந்தி

ஒரு வைரத்தின் ஒளிச் சிதறல்கள்

ULKA-HCG-4-84 TAM



சொல் ஒன்று வேண்டும்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

2

உமையை ஒத்த வயதினள்தான் விஜி. இரண்டு பெருக்குமே, இருபது முடியாத குருத்துப் பருவம்தான்.

ஆனால் -

குருவித் தலையில் பனங்காயை வைத்தது போல - உமாவிற்குக் குடும்பப் பொறுப்புகள் அதிகம். விஜிக்கு இது மாதிரியான பொறுப்புகள் எதுவுமில்லாவிட்டாலும், சில வேலைகளைத் தானே வலிய இழுத்துப் போட்டுக் கொள்வாள்.

உமா மணமாகி வந்த புதிதில், அவளுக்கு இந்தக் குடும்பத்தின் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்ததே விஜிதான்.

[illegible]

அனுராதா ரமணன்

எல்பனைத. வெகுளித்தனமாக ஒப்புக்கொள்பவன் அவன்...

''வாய் நல்லதுதான் இல்லியே தவிர, அந்தப் பொண்ணுக்கு என்ன குறைச்சல்.... அவ என் கூட மார்க்கெட்டுக்கு வந்தா— ஒரு பைசா என்னை ஏமாத்திட முடியாது தெரியுமா... என் சொத்துப் பாம்பு களைக்க — எல்லாத்தையும் கவனிச்சுட்டே வருவா...

''அப்டேய்... புதுசா ஒருத்தி வந்தா, மொதல்லே என் குணம் அவளுக்குப் பிடிக்கணும். அவ குணம் எனக்குப் புரியணும்... இந்தக் காலத்துப் பொண்ணுங்க கூட எப்படிப் பேசணுங்கறதுகூட எனக்குத் தெரியாதுடா... நான் சாதாரணமா எதையாவது சொல்லப் போய், அவ அதை விபரீதமா எடுத்துக்கிட்டு, என்னைத் தூக்கி எறிஞ்சு பேசிட்டா... என்னால தாங்க முடியாதுடா... பேசாம, அந்தப் பொண்ணு விஜி கழுத்துலேயே தாலியக் கட்டிடு...

''எத்தனை வயசானாலும், அந்தப் பொண்ணுக்கு, தாய் மாமன், மாமியார் பாசம் விட்டுப் போகாது... அட, அதையெல்லாம் ஒதுக்கிட்டு, அவ எதிர்காலத்தைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு... உன்னையே புருஷனா நினைச்சு, இந்த வீட்டுல உரிமையோட சுத்திச் சுத்தி வருது. நாளைக்கும் புதுசா ஒருத்தி வந்தா இவ நிலைமை என்ன... முதலாவது — இதை நான் அவகிட்ட எப்படிடா சொல்லுவேன்...?''

மீனாட்சி, மகனிடம் கெஞ்சுதலும் அழுகையுமாக ஆன மட்டும் சொல்லிப் பார்த்துவிட்டாள். பரத்தாமனோ — மகன், அத்தை மகளை மணக்க மறுக்கிறான் என்ற செய்தி கேட்டவுடனேயே வானத்துக்கும் பூமிக்குமாக விஸ்வரூபமெடுத்து நின்றார்.

மகனைப் பொறுத்த மட்டில், அவர் வாயில் இதமான வார்த்தை வந்தே வராது...

''உன் மூஞ்சிக் கட்டைக்கு எவன்டா பொண் கொடுக்கத் தயாரா இருக்கான்....''

''சும்மா இட்ட வேண்டாம். உங்க மூஞ்சிக்கு என் அம்மாவைப் பெத்தவங்க பொண்ணு கொடுக்க அந்தக் காலத்துல தயாரா இருந்த மாதிரி — இந்த மூஞ்சிக்கும் எந்தப் பொண்ணைப் பெத்த அப்பனும் தயாரா இருப்பான்...''

''எனக்கு நல்ல உத்தியோகம் இருந்துதுடா... அந்தக் காலத்துலேயே இந்தப் பரத்தாமன் பேரைச் சொன்னா ஊரே நடுங்கும். எனக்குப் பொண்ணைக் கொடுக்க, பொண்ணைப் பெத்தவங்க கியூவுல நின்னாங்க... இன்னிக்கு நீ, விஜியை வேண்டாம்னு சொன்னா பரவும் உன்னைச் சும்மா விடாது பாரு...''

''அப்பா, புரியாமப் பேசறீங்க... இந்த விஜியை வாயில்லாப் பிறவிங்கறதுக்காக நான் ஒதுக்கலை... இவ, சின்ன வயசுலேயிருந்து என் கூடவே வளர்ந்துட்டா. நானுமே அவகிட்ட ஒரு தங்கச்சி கிட்டப் பழகற மாதிரிதான் பழகியிருக்கேனே தவிர, எப்பவாவது முறை பிசகி நடந்துக்கிட்டிருக்கேனான்னு அவகிட்டேயே கேட்டுப் பாருங்க.... தெரியும்...''

மகனின் இந்த வார்த்தைக்கு மேல், பதில் பேசத் தெரியாமல் அடங்கி விட்டார் பரத்தாமன்.

மனைவியிடமும் ரகசியமாய்ச் சொல்லிவைத்தார்.

''இந்தா, தப்பு நம்ம மேலதான். உனக்கும் எனக்கும் இந்தப் பொண்ணு பொறந்ததுலேயிருந்து, இவனுக்குப் பின்னாடிக்குத் தான்கற நினைப்பு இருந்திருக்கு. இப்படி பொரு ஆசைய வச்சிட்டிருக்கிற நாம — இவங்களை ஒண்ணா, ஒரே வீட்டுல வளரவிட்டிருக்கக் கூடாது. எப்பவுமே தூரத்துல இருக்க இருக்கத்தான் ஒரு பொண்ணுக்கு மவுசு ஜாஸ்தி... என்ன பண்றது.... பிடிக்காதவனை, இவ தலையில கட்டிட்டா— பின்னால அவதிப் படப் போறது அந்தப் பொண்ணுதானே தவிர நாமே இல்லே...''

இவர்களின் இந்த முடிவால் அதிகம் பாதிக்கப்பட்டவள் விஜிதான்.

ராஜாவினால் மிகத் தெளிவாக, 'இவளை நான், என் மனைவியாக நினைத்துப் பழகவில்லை'— என்று கூற முடிந்தது...

பரத்தாமன் — தமக்கை மகளை அழைத்து, ஒரு கணம் உற்றுப் பார்த்து, நீளமாய்ப் பெருமூச்செறிந்து, 'இவன் கிடக்கறான்... வெத்துப் பய... உனக்குப் பாரு.. நான் ஒரு ராஜகுமாரனையே கொண்டு வந்து நிறுத்தறேன்...' இப்படிச் சொல்லி, இவள் முதுகில் ஆதரவாய் இரண்டு தட்டுத்தட்டி—

இந்த விஷயத்துக்கு அத்துடன் ஒரு முற்றுப் புள்ளி வைக்க முடிந்தது...

மீனாட்சி – இந்தச் சிறு பெண்ணின் கலங்கிய கண்களைச் சந்திக்க மாட்டாமல் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொள்வதிலும் இந்த இக்கட்டிலிருந்து ஓரளவிற்குத் தப்பிக்க முடிந்தது...

ஆனால் விஜி...

சின்னஞ்சிறு வயசு முதல்... ராஜாவைத் தானே, தனது வருங்காலக் கணவனாக மனசுக்குள் உருப்போட்டு வைத்திருக்கிறாள். திடீரென 'அவனை மற' – என்றால் எப்படி... எப்படி...

எட்டு வயசு ராஜாவுக்காக – அவன் அப்பாவிடம் வாங்கும் அடிகளுக்காக இரண்டு வயசு விஜி, விசும்பி விசும்பி அழுதிருக்கிறாள்...

பனிரெண்டு வயசு ராஜாவுக்காக – ஆறு வயசு விஜி அவன் செய்த விஷமங்களைத்தான் செய்ததாகச் சொல்லிப் பரந்தாமனின் முன் தலைகுனிந்து நின்றிருக்கிறாள்....

பதினாறு வயது ராஜாவுக்கு – எட்டுவயசு விஜி, பூட்சுக்கு பாலிஷ் போட்டுத் தந்திருக்கிறாள்.

அவனது சட்டைத் துணிமணிகளை துவைத்து சாயத் துவைத்து உலர்த்தி, இஸ்திரிப் போட்டு வைப்பது முதல் – அவன் பரீட்சை ஒழுங்காக எழுத வேண்டுமெனப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பது வரை...

இந்த ராஜாவுக்காக, இவன் முகத்தையும், சிரிப்பையும் மட்டுமே தன் வாழ்க்கையின் சீவரசமாக நினைத்து வளர வருபவள்– எப்படி தனது எண்ணத்தை மாற்றிக் கொள்வாள்...

மீனாட்சி, தரகர் கொண்டு வந்து தந்த உமாவின் புகைப் படத்தை, மௌனமாக விஜியின் பக்கம் நீட்டிய பொழுது.... அவள், ராஜாவின் துவைத்து உலர்த்திய துணிகளைச் சுருக்கம் போக நீவி மடித்துக் கொண்டிருந்தாள்...

புகைப்படத்தைக் கையில் வாங்கியபோது, விழிகளில் தெரிந்த ஆச்சரியம் – மாமியின் சாடைப் பேச்சில் பதற்றமாக மாற...

பேசிய அகன்ற விழிகளில் ஆயிரம் கேள்விகள்...

''ஏன்... ஏன் மாமி... என்னை அவருக்குப் பிடிக்கலையாமா...'

திருமுல்லைவாயிலில் (தொண்டை நாடு) சுவாமிக்கு வெந்நீரில்தான் அபிஷேகம் செய்கிறார்கள்.

–கமலவேணி தளபதி.

'ஐயய்யோ, அப்ப என் கதி...'

'என்னால வேற ஒருத்தரை நினைக்கப் பார்க்கக் கூட முடியாதே மாமி....'

இத்தனையும் அந்த அடர்த்த கண்களில்..

துக்கம் தொண்டைக் குழியில் பந்தாக அடைக்க, சத்தமிட்டு விம்மினாள் அந்தப் பெண்.

மீனாட்சியும், பரந்தாமனும் அவளது பார்வையே நெருப்பாய்ச் சுடுவது போல....

–தவித்துப் போனார்கள்.

ராஜாவின் கல்யாணத்திற்காக, அவளுக்குச் சாண் அகலச் சரிகைக் கரைபோட்ட நீல நிறப் பட்டுப் புடவை...

ஆனால் அவள் எதிர்பார்த்தது அதுவல்லவே...

அவர்களின் குடும்ப சம்பிரதாயப்படி, மணப்பெண் உடுத்தும் மஞ்சளில் நனைந்த நூல் புடவையை அல்லவா...

உமாவின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்ட ராஜா, நாத்தி முடிச்சை விஜிதான் போட வேண்டுமென்று சொன்னான்.

ஆனால்–

சமயம் பார்த்து மாடிப் பக்கம் நழுவி விட்ட விஜி, முகூர்த்தம் முடிந்த பிறகு தானே – கீழே இறங்கி வந்தாள்.

''இத்தனை நேரம் எங்கே போயிட்டே விஜி...''

மீனாட்சியின் கேள்விக்குப் புன்னகையைப் பதிலாக அளித்து விட்டுத் தலை குனிந்தாள் அவள்.

''இந்தப் பொண்ணு மனசுல எத்தனை வருத்தம் இருக்கோ... 'சட்டுபுட்'டுனு ஒரு நல்ல இடமாப் பார்த்துக் கட்டிக் கொடுத்திடணும்...''

பாவம் மீனாட்சி, தான் பார்த்து முடிக்கும் வரனுக்கு விஜி கழுத்தை நீட்டுவாள் என்கிற நம்பிக்கையில், கணவனிடம் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் இவை...

ஆனால்...

கல்யாணச் சத்திரத்தின், மேல் பகுதியில் முகூர்த்தம் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில்... மாப்பிள்ளை வீட்டாருக்காக ஒதுக்கப்பட்டிருந்த மாடிப் பகுதியில், அறை ஒன்றில் புகுந்து, கதவைத்தாளிட்டுக் கொண்ட விஜி, தன் மடியில் அது நேரம் வரையில் பத்திரப் படுத்தி வைத்திருந்த ராஜாவின் புகைப்படத்தை எடுத்து, தன்னெதிரில் வைத்துக் கொண்டு...

கண்ணீர் மல்க, அதைப் பார்த்தபடியே மஞ்சள் இழைந்து முடித்த சரடு ஒன்றை, தன் கழுத்தில் தானே கட்டிக் கொண்டாள்.

அன்று முதல் – இன்று வரை...

அந்தக் கயிறு, மற்றவர்கள் கண்களில் படாதிருக்க, அவள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அநேகம்...

மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் தனது ரவிக்கைகளின் வட்டக் கழுத்துப் பகுதியை மாற்றி, புதுசாய்த் தைத்துக் கொண்ட ரவிக்கைகளை, கழுத்தை ஒட்டினாற்போல, நீள் வட்டமாய் மாற்றித் தைத்துக்கொண்டாள்.......

அதுபற்றிக்கூட அவளுக்குக் கவலைதரும் வலியானதொரு பிரச்சினை இல்லை...

உமா — ராஜாவின் முதலிரவன்று சாமி படத்தின் முன் கொஞ்சநேரம் நின்றவள் பிருந்தாவின் கட்டிலுக்குப் பக்கத்தில் தரையில் பாய் விரித்துப் படுத்துக் கொண்டாள்.

"என்னடியிது... இப்படி என் பக்கத்துல கட்டில்லே வந்து படேன்..."

'வேண்டாம், இதுலே சௌகர்யம்' என்பது போல பிருந்தாவின் கேள்விக்குச் சின்ன மறுதலிப்பு.

"அதுவும் உங்க மருமகளுக்குப் பிடிவாதம் ரொம்பத்தான். உங்களைப் போலவே."

பிருந்தா, பாத்திமாவிடம் முறையிட்டாள்.

அதுவும்...

மறுநாள் காலையில், உமா அவளது காலில் விழுந்து வணங்கிய போது....

அவள் சற்றும் எதிர்பாராத விதமாய் விழியும், கண்ணிருந்தோ துடைத்து அவளது பாதத்தில் விழுந்து வணங்க....

"இது என்னது... என்னிக்குமில்லாத கூத்து..."

பிருந்தா வியப்புடன் விழிகளைப் பார்த்துச் சிரித்தாலும், மனம் நிறைந்து உமாவை வாழ்த்தத் தவறவில்லை.

"உன்னோட சாமர்த்தியத்துக்கும் அழகுக்கும், மகாராஜா மாதிரி புருஷன் வாய்க்கணும்மா..."

'எனக்கு வேறெதுக்கு ராஜாவே போதும் மாமி...'

பேசவியலாத விழியின் உள்ளத்துள் எழுந்த அடங்கிய பதில் இது..

உமாவின் வருகைக்குப் பிறகு—விழி, மெள்ள மெள்ள ராஜாவிற்குச் சாப்பாடு பரிமாறுவதையும், துணி துவைத்துக் கொடுப்பதையும், புட்டிக்குப் பால் கொடுப்பதையும் குறைத்துக் கொண்டாளே தவிர...

முற்றிலுமாய் உதற முடியவில்லை...

மனம் ஒப்பவில்லை. சமையலுக்கும் சாப்பாட்டுக் கடைக்கும் ஓடுவாள்...

அங்கே—

உமா, ராஜாவுக்கான சாப்பாட்டு வேளையின் தட்டுப் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டதும் 'பொசுக்'கென்று கண்ணீர் அரும்ப அடுப்படிப் பக்கம் தனித்துப் போய் நிற்பாள்...

"என்ன விழி... நீயும் சாப்பிட வாயேன்..."

ராஜாவின் முரட்டுக் குரலும் மீறி நிறையும் அன்பு..

'இல்லை...'

அவள் தலையை வேகமாய் அசைத்தபடி, அவர்கள் பார்க்காத வண்ணம் விழிநீரைச் சுண்டியெறிவாள்...

இதை உமா அறிந்திருப்பதை விடவும், அவளுக்கு ராஜாவை அதிகமாய்த் தெரியும்..

அப்பேர்ப்பட்ட அவனது ராஜா—ஒரு கொலை செய்யும் அளவுக்குத் துணிவானவனா அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை...

டாக்டரின் முகத்தில் கொந்தளிக்கும் கோபமும், மாமியின் அழுகைகளையும் விட— உமா, தனது செல்லமாய் அவளை அறி



"என்ன ஆச்சரியமா இருக்கு? எங்க வீட்டுக்காரரு ஒரு விஷயம் எடுத்துருக்கா."

"அதென்ன பேர் இருக்குமோடா."

"நான் கொடுத்ததை 'தன்னி' என பேரைச் சொல்லாம விட்டுட்டேன்."

—கோ. அ. கதிர்வேல்.

கிருக்க கொஞ்சமே விழியை நிமிருவனச் செய்கிறது...

"இவ வயிற்றுல குழந்தை வளர்ந்திருக்க சமயத்துல தானே, இவள் போல இந்தக் கொடிய பழி வருமே...."

அவள் நிமிர்ந்தபோது நின்ற அதே சொத்தில் இன்ஸ்பெக்டர் உமாவை அழைத்து விசாரிக்கத் துவங்குகிறார்:

"இவளுக்கு சாயந்திரம் சினிமாவுக்குப் போகணும்னு உங்க அம்மாவெல்லாம் கூடக் கிட்டச் சொன்னீங்களா...."

"ஆ.. இல்லியே..."

"அவரோட ஆபீஸ் பேனா, ஒரு வாரமா டைரக்டர் சினிமா டிக்கட் இருக்கு... இதை யார் வாங்க விட்ட கேட்கிறேன்... போன் பண்ணப்போ... ராஜாவோ சினிமாவுக்குப் போகணும்னு நினைச்சிருக்கார்—இப்போ நீங்க முதலாளி மகளை அழைக்க போய் இருந்தார்.. அது நிஜமாயிருந்தால்... கொல்லவும்—தான் 'போலிஸ்டேஷன்' கொண்டு போனார்... இதே ஒரு ஆபீஸர் துணை, கண்டிப்புடன், ஒரு கணக்கப்புள்ளை வயித்தல மீறி அடிச்சதியை இதுக்குள்ளயும்... அப்போ ஏதாவது நடந்திருந்தா—உங்க கணவருக்குக் கொடுக்கக் கூட தண்டனையை ஜாமீனுக்குக் குறைக்கலாம்..."

உமா, கண்கள் குளமாக அவள் மைதீரும் சினிமா டிக்கெட்டுகளையே வெறித்துப் பார்க்கிறாள்...

'சாயந்திரம் வெளியே கிளம்பத் தயாரா இருக்கச் சொன்னீங்களே... சினிமாவுக்கு அழைச்சுப் போகவா... அப்ப நேரே வீட்டுக்கு வராம... ஏன் அந்த ஆள் கிட்ட போனீங்க...'

அவள், பிரமித்து நிற்கையிலேயே, கார் புறப்பாய் சத்தமாக இன்ஸ்பெக்டர் முன் குனிந்து, ஜீப்பில் போட்டபடி நிற்கிறான்.

விழி, மருவங்கள் முழுக்க அவனையே பார்த்துப் பார்க்கிறாள்.

'இவன் என்ன உண்மைப் போலிருக்கே... தெய்வமே...'

(தொடரும்)

இன்னும் சிறிது நேரத்தில், தாங்க முடியாத அளவுக்கு அதிர்ச்சி தரக் கூடிய செயல் ஒன்று நிகழப் போகிறது என்பதையோ, அதனால் தன் குடும்ப வாழ்வில் ஒரு முக்கிய திருப்பம் ஏற்படப் போகிறது என்பதையோ அறியாத ஆனந்தன், காலை நேரத்தில் பதினொரு மணி அளவில் கட்டிலில் படுத்துக் கொண்டு ஒரு மாதத்திற்கு முன்னால் தனக்கு நேர்ந்ததை நினைத்துக் கொண்டிருந்தான்.

அவன் விழிகளின் ஓரங்களில் நீர் கசிந்து வழியக் காத்திருந்தது.

இரண்டாவது முறையாகவும் அவன் ஏமாந்து போய் விட்டான்.

குழந்தை விஷயத்தில்தான்!

கல்யாணமாகி முதல் முறை கர்ப்பமுற்ற போது, அவன் வீட்டிலும், மாமனார் வீட்டிலும் பெரு ஆவலாய் ஒரு பேரனை எதிர் பார்த்தனர். ஏனென்றால் அவன் தங்கை சத்தியபாமாவுக்கு அவள் ஒரே பெண் குழந்தை. ஆண் வாரிசே இல்லை. மகளுக்காவது ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்பது அவரின் தணியாத ஆசை! மாமனார் ராஜகோபாலனும் கோவைப்புதூரில் பெரிய பணக்காரர். அவருடைய ஒரே மருமகன் ஆனந்தன். ஆனந்தன் ஒரே ஆண்பிள்ளை அவருக்கு. மூத்தது இரண்டும் பெண்கள். கடைக்குட்டியும் பெண்தான். மகளுக்கு ஆண் குழந்தைதான் பிறக்க வேண்டும். தம் சொத்துக்களுக்கு வாரிசு வேண்டும் என்பது அவரின் ஏக்கம்.

எல்லோரும் கருணா கர்ப்பமானதும் அளவில்லாமல் சந்தோஷப்பட்டார்கள். ஆனால் எல்லோரின் நெருக்கடியும் இடி போல விழுந்தது. முதல் முறை அவன் ஆசை பொய்யாகி விட்டது. வயிற்றில் வளர்ந்திருப்பது வெறும் சதைக் கட்டி என்று ஆபரேஷன் நடந்தது. அடுத்த வருஷம் தாயானாள். கட்டாயது மாதத்திலேயே அருமையான வலி!

சிசேரியன் கேஸ் என்று சொல்லிவிட்டாள், மகப்பேற்றில் பெயர் பெற்ற டாக்டர் முத்துலெட்சுமி. குழந்தை இறந்தே பிறந்தது! தாய் பிழைத்ததே பெரும்பாடு! இன்னொரு தாய்மையை இவளால் தாங்கவே முடியாது... கர்ப்பப்பை அதற்குத் தகுதியானதாகவும் இருக்கவில்லை என்று சொன்னாள் டாக்டர் திட்டவட்டமாக.

அது கருணாவுடைய மனதிலும் நிலை அடைந்தது.

இரண்டாவது முறையாகவும் அவன் ஏமாந்து போய் விட்டான். இனிமேல் அவள் தாயாக முடியாது! மனைவி இருந்து மனைவியோ வாடி உதிர்ந்து போகிற வெறும் மலராகி விட்டாள்!

"சார் போஸ்ட்!"

வாசலில் தபால்காரரின் வழக்கமான குரல். அரை மயக்கமாய்ப் படுத்திருந்தவன் விழித்தெழுந்து நடந்து கொண்டு வாசலுக்கு வந்தான்.

ஒரு மஞ்சள் உறையைக் கொடுத்துவிட்டுத் தபால்காரர் பறந்தார்.

அவன் பெயருக்கு வந்திருந்தது. அனுப்பியது யாரென்று திருப்பிப் பார்த்தான். ஆ. ஜெயராஜ், எம். ஏ., 30, வசந்த நகர், முதல் தெரு, மதுரை-3 என்றிருந்தது. தன் பெயருக்கு வந்த கடிதம் என்றாலும் இந்தப் பெயரை அவன் இதற்கு முன் பார்த்ததாக ஞாபகம் இல்லை.

உள்ளே வந்ததும் கடிதத்தை அவன் பிரித்தான். முழு வெள்ளைத்தாள் இரண்டு. அதில் மூன்று பக்கங்கள் முழுக்க எழுதப்பட்டிருந்தது. மனதில் ஆவலும் படபடப்பும், காரணம் புரியாமல் ஒரு தவிப்பும் எழுந்து அவனை அவசரமாய்ப் படிக்கத் தூண்டியது.

அன்புள்ள நண்பன்

ஆனந்தனுக்கு,

கல்யாணமானவுடன் என்னை மறந்துவிட்டாயோ என்று நினைத்திருந்தேன். மறக்கவில்லை என்று உன் கடிதம். உனக்குக் குழந்தை பாக்கியம் இல்லை என்று வருத்தப்பட்டு உன் மனைவிக்கு நடந்ததைப் பற்றி எழுதியிருப்பது மிகவும் வருத்தம் அளிக்கிறது. எப்படி உனக்கு ஆறுதல் சொல்வதென்று எனக்கும் புரியவில்லை. ராஜம்மாவுக்கு நீ செய்த துரோகம்தான் உன்னை இப்படித் தண்டித்திருக்கிறது என்றும் அன்னையும் அவளிடம் வளர்கிற உன் மகனையும் பார்க்க வேண்

டும் என்றும் எழுதியிருக்கிறாய். இப்போதாவது ராஜம்மாவின் குழந்தையை உன் குழந்தை என்று நம்பிக் கொண்டாயே!

போன மாதம் அவளையும் அவள் குழந்தையோடு திருச்சியிலுள்ள கோயிலில் பார்த்தேன். நல்லவேளை. ஒரு நாளைக்கு மூன்று ரூபாய் சம்பளத்தில் வேலை பார்க்கிறாள் என்றாள். உன் நினைவாக ஒரு மஞ்சள் கயிற்றைத் தாலியாகக் கழுத்தில் கட்டியிருக்கிறாள். கண்களில் நிரந்தரமான கவலையோடு ரொம்பவும் மெலிந்து இருக்கிறாள். உன்னைப் பற்றி ஆர்வமாய் விசாரித்தாள். 'கல்யாணத்துக்குப் பிறகு என்னை மறந்து விட்டான்' என்றாள். ''அவருக்குத் தன் மானமும் மதிப்பும் எப்படி ரொம்பக் கவலை எல்லாமே'' என்று சோகமாய்ச் சிரித்தாள். அவனுக்கு அவள் கொடுத்த முகவரியை இதோ கொடுத்திருக்கிறேன்.

நீ விரும்பினால் உன் குழந்தையை மட்டும் உன்னிடம் விடுவதற்குச் சம்மதிப்பாள் என்று என்னால் நினைக்க முடியவில்லை. புறப்பட்டு வா... நேரில் பேசலாம்.

அன்புடன்,
மு. ஜெயராஜ்.

தலையில் யாரோ சம்மட்டியால் ஓங்கி அடித்ததைப் போல உணர்ந்தான் சுகுமார்.

தன் கணவன் ஒரு பெண்ணை கெடுத்து ஏமாற்றியதை நினைத்துப் பார்க்கவே அவள் நெஞ்சம் நடுங்கியது. தன் கணவன் மூலம் அவளுக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்பதை அறிந்ததும் அவளையும் அந்தக் குழந்தையையும் பார்க்க வேண்டும் என்று தன் ஆவலைத்தையும் மீறி ஆசைப்பட்டாள்.

போன வாரம் கணவன் தன்னிடம் ஓர் ஏழைக் குடும்பத்துப் பையன் நண்பன் மதுரையில் இருக்கிறான் என்றும், அவனைத் தேடி எடுத்துக் கொள்ள வில்லை என்றும் சொன்னது இப்போது நினைவுக்கு வந்தது.



ஜானகிமகன்

பொருந்திடத் தான் பிரிட்டானியா மாரி!

பிரிட்டானியா

மாரி

பிஸ்கட்

காப்பி நேரச் சுவை-தின்பண்டம்

LINTAS BN/MARE 7 2013 TM

அருள்வாக்கு

தியானம், ஜபம், பூஜை, மற்றும் க்ஷேத்திராடனம் ஆகியவற்றைப் போலவே நம் தேசத்தில் நீண்ட காலமாக பஜனை நாமாவளிகளைக் கோஷ்டியாகப் பாடி பஜனை செய்கிற பழக்கமும் இருந்து வந்திருக்கிறது. இந்த ஜீவாத்மாவானது பரமாத்மா வுடன் தொடர்பு கொள்வதற்கு ஒரு பெரிய உபாயமாக நாம பஜனை தொன்று தொட்டு தேசத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. அநேகமாக கிராமம், நகரம், எல்லாவற்றிலும் பஜனை மடம் அல்லது பஜனைக் கூடம் என்கிற ஒன்று காணப்படுவதிலிருந்து பஜனை பக்தி நம் நாட்டில் எவ்வளவு செழிப்பாக இருந்திருக்கிறது என்று அறியலாம். இந்தப் பஜனை மடங்களில் சனிக்கிழமை தோறும் ஏகாதசி தோறும் அன்பர்கள் எல்லோரும் சேர்ந்து பஜனை செய்வார்கள்.

கோயில்களில் பூஜையைப் பார்க்கிறோம். தெய்வத்தை தியானிக்கிறோம். பஜனையிலோ நாமே வாய் விட்டுத் தெய்வத்தின் நாமங்களையும், குணங்களையும், லீலைகளையும் பாடி எல்லோருமாக மனதை ஈடுபடுத்துகிறோம். பலர் சேர்ந்துகொண்டு சமுதாய வாழ்க்கை அடிப்படையில் பக்தி செய்கிற சிறப்பு பஜனைக்கு உண்டு. அவரவரும் ஆத்ம க்ஷேமத்தை அடைந்து, அதனுடனேயே ஜீவலோக க்ஷேமத்தைத் தர வேண்டும் என்று தனி மனிதர் அடிப்படையிலேயே (Individual basis) நம்முடைய மதம் முக்கியமாக அமைந்திருந்தாலும் கோயில், உத்ஸவம், பஜனை இவற்றில் கூட்டு வழிபாட்டு முறை (Congregational worship)யும் இருக்கிறது.

— ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

''பழசக் கிளறுகிற ராஜம்... கொழுந்தனை ஆனந்தனோட அனுப்பச் சம்மதமா?''

''புள்ளைய மட்டும் ஏத்துக்கிட்டா எப்படி! என்னோ வீசாய வீசுவதாறு? புள்ளை மட்டும் தனக்குப் பொறந்ததுன்னு ஞானம் வந்தப்புறம் அந்தப் புள்ளையப் பெத்தவ தன்னோட சொத்துன்னு தோணலையா? இல்லே தெரிஞ்சும் ஏத்துக்கத் தைரியம் வரலையா?''

அவளிடம் பொங்கிய கண்ணீரைப் போலவே வார்த்தைகளும் சீறிக் கிளம்பின. ஆனந்தன் பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்திருந்தான்.

கட்டின பெண்டாட்டி, உறவுக்காரங்க சம்மதத்தோட என்னைக் கேட்டிருந்தா, இன்னிக்கு ஆயிரம் சுப்பராயன் கணக்கா... ஏத்துக்கலே ஒரு கடனை மாத்து நான் பட்ட கஷ்டம் ஏழேழு ஜென்மத்துக்கும் போதும்... இதுக்கு சம்மதிச்சு என்னோட பொண்ணு... இல்லேன்னு இப்படியே காலம் கடத்திடறேன்!''

இந்தச் சொல்லி முடிக்கும் முன்னே அழுகை பொங்கிவரக் கண்ணில் சாய்ந்து ராஜம் குமுறிக் குமுறி அழுதாள்.

ஜெயராஜ் ஆனந்தனைப் பார்த்தான். ஆனந்தன் ஒன்றும் பேச முடியாதவனாய்த் தலைகுனிந்திருந்தான்.

''என்ன பதில் சொல்ல முடியலியா?''

இடையே என்று, சுகுணாவின் குரல் வாசல் பக்கமிருந்து வந்ததும் திடுக்கிட்டுத் திரும்பினான் ஆனந்தன். அவன் மனைவி சுகுணாவே தான் உள்ளே நுழைந்தாள். அழுகிற ராஜத்தின் அருகில் சென்று அவளைத் தழுவித் துடைத்தாள்.

''ஆண் வாரிசுக்கோட கைகளுக்கு ஒரு கருவியா பயன்படுத்திக்கிறதுக்கு மட்டும் தான் பெண் வர்க்கமது ஜென்மிக்கிறது இன்னிவரைக்கும் விட்டுடுங்க... இவளைக் கல்யாணம் கட்டிக்கிட்டீங்க... இவ்வீட்டிலிருந்து இவ நம்ம வீட்டு நம்மோடதான் இருப்பா... என் அக்காவா இருக்கட்டும்... எனக்குக் குழந்தை இல்லேங்கிறதுக்காக நான் இப்படி முடிவு செய்யலே... குழந்தை மட்டும் வேணும், அதன் தாய் வேணும்னு நீங்க சொல்ற மாதிரி நானும் கூறத் தயாரா இல்லே!'' என்று சுகுணா, அப்போது உள்ளே வந்த தன் பெற்றோரையும், மாமனாரையும் பார்த்து. ''இதுக்கு நீங்க சம்மதிக்கிறீங்களா? இல்லையா?'' என்று கேட்டாள்.

அவர்கள் எல்லோருமே மௌனமாய்த் திகைத்துப் போயிருந்தார்கள்.

''நீங்க சம்மதம் தெரிவிக்கலேன்னு நானும் ராஜத்தோடயே சேர்ந்து இருக்கிறதா முடிவு பண்ணிட்டேன்...!''

சுகுணா இப்படிச் சொன்னதும் ராஜம் கூட்ட உள்ளோருமே அதிர்ந்துபோனார்கள். எல்லோரும் ஒரே குரலில் கோரஸாய் 'சம்மதிக்கிறோம்' என்று சொன்னார்கள். ஆனந்தனின் கையிலிருந்த ராஜத்தின் குழந்தை ராஜாவை எடுத்து ஆனந்த முத்தம் இட்டாள். ராஜத்தின் முகத்தில் சந்தோஷம் புதிய சூரியனின் முதல் கதிரைப் போல படர்ந்தது.

இரு உயிர்கள் உங்களைச் சார்ந்திருக்கும்போது ஒன்றை நீங்கள் இன்ஷ்யூர் செய்வது அவசியம்—உங்களை.

உங்கள் குடும்பம் பாதுகாப்பிற்கும்,
ஆதரவிற்கும் உங்களை எதிர்பார்த்திருக்கிறது.
ஒரு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிசி வாங்கி
உங்கள் குடும்பத்திற்குத் தேவையான
கணிசமான சேமிப்பை உருவாக்குங்கள்.

பாலிசி அமுலில் இருக்கும்போது,
ஒரே ஒரு பிரீமியம்தான்
கட்டியிருந்தாலும், இறப்பு ஏற்பட்டால்
உங்கள் குடும்பம் முழு காப்பீட்டுத்
தொகையையும் அடைய
உரிமை கொண்டது.
இத்தகைய முழு பாதுகாப்பு
எல்ஐசி ஒன்றிடம்தான் கிடைக்கிறது.
வேறு எந்த தனியார் சேமிப்பு அல்லது
முதலீட்டுத் திட்டங்களிலும்
இத்தகைய முழு பாதுகாப்பு கிடைக்காது.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிசி
மற்ற சேமிப்புத் திட்டங்களைக் காட்டிலும்
பலவித மேம்பாடுகள் கொண்டது
என்பதை உங்கள் எல்ஐசி முகவர்
விளக்குவார். உங்கள் குடும்பத்
தேவைகளைப் பூர்த்தி செய்யக்
கூடியதான பாலிசியை நீங்கள்
தேர்ந்தெடுக்க அவர் உதவுவார்.
இன்றே உங்கள் முகவரைக் கலந்து
ஆலோசியுங்கள். அல்லது
அருகிலுள்ள எல்ஐசி அலுவலகத்தை
அணுகுங்கள்.

நாளைய பாதுகாப்பிற்கு இன்றே இன்ஷ்யூர் செய்யுங்கள்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா

Radeus LIC 14-83

13

ஆஸ்பத்திரியின் கடை திறந்து 'காலியர்' இருக்கிற ஒரு புது வண்டியோடு ஆஸ்பத்திரிக்குப் போனான் மாலி, அரவிந்தை அழைத்து வர. வழியில் காரில் போகும்போது யார் யாரோ அவனை வணக்கம் சொல்லுவதைப் பார்த்திருந்தான். இவர் மரியாதைக்குச் சிரித்தார்கள். கையும் உடலும் அசிங்கக் கோலத்தில் மாறிப் பழகுவது இயல்பில்லை. மனை கொஞ்சம் விடைபெற்றுக் கொண்டு அவரிடம் போனேன்.

'நீங்களும் வீட்டுக்குப் போய் ஓய்வு எடுங்கள்'.

நேற்று இரவு அந்த மறியலோடு சம்பந்தப்பட்ட எல்லாம் கட்டுப்பாடாக இப்போது வெளிப்படையாகப் பட்டது. அந்த வாழ்வு விழுந்து விட்டது.

அவள் சொன்னதில் உண்மை இல்லாமல் இல்லை. அந்த உண்மையின் பலம் தான் வித்தியாசம். பத்தில் ஒரு பங்கா? நூற்றில் ஒரு பங்கா?

விடுதலையும் உத்தியோகமும் என்ன? உண்மை உண்மைதான்.

இதோ கைதாக்குகிறார்கள்... புள்ளியைச் செய்கிறார்கள் இத்தனை பேருக்கும் என்ன பிரியமா? நாளைக்கு என் கதையை விலைக்கு வாங்கி முடித்து விட்டால் இவர்கள் பதறிக் கொடுத்து விடுவார்களோ! என் மனம் இன்னிக்கு விட்டுவிடுமா, என் கோபம் இப்படித்தான் மனம் குமுறியது. அப்படி நடந்து விட்டால் இவர்களில் எத்தனை பேர் உண்மையாக ஒரு கணம் என்னைக் குறித்து வருந்துவார்கள்?

என் பயத்தின் மீதும் கோபத்தின் மீதும் இவர்களுக்கு இருக்கிற பயத்திலிருந்து அப்பாடா என்று மீண்டு விடுவார்கள். நாளையிலிருந்து இப்படி ஒருவனுக்குள்ளே தூக்கி அடக்கி இரிப்பு சிரிக்க வேண்டிய கஷ்டம் இல்லை என்று நிம்மதி அடைவார்கள்!

என்றார்...

எங்கேயோ குறி வைத்து எய்யாத இலக்கில் அடித்து விட்டான் என்ன!

மனை விலகித்திடம் போய் மணியிடம் திரும்பியது.

'ஏன், அவள் நேற்று வந்து எச்சரித்து விட்டுப் போனாள்? மெய்யாகவே அவள் தெரிந்து விட்டாளா... இல்லை குடிவெறியில் வந்து சொன்னாளா? காட்டு மிருகம் என்று அவளைப் பற்றிக் கொண்டிருந்த நினைப்பில் நேற்று ஒரு மாற்றம் வந்துவிட்டது!



மாற்றம் அவனிடம் மட்டுமா? தன்னிடம் கூடத்தான். என்னவைப் பார்த்த பிறகு அவனிடம் பேசி, அவன் கட்டிக் காட்டிய முறை ஒன்று தன்னிடம் உறுத்திய பிறகு தான் கூட மாறி விட்டோம்.

இருபத்து ஆறு வயசுக்குள் எத்தனை பெண்கள் தன்னைக் கடந்து போனார்கள்? கைதொட்டால் விழுந்து விடத் தயாராக இருந்த பெண்கள்... ஜன்னலில் நாடக சினிமா வந்த போது இருபது நாள் இங்கே வந்து தங்கிய அந்த நடிகை ரம்பா... ஸ்னோலைன் சசமாயுஜன் தன்னை அவன் வலையில் விழுந்து விடவேண்டும்! இருப்பத் தாரில் அந்த ஹோட்டலின் வாசலின் ஸ்டோர் பார்ட் கடைகளாகில் ஆசைதாயகி சந்திரா வுக்குத் தன் மீது ஒரு மயக்கம். நல்லவர்கள், பவிசுமானவர்கள்... யாருக்குமே ஏன் அந்தச் சக்தி வரவில்லை? தன்னைப் பிடித்து திறந்த ஓர் அடிபடி வொடுத்துத் தன்னை வென்று விடும் அந்த சக்தி என்னுக்கு மட்டும் ஏன் இருந்தது?

புரியவில்லை.

பாகனின் கருத்த கொடுகை சாபர்ட்டில் தான் அடிக்கடி சொல்வார்!

''ஒரு ஆம்பிள்ளைக்கு அவளுக்குன்னே படைக்கப்பட்ட மாதிரி ஒரு பொண்ணு கவ்விடோ இருக்கா... அவதான் அவனுக்குச் சரியான ஜோடி! நீ சந்தமா இந்தியாளு கண்டுபிடிக்கணுமே!''

ஏன் தான் 'சுத்தமாக' இருந்தோமா! அத்தனை பெண்கள் தன்னைக் கடந்து போன போது எது தன்னை தடுமாறும்படி வைத்திருந்தது...?

காரி மறுபடியும் டிக்கெட் கலெக்டருக்குக் கை உயர்த்திக் கொண்டே போகிறவனை காக்கியே மிதித்தான்.

அந்தக் கேள்வி அவனுக்கே புதுமையாக இருந்தது. அதற்கான பதில் பொசிக்காமலேயே, அப்படி ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டவனே வேறு இப்பாதத் தான் ஒரு வைராக்கியத்தோடு வாழ்ந்து வந்திருப்பதை எண்ணிப் பார்த்தான்.

ஏன்?

விட்டென்று அவனுக்கு ஜெயா முகம் ஞாபகம் வந்தது.

காலையில் அவள் பக்கெட்டுடன் தண்ணீர் கொண்டு வந்து வைத்தாள். வழக்கம்போல டீ கொடுத்தாள். புயல் பரிமாறினாள். அதில் விந்தையாகம் தெரிந்தது. தனக்கும் அவளுக்கும் மத்தியில் ஒரு கவர் எழுந்த நினைப்பு மாறிவிட்டது. அது ஏதோ ஒரு புதுமையான வெறுமை. திருமுறை அவளை ஏறிட்டுப் பார்த்தான். அந்த முகம் வேறு மாதிரி இருந்தது. அதே ஒத்த குளம்போல் அதில் ஓர் அமைதி.

ஜெயா...

ஆம்... ஜெயாவுக்காகத்தான் அப்படிக் கட்டுப்பாடாக இருந்து வந்திருக்கிறேன். ஜெயாவுக்குக் கல்யாணம் செய்யும்... ஜெயா முடிய வைத்தை அறுபடைக்குள் வைத்து அது வேண்டாம். நிறுத்தை மாசவும் வேண்டாம். தானு போதிய அளவு கம்பு பேசி பேழியத மனிதனுக் இருந்து விடுமோவ தான் காத்து விடக் கூடாது.

இதுதான் அந்த வைராக்கியத்தின் உள் நோக்கம்.

பெண்கள் புன்னகை செய்கபோது—

பெண்கள் கண்ணில் விருப்பத்தின் அழைப்பும் பிரியத்தின் ஜுவாலையும் மாறி மாறி வெளிப்பட்ட போது—

ஒரு பெண்ணின் உடம்பு எல்லையில்லை கொண்டு அவனைத் தொட்டு அந்த சுகத்தின் போதை வெறியை அவனுக்கு உணர்த்த முயன்றபோது—

ஜெயாவின் ஞாபகம் ஒரு திரை மாதிரி அவனைக் காத்திருக்கிறது. அவனை எச்சரித்திருக்கிறது. பாதுகாத்திருக்கிறது. அவற்றை மாசக் கடந்து போக வைத்திருக்கிறது.

நீர் சம்பந்தங்களைக் காத்திருக்கவில்லை. ஜெயாவிடமும் பொறுப்போடு இருக்கிறேன் இருக்கும்.

கடைசியில் அந்த ஜெயாவிடம் இப்படி ஒரு விந்து மூடுந்து மரமாக தங்கி வளர்ந்திருக்கிறது! அது எப்படி நடந்தது! எந்த சமையலில்... எந்த நாளில் அந்த விந்து விழுந்திருக்கும்...

காலையின் இந்தப் பக்கத்தைப் பாராமல் படிக்க முயன்ற ஒரு டிரைவரைக் காரி ஜாக்கின் மணியை அடித்தான். அவன் திரும்பிப் பார்த்து முறைத்தான்.

அப்படி ஒரு நினைவில் விந்து அவள் மனதில் விழுந்த நாளிலேயே தெரிந்திருந்தால் தான் என்ன செய்திருப்போம்? அந்த விதையை நசுக்கியிருப்போமா? அல்லது அவளுக்குள் வளர்ந்திருக்கிற அந்தப்பாசத்தை வேறு மாதிரியாக மாற்றிக் கொண்டிருப்போமா?

தெரியவில்லை.

இவ்வளவு தூரம் காப்பாற்றி வைத்திருந்த அந்தப் பொறுப்பு வார்த்தை இப்போது தளர்ந்து விட்டது. அதற்கு ஸ்பார்டான் போனதற்குக் காரணமோ? ...

வைரவன்

இருக்கவே இருக்காது!

ஆனால் உண்மை. விலைவாசி ஜுரம் போல ஏறும் இந்த நாள்லே
நியூட்ரமுல் 7 ரூபா விலை குறைஞ்சிருக்கு.

எதை விட?

மலைபோல விலையேறிக் கிடக்கும் இதர மால்ட்-கோக்கோ பானங்களை
விடன்னு சொன்னா போதாதா? பேரை வேற சொல்லணுமா?

அப்படியும் ISI தரமா?

ஆமாங்க, வேற எந்த கோக்கோ பானத்துக்கும் தரத்துக்கான
இந்த ISI முத்திரை கிடையாது.

அடேயப்பா! ஆனால் எப்படி?

விளம்பர-விற்பனைச் செலவுகளிலே சிக்கனம், புதிய உற்பத்தி உத்திகள்...
எல்லா சேமிப்பு லாபமும் உங்களைத்தான் சேருது.

அபாரம்!

இந்திய கூட்டுறவுங்களால என்னவெல்லாம் சாதிக்க முடியுது
பார்த்தீங்களா? லாபமே குறியா இருக்கற வெளிநாட்டுக் கூட்டுங்க
செய்வாங்களா? செய்யத்தான் முடியுமா?

நியூட்ரமுல்	ரூ. 13.34
போர்ன்விடா	ரூ. 20.48
மால்டோவா	ரூ. 19.70
பூஸ்ட்	ரூ. 20.70

ஜூலை '83 விலைப்படி, 500 கி. [illegible]

அமுல் படைப்பு

நியூட்ரமுல்

daCunha/GCM/99/83/ TM



துள்ளார். ● [illegible] அடுத்து ஒரு படம் கூட வெளிவரவில்லை. பாவம்! ● [illegible] பெயரைச் சூட்டியுள்ளார். [illegible] ● [illegible] படத்தில்! ● [illegible] ● [illegible] ● [illegible] ஒரு [illegible]. முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் [illegible] படத்தில் நடிக்கிறாராம். ● [illegible] புதிய [illegible] அமைத்துள்ளார். [illegible] ● [illegible] ● [illegible] ● [illegible] ● [illegible] ● [illegible] மூன்று [illegible] வைத்துள்ளார்.

—[illegible]

சொல்வேனும். [illegible]

[illegible]: [illegible]

[illegible]: [illegible]

பேட்டி : [illegible]

▲ [illegible] ▼



எழுத்தாளர்கள் போஜனப் பிரியர்களா?

வாஸந்தி

11

[illegible] உலக எழுத்தாளர் மகாநாடு ஆரம்பத்தின் ஆடம்பரத்துடனேயே நிறைவு பெற்றது.

[illegible] பொறுத்தோவுக்கும் ([illegible]) இடையே இருக்கும் [illegible] ஒட்டிய துறைமுகத்தைப் பார்த்தபடி ஏராளமான அழகிய 'ரெஸ்டாரண்ட்'கள் இருக்கின்றன. துறைமுகத்துக்கும் இந்த ஓட்டல்களுக்கும் இடையே ஒரு அகலமான தெரு ஓடுகிறது.

மகாநாட்டின் கடைசி தினம் [illegible] மேயர் ஓர் அமர்க்களமான இரவு விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். மூன்று பஸ்களில் வந்திருந்த எழுத்தாளர்களையெல்லாம் அழைத்துச் சென்று இந்த ஓட்டல்களில் எதில் வேண்டுமானாலும் அமர்ந்து சாப்பிடலாம் என்றார்.

எதிர்பார்த்தாற்போல் இருந்த துறைமுகமும் அந்தத் தெருவும் விழாக் கோலம் பூண்டிருந்தன. கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. [illegible] ஸ்பெஷல் [illegible] தான் அதிகமாக [illegible]. [illegible] பார்த்திருந்த [illegible] உற்சாகமேற்பட்டது.

எழுத்தாளர்கள் அமர்ந்ததும் [illegible] வந்த வண்ணமாக இருந்தன. [illegible] நாட்டின் பிரசித்த [illegible] வகைகள். [illegible] ஒரு [illegible]. [illegible] வழங்கும் போதே [illegible] ஒரு பெரிய [illegible] கடை நிறைய [illegible] துண்டங்களை (அவர்களது [illegible] புடலங்காயைப் போல் இருக்கும்.) வைத்து விடுவார்கள். பிறகு ஒரு பெரும் [illegible] (காய்கறி, தயிர், இத்யாதி) வரும். நான் சைவச் சாப்பாடு என்பதால் எனக்கு ஒரு ப்ளேட் நிறைய [illegible]. அதற்கு மேல் அலங்காரமாக 'ஜோ' என்ற [illegible] துண்டங்களும் வந்து சேர்ந்தன!

''நான் [illegible] துண்டங்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு விடுகிறேன். நீ [illegible]'' என்று பக்கத்திலிருந்த [illegible] எதுவும் [illegible] கூறிவிட்டு [illegible]. [illegible] அந்த [illegible] ஒருவர் [illegible] விரைந்து வந்தார். [illegible]

''[illegible]. நானும் உங்களைப் போல் [illegible] தான். உங்களுக்குத் தனிச் சாப்பாடு அனுப்புகிறேன்'' என்றார். [illegible] திரும்பத் திரும்ப [illegible] வந்து என் உணவு சரியாக இருக்கிறதா என்று விசாரித்து விட்டுப் போனார்கள்.

அசைவ சாப்பாட்டுக்கும் பல [illegible] பதார்த்தங்கள் வந்த வண்ணமாகவே இருந்தன. அப்போது எழுத்தாளர்கள் எல்லோரும் போஜனப் பிரியர்கள் என்று [illegible] விட்டாற் போல் தோன்றிற்று [illegible] எழுத்தாளர்களின்

தன்னெல்லைத்தைச் சம்பாதித்துக்கொள்ள விரும்பும் ஆர்வம் தெரிந்தது. எப்போது நடந்த சமயத்தில் எதிர்த்தாற்போல் இருந்த குறுகிய தெருவில் ஒரு கலைச்சார மேம்படுத்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது புதுமையாகவும் உற்சாகமளிப்பதாகவும் இருந்தது. தெரு விழாக்களின் பிரத்யேகமான கிராமிய நடனங்களும், பாண்டு வாத்தியமும், அந்தப் பிரதேசத்து மக்கள் மிக உற்சாகமானவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தின.

நகரப் புறத்து நாகரிகத்தைச் சேர்ந்த வடக்கு பிரான்ஸ் சிந்தனைச் சிறுபிள் அந்தக் கொண்டாட்டத்தில் சாதாரணப் பல கொண்டைக் கட்டப்பட்டு உட்கார்ந்த இடத்திலேயே அமர்ந்து வேடிக்கை பார்த்தது கலைஞர்க் குழுவினர் சாந்தமாக இருந்தது. என்னையும் பாரியாரையும் சேர்ந்திருந்த சொக்கித் தன்னுடன் நாட்டியமாட வைத்தார்கள்.

என் எழுத்தைப் பற்றியோ, என்னுடைய நாட்டைப் பற்றியோ விசாரிக்க ஆவலோட்டாத போதும், ''தென்மேல் நாட்டியமாடுவீர்களா?'' என்று என்னைப் பாராட்டிய போது எனக்கு திவ்யமான அனுபவம் ததும்ப நினைக்கும் இன்பம் வந்தது. பெல்ஜிய ஆசிரியர் கூட ஏற்பட்டது. கிட்டத்தட்ட அதே நேரமாக ஆசிரியத்துடன் பிரெஞ்சுக்கலிருந்து வந்திருந்த ஜெர்மானிய டாக்டர் பிரிவைச் சேர்ந்த ஜூடா டாக்டர் என்பவர் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். ''இவர்களது கோலாகலமும்'' என்றார். ''அமெரிக்க எழுத்தாளர்கள் பெரும்பாலானோரை எனக்குத் தெரியும். இவர்கள் முன்கூட்டிய அவர்களுக்கு அனுப்பி அனுப்பாததால் வரும் வழி முறையில்லை'' என்றார். ''இவர்களுக்கு இலக்கிய விஷயங்கள் வீட எல்லாவற்றிலும் முன்னுரும் பங்களிப்பிலும் தான் முக்கியமாகப் போய் விட்டன'' என்று அழுத்திக் கொண்டார்.

இலக்கியக்கட்டங்கள் அரசியலைப்பற்றிக் களைகப் பேசுகையிலும் வேறு எப்படிப்பட்ட போக்காக அது இருந்த முறையும் என்று நான் நினைக்கும் போதெல்லாம். புதிதாக வந்திருந்த அதிகப் பிரபலமில்லாத, அதிக வெற்றியடையாத பிரெஞ்ச் எழுத்தாளர்கள் எல்லாம் தங்களது எதிர்காலத்துக்கு உபயோகமாக இருக்கக் கூடிய தொடர்புகளைப் பிடித்துக் கொள்வதிலேயே அதிகக் கருத்துடன் இருப்பதை நான் கவனித்தேன். இலக்கியக் கருத்துப் பரிமாற்றங்களில் அதிக ஆர்வம் காட்டாதது ஏமாற்றமாக இருந்தது.

என்னுடன் பேசிக்கொண்டிருந்த ஒர் இளம் எழுத்தாளர்,

○ அலங்காரமான ஒரு தோற்றம்

○ நைலாந்தின் நீலகம்

○ நீள் பருத்தகம்

''உன்னுடைய புதிய நாவலில் உங்கள் காஷ்மீர் இடம் பெற்றிருக்கிறது'' என்றார். ''அதாவது காஷ்மீரை அங்குதான் சந்திக்கிறோம்.''

''இந்தியாவுக்கு வந்திருக்கிறீர்களா?'' என்றேன் ஆவலுடன்.

''வந்ததில்லை'' என்றார்.

''நீங்கள் எப்படிப் பார்க்காத இடத்தைப் பற்றி எழுதினீர்கள்?'' என்றேன் ஆச்சரியத்துடன்.

''கற்பனையால்'' என்று சிரித்தார்.

''காஷ்மீர் என்கிற பேர் ரொம்பக் கவர்ச்சியாக (exotic) த் தொனிக்கிறது'' என்றார்!

காதல் நவீனங்களையும் திகில்கதைகளையும் மக்கள் விரும்பிப் படிக்கிறார்கள் என்ற பொதுவான கருத்தை நான் சந்தித்த எழுத்தாளர்கள் சொன்னார்கள். ஆனால் ஆழமான எழுத்துக்கும் ரசிகர்களின் ஒரு பலத்த ஆதரவு இருப்பதை நான் பாரிஸின் மிகப் பிரபல இலக்கிய பத்திரிகைகளான TELQUEL, L'INFINI அலுவலகத்துக்குச் சென்று அவற்றின் ஆசிரியர்களான Philippe Sollers, Marcelin Pleynet முதலியவர்களைச் சந்தித்து உரையாடியபோது தெரிந்து கொண்டேன். மிகத் தரமான பத்திரிகைகள். அற்புதமாக வெளியிடுகிறார்கள். அவற்றின் ஆசிரியர்களுடன் பேசியதே பெரிய அனுபவமாக இருந்தது.

இலக்கியம், தத்துவம், கலை, விஞ்ஞானம் அரசியல் முதலிய விஷயங்களைப் பற்றிக் கட்டுரைகள் வெளியிடுகிறார்கள். சர்வதேச தரமுள்ள தலைவர்கள் எழுதியிருக்கிறார்கள். இன்றைய சர்ச்சைகளில் பங்கு பெற்ற எழுத்தாளர்களும் ஏராளம்.

அங்கிருக்கும்போது நான் எழுத்தாளர் மாநாட்டுக்கு ஏதும் எதிர்பார்த்தபடி கிடைக்காமல் போனாலும் மாதாந்திர அங்கே நடக்க காரணத்தால் 'அழகிய தெரு நிகழ்ச்சிகளைப் பார்க்க வாய்ப்பு கிடைத்தது என்பதில் நான் மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டேன். அந்தக் காலத்து காவிய நாடக எழுத்தாளர்களும் வந்திருப்பார்கள் என்று தோன்றியது.

நாங்கள் பார்க்க விரும்பிய அன்று மாலை புகழ் பெற்ற Comedie Francaise என்ற நாடக அரங்கத்தில் ஒரு பிரெஞ்சு நவீன நாடகத்துக்கு நான் டிக்கெட் வாங்கியிருந்ததால் விமான நிலையத்திலிருந்து நேராக அரங்கத்துக்குச் சென்றேன். நாடகம் வைத்திருந்தது மொழி புரியாது மட்டுமல்ல. சில காட்சிகள் அதிர்ச்சி அளிக்கக் கூடியவை. மனக்கசப்பில்லாமல் போய் தெய்வீகமாய்ப் பார்த்துக் கொண்டும் அதிர்ந்து போனேன். நவீன நாடகங்களைப் பற்றி மிகவும் ஆழ்ந்த சொல்ல வேண்டியது ஒரு கதை. மின்விளக்கின் மிக தூக்கலான காட்சிகள் அவர்களது மிக சிறப்பான நாடகத் தன்மைக்கு மட்டும் அல்லாமலும் இதுவென்ற என்றும் புரிந்தது!

இன்னும் ஒரு நாள்தான் என்று எண்ணும்போது பாரிஸ் வாசம் என்ற உணர்வு என்னுள் ஓர் ஏக்கத்தை ஏற்படுத்தியது. சந்தோஷ காலை ஆக உணவு வந்து விட்டார். டைபி திரைப்படங்களை பார்த்து முடித்த மட்டும் வர எத்தனையோ என்கிற எண்ணத்துடன். நான் மியூசியங்களில் சில பகுதிகளைப் பார்த்து, பாரிஸ் விடைபெற்றுக் கொண்டு, மீண்டும் வருவேன் என்று சொல்லி விட்டு மறுநாள் அதிகாலை ஹாலந்துக்குக் கிளம்பினோம்.

ஆனால் நானும் வெகுநாள் பழகிய நெருங்கிய தோழியின் பிரிவு மாதிரி துக்கப்பட்டேன்.

ஆம்ஸ்டர்டாமின் ஷிபோல் (Schiphol) விமான நிலையத்தின் எக்கமும் நவீன அமைப்பும், அமைதியான விஸ்தாரமும் கண் கொள்ளாக் காட்சி. எங்கள் வரவேற்க நண்பர் காத்திருந்தார். ஆம்ஸ்டர்டாமில் ஒரே ஒருநாள் தான் தங்குவதாக இருந்ததால் உடனடியாக விடுதிக்கு எங்கள் சாமான்களை கொண்டு சேர்த்துவிட்டு நானும் நண்பரும் நகரத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம்.

வெளியே மழைச் சாரலும் ஜில்லென்ற காற்றுமாய் நல்ல குளிராக இருந்தது.

ஆம்ஸ்டர்டாமை விரைவாக முழுவதும் பார்க்க வேண்டும் என்றால் நகரின் மையத்தில் ஓடும் புகழ்பெற்ற பெரிய கால்வாய்களில் மிதக்கும் சொகுசுப் படகுகளில்

மாதம் ஒரு மர்ம நாவல்

அடுத்த வாரம்

எல்லைகள்

சவிதா

மர்ம நாவல்

உள்ள வழுவது தான் சிறந்தது என்று திரு. சந்திரராமன் சொல்லியிருந்ததைப் படகுச் சவாரிக்குச் சென்றோம். பல படகுக் கம்பெனிகள் கிட்டத்தட்ட ஒரே டிக்கெட் விலைக்கு இருபது நிமிஷங்களுக்கு ஒரு படகு விடுகிறார்கள். படகில் ஏறும் ஒவ்வொரு பயணியையும் ஒருத்தர் போட்டோ எடுத்துக் கொண்டிருந்தார். பயணம் முடிந்ததும் போட்டோ தயாராகித் துறைமுகத்தில் ஒரு பலகையில் தொங்குகிறது. பயணிகள் உற்சாகமாகத் தங்கள் போட்டோக்களை வாங்கிச் செல்கிறார்கள்!

படகுச் சவாரியின் போது ஒரு அழகிய பெண் கைட் ஆம்ஸ்டர்டாமின் முக்கிய பகுதிகளை ஆங்கிலம், இத்தாலியன், டச்சு, ஜெர்மன் மொழிகளில் மாற்றி மாற்றிச் சொல்லிக் கொண்டே போனாள். எப்பொழுது எந்த பாஷைக்குத் தாவுவாள் என்று புரிந்து கொள்ளச் சில நிமிஷங்கள் பிடித்தன.

நூற்றுக்கு மேற்பட்ட கால்வாய்களும், 500 பாலங்களும், பதினேழாம் நூற்றாண்டு கட்டட அமைப்பும் கொண்ட ஆம்ஸ்டர்டாம் நகரம் விநோதமான புராதன - நவீன அழகு கொண்டதாக இருக்கிறது. உலகத்தின் மிக மிக முக்கியமான வியாபாரத் துறைமுகமாக இது. பழமையையும் புதுமையையும் மிக லாகவமாகக் கைக்கொண்டு [illegible] இத்தகைய பிரதேசம் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. தொழிற்சாலைகளும் தொழில் வளமும் முன்னேற்றம் அடைந்து பெருகிய அதே சமயத்தில் விவசாயமும் பால், வெண்ணெய் பண்ணைகளும் அதிக நல்ல வளர்ச்சி பெற்றிருக்கின்றன. பல நூற்றாண்டுகளாகப் பிரசித்தமாய் இருக்கும் 'டச் விண்ட் மில்'கள் இன்னும் மாவரைக்கவும் மரத்தூள் செய்யவும் உபயோகப்படுத்தப்படுகின்றன. அநேக மாடிக் கட்டடங்கள் ஒருபுறம் இருக்க, பதினேழாம் நூற்றாண்டு மாளிகைகள் புதுப்பிக்கும் முறையில் காப்பாற்றப்படுகின்றன.

கால்வாய்களில் ஓடுகிறது போல இருக்கும் அந்தப் பழைய கொல்லர் கட்டடங்களின் புது அமைப்பு சற்றும் மாறுபடாமல் ஒரு நூதனத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் கிடங்காக இருந்த இந்தக் கட்டடங்களில் இப்பொழுது பெரிய கம்பெனிகள் வாடகைக்கு இருக்கின்றன. ஆமாம் – வெறும் ஒரு மாதத்துக்கு வாடகை ரூ. 12,000!

ஆம்ஸ்டர்டாமின் ரிக்ஸ் (RIJKS) மியூசியம் ஒரு அற்புதமான கலைக்கூடம். இதன் பிரதானக் கூடத்தில் இருக்கும் ரெம்ப்ராண்ட் (Rembrandt) டின் "Night Watch" என்ற பிரம்மாண்டமான மெய் சிலிர்க்க வைக்கும் ஓவியத்தைப் பார்க்கப் பல நூற்றாண்டுகள் எடுக்கலாம் என்று தோன்றியது. பதினாறாம் நூற்றாண்டு. மரத்தில் செதுக்கப்பட்ட அற்புத சித்திரங்களும் இங்கு பிரமிப்பை ஊட்டும் அழகுடன் இருக்கின்றன.

முத்தமிட பயம்!

1938-இல் பதிப்பு அதிகமாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட 'கிமா' சில மாதங்கள் கழித்துத் திருமணம் செய்து கொண்டார். திருமணமாகும் பெண்ணை ஈடு விருந்து வைத்துக் கேட்டுக் கொள்ளும் வழக்குத் தொடர்ந்தார்.

கணவர் மீது மனைவியின் குற்றச்சாட்டு. "என் கணவர் என்னை முத்தமிடுவதேயில்லை!"

கணவன் கூறியது "அவள் போடுகிற [illegible]. ஆகவே அவளை முத்தமிட பயமாக இருக்கிறது" என்று.

நீதிபதி கூறிய தீர்ப்பு: "இன்னும் ஒரு மாதத்திற்குள் கணவனை அவளை முத்தமிடப் பழகிக்கொள்ள வேண்டும்!"

இரா. வேலுமணி

விக்டோரியா கால் கோபுரம் முதல் கடலும் இங்கு அழகியப் பார்க்க வேண்டியது அந்த ஓவியம் சுவருகிடம் டச்சு மக்களுக்கு இருக்கும் விசேஷம் கடத்தில் அணிவும் அமைப்பிலும் (நான்கு வரைகள்) தெரிகிறது. அதுவேயப் பெரிய என்று எனக்குப்பட்டது.

ஆம்ஸ்டர்டாமின் அதிக நாள் தங்குமுடியவில்லை என்கிற வருத்தத்துடன் நான் மறுநாள் அதிகாலை லண்டனுக்குக் கிளம்பினேன். திரு. சந்து ஜெர்மனிக்குக் கிளம்பினார்.

KLM விமானத்தில் நான் லண்டன் நோக்கிப் பயணிக்கும் போது ஒரு டச்சுக்காரர் என்னை நோக்கி வந்தார்.

"நீங்கள் மகாத்மா காந்தி வாழ்ந்த நாட்டிலிருந்து வருகிறீர்களா?" என்றார் உற்சாகமான ஆங்கிலத்தில்.

"ஆமாம்" என்றேன்.

அவர் ஜாடை காட்ட அவரது மனைவி தன் அருகில் வந்தாள்.

(தொடரும்)

கவிதைப் பேழை

சி. வி. ராமசாமி, கோயம்புத்தூர்-35
(ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்)

அடர்ந்த இருள் நடுவனத்தில்
அழகு குறைக வளைத்திடுமோ
அடர்ந்த பல துறைகளிலெல்
பணிகளிலும் முடிவில்லை
தொடர்ந்து வரும் பெருவழி நான்
துயிலு முன்னர் செல்வனவே.
தொடர்ந்து வரும் பெருவழி நான்
துயிலு முன்னர் செல்வனவே.

—ராபர்ட் ஃப்ராஸ்ட்

ச. கோபுராஜ், கடலூர்-1

நம்பிக்கை
கார் கேட்டும்
தாம் எண்ணத்தில்
இருந்தால்
உதிர்ந்த
பூக்களும்
ஒவ்வொன்றும்
வந்து
ஒட்டிக் கொள்ளும்
உதிர்ந்து
மாவிலைகளும்
தன்னைத் தானே
கட்டிக்கொள்ளும்

—மு. மேத்தா

திருமதி விஜயலக்ஷ்மி, சென்னை-15

இரை மசுவும் மொழியின்
இசைப்படக் காட்சியாகி,
நான்கு சுவர் அறைக்குள்ளான
காற்று இக்கு வேறொட்டிக்கொண்டு
இரை அரங்குகளின் பரிமாறும்
பரிசாரகர்களே!
பாருங்கள் இன்னும் பசிக்கும்பட்டினியை;
பாருங்கள் பாரத பசி "பட்டினி"!!

—சாரு

திருமதி சுபா. பாலசுப்பிரமணியன், திருவனந்தபுரம்
(ஃபிரெஞ்சிலிருந்து தமிழாக்கம்)

அழிக்கப்பட்டனர்; வெற்றுப்பிணமாக்கப்பட்டனர்.
கிழிக்கப்பட்டனர்; தியாகம் செய்யப்பட்டனர்;
எத்தனை காடுகள்? வருந்தாதே!
வனங்களே அழிக்காதே! மரத்தின் வெட்டாதே!
என்றுதம் நிலைமையின் விளக்கங்களின்
கவனத்துக்காக அறைகளில் விளக்கு பட்டொளிப்பட்ட
பத்திரிகைகள் அச்சிடப்படுவதற்கு 'தாள்' செய்வதற்காக!



—ழாக் ப்ரெவேர்

நாகலட்சுமி கோபாலன், பம்பாய்-71

''வானிலே இருந்து என்னைப் படைத்தவன்
உலகத்தைப் பார்க்க அனுப்பி வைத்தான்.
நானொரு பயணி. பயணத்தை முடிக்கும்
நேரத்தை மரணத்திலும் குறித்து வைத்தான்:
ஏனொரு கலக்கம் மரணத்தைக் கண்டால்
என்பதுதானே புரியவில்லை...?
[illegible] வைத்த ஆசையும் பாசமும்
ஞானத்தை மறைப்பதால் தெரியவில்லை!''



''—[illegible]''

வ. பிரபா, சென்னை-4

''பத்து மாதம்'' என்று
சுமந்தவளைக்
கொண்டாடுக
கும்பிடத்தான் வேண்டும்...!
ஒரு மாதம் என்று
சுமந்திருந்தால்
பத்து படங்கள் அல்லவா
பெற்றிருப்பாள்!

—எம். [illegible]

இ. ஜெகநாதன், சென்னை-28

''உன் அழகை ரசிக்கிறேன்
அந்த அழகில் கலந்திருக்கும்
அமைதியை ரசிக்கிறேன்;
அந்த அமைதியில் மறைந்திருக்கும்
அன்பை மதிக்கிறேன்;
அந்த அன்பை வெளிப்படுத்தும் —உன்
கண்களை வாழ்த்துகிறேன்.''



—கவிஞர் மதுரை நீலவாணன்

டாக்டர் வி. ஜெயந்தி, சென்னை-40

நம் பெண்கள் தங்கள்
இல்லையேல்... மக்களைப்பதற்கும்
ஜாதி பிரித்திருப்பேனா?
தமிழ்நாட்டில் பிறந்தவர் நாங்கள்
தமிழ்நாட்டில் பிறந்தவர் அன்னமே
இந்திய அழகு! இந்திய அழகு!

—கவிஞர் வைரமுத்து

பெருமையுடன் அளிக்கின்றோம்

ஆயுர்சக்தி® யை-புதிய

மூவ்வகை செயற்திறன் கொண்ட ஆயுர்வேத வலி நிவாரணி.



ஆயுர் சக்தியின் தனித் தன்மை என்ன ?

இப்பொழுது, உங்களுக்கு தலைவலி, ஜலதோஷம், தசைப்பிடிப்புக்களைப் போக்க தனித்தனியான மருந்துகள் தேவையில்லை. ஆயுர்சக்தி இவைகளை ஒன்றாக இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. பல மூலிகைகளைக் கொண்ட ஆயுர்சக்தியின் திறன் மிக்க கலவைப் பொருட்கள் உடனடியாக வேலை செய்து விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

பல வருட ஆராய்ச்சிகளின் விளைவாக ஆயுர்வேத முறையில் அரிய பல மூலிகைகள் மற்றும் சுத்தமான மூலிகைத் தைலங்களைக் கொண்டு ஆயுர்சக்தி தயாரிக்கப்பட்டுள்ளது.
எனவே அடுத்தமுறை நீங்கள் தலைவலி, ஜலதோஷம் அல்லது தசைப் பிடிப்புகளால் அவதியுறும் போது புதிய சக்திவாய்ந்த ஆயுர்சக்தியை நாடி விரைவில் நலம் அடைவீர்.

உங்களது வீட்டு உபயோகம் மற்றும் பயணத் தேவைகளுக்கு ஏற்ப மூன்று விதமான அளவுகளில் கிடைக்கின்றது.

ஆயுர்சக்தி — மூவ்வகையில் செயலாற்றும் அதிவேக வலி நிவாரணி

இத்தரமான படைப்பின் அளிப்பவர்கள்;
பொருக்கா இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் டிவிஷன்,
22-ஏ, கதீட்ரல் சாலை, சென்னை-600 086.
தொலை பேசி : 63782

Interpub-(M)-63

ஆக்டோபஸ்ஸி திரைக்கதையின் தமிழ் வடிவம்

நான்காம் பாகம்

ஆக்டோபஸ்ஸியைப் பிடிப்பதற்காக ஜெனரல் [illegible] படைகள் [illegible] ஒழுங்கு [illegible] பாதையும் [illegible] ஜெர்மனிக்குள் பிரவேசிக்கும் இடத்தில் இருக்கிறார். ரயில் [illegible] வேகமாக [illegible] கடந்து கொண்டிருந்தது. பின்னு வேகம் [illegible] ஆக்டோபஸ்ஸின் [illegible] காவலர்கள் நின்ற இடத்தில் [illegible] நின்றது. ஆக்டோபஸ் [illegible] இறங்கி ஓட ஆரம்பித்தாள். [illegible] திகைப்பில், வெறி பிடித்தவர் போல அவள் ஓடுவதை ஆச்சரியத்துடன் பார்த்தனர் காவலர்கள்.

"அவளை நிறுத்துங்கள்" என்று கோகோல் கத்தியது தான் தாமதம். துப்பாக்கிக் குண்டுகள் பறந்தன. ஆக்டோபஸ் சுருண்டு விழுந்தாள்.

"அவளை உயிருடன் பிடிக்க [illegible] ... [illegible] ..."

கோகோல் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஆக்டோபஸை நெருங்கினார்.

"[illegible] மாலைக்குள் [illegible] [illegible]"

[illegible] கொண்டே பதில் சொன்னாள் ஆக்டோபஸ். "நாளை [illegible] [illegible] போது [illegible] [illegible] போதி [illegible]." அவள் குரல் [illegible] வெளிப்பட்டது. [illegible] போல் [illegible] வந்தது. [illegible] தொலைவிலிருந்து.

கோகோலுக்கு ஒன்றும் புரியவில்லை. துப்பாக்கி கொண்டிருந்தான் அவர் குழப் பத்தைத் தெளிவுபடுத்தியிருக்கக் கூடியவன் 007 ஒருவன்தான்.

• • •

[illegible] தன் மறைவிடத்திலிருந்து [illegible] கேட்டுக் கொண்டிருந்தான் ஜெனரல் [illegible]. [illegible] கொண்டிருந்தார்.

"3.45-க்கு குண்டு வெடிக்கும். அதை 3.15-க்குள்ளாவது அகற்றிவிட வேண்டும்."

[illegible] ஒரு [illegible] [illegible] அதன் [illegible] இருக்கிப் பிடித்தான்.

"[illegible] நான்கு மணி [illegible] குண்டு வெடித்து விடும்."

[illegible] மற்றொரு [illegible] [illegible] [illegible] சென்றான். [illegible] இருந்த [illegible] [illegible] [illegible]

சாகசங்களும் சாதனைகளும்

ஈறுகளை பலப்படுத்துவீர்.
பற்களுக்கு நீண்ட ஆயுளை அளிப்பீர்.

ஈறுகளை பலப்படுத்துவதற்கான விசேட அஸ்ட்ரிஞ்ஜெண்ட் அடங்கியிருப்பது ஃபோர்ஹன்ஸ் ஒன்றில்தான்.

[illegible]

[illegible]

[illegible]

நம்பகமான ஃபோர்ஹன்ஸ் [illegible]

8OSF-203-TAM

ஹரி என்ற 'சென்றுள் பாண்ட்' அதன் பிறகு வேறு இசைவில் செய்ய வேண்டியிருந்தான். அதில் பயணம் செய்த ஜெர்மானிய குடும்பத்தினர் அவனை இறக்கி விட்டு விட்டுச் சந்தோஷமாகக் கையசைத்து விடை பெற்றனர்.

பாண்ட் இறங்கிய இடத்தில் ஒரு பொதுத் டெலிபோன் பூத் இருக்கவே விரைந்து அதை நோக்கிச் சென்றவன் நின்றான். ஒரு ஜெர்மானிய பெண்மணி சாவகாசமாய் நீண்ட உரையாடல் நிகழ்த்திக் கொண்டிருந்தாள். அருகே நின்றிருந்த அவள் காரைப் பார்த்தான். இன்னும் கொஞ்ச நேரத்துக்கு அது அவளுக்குத் தேவைப்படாது போல் தோன்றியது. 'சிக்'கென்று அதில் ஏறி அமர்ந்து விரைந்தான். கைக்கடிகாரத்தைப் பார்த்தபோது குண்டு வெடிப்பதற்கு சில நிமிடங்கள் முன்னும் தான் ஸ்டேட்மென்டை அடைய முடியும் என்று தெரிந்தது.

டெலிபோன் பூத்தை விட்டு வெளியே வந்த பெண்மணி அலற ஆரம்பித்தாள். அவள் கண்ணெதிரிலேயே அவள் கார் பறிபோய் விட்டதே! அருகில் இருந்த போலீஸ்காரன் ஒருவன் மோட்டார் சைக்கிளில் அவ்வழியே வர அவனை நிறுத்தி நடந்ததைச் சொன்னாள். தன் ரேடியோ மூலம் காவல் நிலையத்துக்குச் செய்தி தெரிவித்துக் கொண்டே 007-ஐப் பின் தொடர்ந்தான் அவன்.

சீக்கிரமே ஒரு ஜீப் போலீஸ் கார் வரவும் பாண்டைப் பின் தொடர ஆரம்பித்தது. அதை உணர்ந்தவுடன் வேகத்தை அதிகரித்தான் அவன். நிமிடங்களை எண்ணிக் கொண்டு ஸ்டேட்மென்டுடன் அருகே [illegible] அடைந்து நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து மற்றொரு சாலையில் திரும்பினான். போலீஸ் வண்டிகள் விடாமல் பின்தொடர்ந்தன. போலீஸ் கார் ஒன்று எதிர் திசையில் விரைந்தது. அதிலிருந்த [illegible] பாண்ட் [illegible] அவர்கள் அவன் செல்வதைப் பார்த்து விட்டனர்.

"பாண்ட் எதிரே போகிறான் பார்த்தீர்களா?" என்றான் கோலித்தர்.

"போகட்டும். போகட்டும். இப்படி வளைப் போயிருக்கான் அவன் போய்ச் சேர்வதற்குள் காலம் கடந்து விடும். அவனும் சண்டேயோ? மைதானம் போய்ச் சேருவான்!"

விமான நிலையத்தின் நுழைவாயிலில் பிரேக்கை அழுத்தி வண்டியை நிறுத்தினான் 007. காவலன் ஒருவன் எதிர்த்துக் கண்டு [illegible] அணுகினான்.

"நான் கமாண்டர் ஜென்கின்ஸை உடனே பார்க்க வேண்டும்" என்றான் பாண்ட்.

"உள் அனுமதிச் சீட்டு எங்கே?" என்றான் காவலன்.

ஒரு கணம் செய்வதறியாது தவித்தான் பாண்ட். அந்த நேரத்தில் பின்னாலிருந்து போலீஸ் வண்டிகளின் சைரன் ஒலித்தது. உடனே உஷாரானான் வாயில் காவலன். பாண்ட் போலீஸிடமிருந்து தப்பி ஓடுகிறான் என்று அவனுக்குப் புரிந்து போயிற்று!

பாங்கில் கொள்ளை

"இதோ பாருப்பா! கவுண்ட்டரை விட்டுத் தாண்டறதுக்குள் மொத்தம் பத்து பாக்கெட் சரியா இருக்கான்னு எண்ணிப் பார்த்துக்கோ! அப்புறம் அதுலே குறைஞ்சு இதிலே குறைஞ்சுதுன்னு நான் பொறுப்பு இல்லே..."
— என். எஸ். வி. குருமூர்த்தி.

"ஹாண்ட்ஸ் அப்! அப்படியே நில்லு இங்கு" என்றான் துப்பாக்கி முனையை நீட்டி.

பெரிய கைகளை உயர்த்திய பாண்ட் அசிரத்தையாய் [illegible] சுற்றி [illegible] பார்த்து [illegible] கொடுத்து [illegible]. காவலாளி ஏதும் செய்வதற்குள் வண்டியை நிறுத்தி விட்டு இறங்கி ஓடினான் 007. வழக்கம் போல சில நிமிடங்களே பாக்கி இருப்பதை உணர்த்தியது.

இருந்தும் போலீஸாரும் படைத்தளக் காவலர்களும் பாண்டைத் துரத்த ஆரம்பித்தனர். சர்க்கஸ் கூடாரத்தை நோக்கிச் சென்று வெளியிலிருந்த கோமாளி ஒருவனைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. அருகே நின்ற 'காரவானு'க்குள் நுழைந்து அவசர அவசரமாக [illegible] அணிந்து கொண்டான். பொய் மூக்கைப் பொருத்தி, [illegible] கொண்டு, தொள தொளவென்றிருந்த கோமாளி உடையை மாட்டிக் கொண்டான். அவன் வெளியே வந்த போது "கோமாளி உடையைத் திருடி அணிந்து கொண்டிருக்கிறான்" என்று ஒரு சப்தம் கேட்டது.

அதற்குள் சர்க்கஸ் காட்சி ஆரம்பித்து ஒவ்வொரு கோமாளியாக [illegible] தொடங்கியிருந்தது. பார்வையாளர்கள் அந்த ஆர்க்கஸ்ட்ரா [illegible] நகைச்சுவை [illegible] விழுந்து விழுந்து சிரித்தனர். [illegible] பழக்கமில்லாத வீரர்கள் கோமாளித்தனம் செய்வதால் நிலைமை விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அணுகுண்டு வெடிக்க வேண்டிய தருணம் நெருங்கிக் கொண்டிருந்தது. பொன்னான நிமிடங்கள் விரயமாகிக் கொண்டிருந்தன. (தொடரும்)

நீயன். புதுமைப் பித்தன், ராஜாஜி இவர்களைப் பற்றிய குறிப்புகளையும் படித்து விட்டு நேயர்கள் எழுதியிருக்கிறார்கள். சில நிகழ்ச்சிகளைப் பற்றிப் பல நேயர்கள் மேலும் தெரிந்து கேட்டிருக்கிறார்கள். நீயும் புதுமைப் பித்தனும் நண்பர்களா என்றும் ஒரு கேள்வி!

[illegible]



[illegible]

சில பல

— மீ.ப. சோமு —

1944 [illegible]

பிறந்த சில விநாடிகளில் என் குழந்தை எதிர்பாராத துடிப்பு நோய்க்கு உள்ளாகி இறந்துவிட்டாள். இத்தகைய ஆண்டுகளுக்குப் பிறகும் அவளுடைய நினைவு என் உள்ளத்தில் பொங்கி வழிகிறபோதெல்லாம் ஆறுதல் பெறுவதற்கு ராஜாஜியின் ஓர் அரிய கடிதம் எனக்குப் பெரிதும் துணை செய்கிறது. உங்களைப் போலவே பிறரும் என்னும் அதிர்ச்சியிலே வருந்துகிற எல்லா நண்பர்களுக்கும் இந்தக் கடிதத்தையே நான் படித்துக் காட்டுகிறேன்.

ஒருவர் மறைந்த பிறகு நாம் வருத்தப்படுவது, மரணம் அடைந்தவர்களுக்காகவா அல்லது நம்முடைய அவலநிலை மீது நமக்கு ஏற்படுகிற கவலைக்காகவா? மரணம்அடைந்தவர்கள் இந்த உலகத் துயரங்களிலிருந்து விடுபட்டுச் சென்றுவிட்டார்கள். பின் ஏன் நாம் வருந்துகிறோம்?

இந்த அடிப்படையான கேள்வியையே எழுப்புகிறார் ராஜாஜி. பின்னர் துயர வெள்ளத்திற்கு ஒரு வடிகாலும் அமைத்துத் தருகிறார். இதோ கீழேயிருக்கிறது ராஜாஜி எழுதிய அந்தக் கடிதம்:

சென்னை
12.11.44.

ஆசீர்வாதம்,

உங்களுடைய கடிதம் கிடைத்தது. துயர மனோநிலையில் உடனே பதில் எழுதவில்லை. உங்களுக்கு எழுதி என்ன பயன்?

பெற்று வளர்த்த மகள் இறந்த பெற்றோர்களுக்கும், மனைவியை இழந்தவனுக்கும். சகோதரியை இழந்தவர்களுக்கும் வெறும் பேச்சுகளும் தத்துவங்களும் ஆறுதல் தரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

ஆறுதல் தர முடியாதாயினும், உண்மையைச் சொல்லுவதில் ஒன்றும் குற்றமில்லை.

இறந்தவர்களுக்கு இறந்த பின் ஒரு துக்கமும் இல்லை. மற்றவர்களுக்கு வருத்தம் நமக்காகவே தான் நாம் வருந்த வேண்டும். அந்தத் துக்கத்தில் என்ன நன்மை இருக்கிறது? அதை விட்டுவிடுவதே நலம்.

பெண்களின் சேவையும், வாழ்வும் பெரிய அற்புதம் என்பதில் சந்தேகமில்லை. சொல்லொணாத சந்தோஷத்தைப் பிறருக்குத் தந்து விட்டு, கஷ்டத்தையெல்லாம் தாங்களே தங்கள் பங்காக எடுத்துக் கொள்கிறார்கள். உயிரையும் கொடுத்து விடுகிறார்கள்.

இறந்த சகோதரியிடம் காட்டியதும், இனிக் காட்டப் போவதாயும் இருந்த அன்பு, கவனம், மரியாதை எல்லாவற்றையும் இனி உங்கள் மனைவியிடம் காட்ட வேண்டியது! இறந்தவர்களைப் பற்றி நினைவு தானே இனி உடன்? வேறொன்றும் அவர்கள் கேட்பதில்லை.

இராஜகோபாலாச்சாரி

● ● ●

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தை நேயர்கள் அறிவார்கள். வகுப்புவாரியாகப் பாடப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் பாடங்களின் தரத்தைப் பற்றியோ, பாடப் புத்தகங்களில் உள்ள அரசியல் பற்றியோ இப்போது நான் சொல்ல வரவில்லை. வேறொரு முக்கியமான செய்தியைச் சொல்ல வேண்டும்.

பல ஆசிரியர்கள், எழுத்தாளர்களின் எழுத்தை இந்தப் பாடப் புத்தகங்களில் சேர்த்திருக்கிறார்கள். பாராட்ட வேண்டிய செயல்! அந்தந்த ஆசிரியர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகே சேர்த்திருக்கிறார்கள். அது அதைவிட மேலும் பாராட்ட வேண்டிய செயல்! ஆனால் புத்தகங்களை அச்சிட்டு வழங்கிப் பாடங்களும் நடத்த ஆரம்பித்து இத்தனை மாதங்கள் ஆகியும்கூட, அந்தப் பாடநூல் நிறுவனம் மோன நிலை கலையாமல் "கப்சிப்" என்று இருக்கிறது. அது ஏன்? பாடமோ, கதையோ, கட்டுரையோ கொடுத்தார்களே. அந்த ஆசிரியர்களுக்கு நூலின் படி ஒன்றாவது அனுப்ப வேண்டாமா இல்லையா? தமிழ் எழுத்தாளர்களுக்குத் தமிழக அரசு காட்டுகிற மரியாதையா இது?

நூலின் பிரதியை அனுப்பாத பாடநூல் நிறுவனம் இந்த ஆசிரியர்களுக்குச் சன்மானம், வெகுமானம் ஏதாவது எப்போதாவது கொடுக்குமா? அல்லது, தன்மானம் உள்ள எழுத்தாளருக்குச் சன்மானம் எதுக்கடி குதம்பாய், என்று இந்த மோன நிலை மூலம் பேசாத நிலையில் ஆழ்த்துகிறதோ?

சேற்றுக்கு விலைக்கு வாங்கி வந்த பாதியில் ராதி மல்லிகையைப் புடவைச் சூடியின் முன்னும் ஒவியமாய்த் திரும்பி அழகு பார்த்தவாறு குட்டுக் கொண்டாள் மாலா. 'பரவாயில்லை! தெருக்காரர்க்குத் தொடுத்த தாய்ப் பார்த்துச் சிக்கனமாய் வாங்கி வந்திருக்கிறீர்'' என்று மனதுக்குள் மெச்சிக் கொடுத்துக் கொண்டிருந்த போதுதான் குட்டி காத்தனூர் சேலையின் சூரை உள்ள விளக்கிலில் ஒலித்தது.

''மல்லி... இங்கே என் பேனாவை வெச்சிருந்தேனே... நீயா எடுத்தே? எழுத வேண்டியிருக்கு!''

''இல்லியேம்மா. நான் பார்க்கக்கூட இல்லியே!'' என்று பதுங்கிச் சொல்லியவாறு வந்தாள் மாலா.

அவள் எப்போதாவது அந்த மாதிரி தன் பேனாவை எடுத்து உபயோகிப்பது வழக்கம்தான். ஆனால் விலை கொண்ட ஒரு பேனாவை வாங்கிக் கொடுத்த பிறகு அதைப் போய் ஜெயமாய்ப் பூட்டி வைத்து வெளியிடுவது இப்போதைக்கு ஏதோ யார் பேனாவையும் எடுப்பதில்லை.

''இருப்பா... நான் தேடிப்பாத்து எடுத்துத் தரேன்...''

''சீக்கிரம் தேடுங்க மல்லி... பஸ் வந்துடும் போயிடும்...''

''இதோ பாரு! உன் புஸ்தகத்துக்கு நடுவிலே ஒளிஞ்சுக்கிட்டு இருக்கு!'' புன்னகையுடன் மாலா எடுத்துத் தந்த பேனாவைக் கையில் வாங்கிக் கொண்டாலும் ஜெயா சங்கடத்துடன் நெளிந்தாள்.

''சரி... மல்லி அந்தப் பேனாவை... அம்மாகிட்டே குடுக்க.... நான் ஆபீஸ்லேயிருந்து வாங்கிக்கிட்டுப் போய்ச் சேர்த்துக் கொடுப்பியா...''

என்றவாறு மனதுக்குள் ஏதோ ஒன்று உறுத்தியது. இந்தப் பெண் என்று புரியாமல் இந்த மனதின் வார்த்தையின் அர்த்தமே புரியல்லை! இந்தப் பெண்ணுக்குத் தான் அந்த எண்ணம் என்ன! குழந்தைக்கு என்ன தெரியும்! பெரியவர்கள் சொல்வதை 'சேட்டைப் பேச்சு' என்பதை அப்படியே ஒலித்துக் கொள்கிறது!

மாலா மூன்று வருஷங்களுக்கு முன்னால் கல்யாணமாகி அந்த வீட்டுக்கு வந்தது, இத்தனை வருஷத்திலிருந்தே அவளுக்கு என்ற பட்டம் கிடைத்தது

வந்து அவள் தனியே உட்கார்ந்து தான் விட்டது!

முதலில் அவன் கல்யாணமாகி வந்தவுடனேயே ஆறு மாதங்களுக்குள் வீடு குடும்பம் என்கிற முடிந்து அவள் மாமனார் மேல் உலகம் அனுப்பி வைத்தது அவள் மேல் பழியாய் விழுந்தது.

அவள் போதாத காலமும் தானிருக்கட்டும் இணைந்து சதி செய்து அந்த வீட்டில் ஒவ்வொரு நிகழ்ச்சியாய் நடத்தி வைத்தது போல் விளைவுகள் நடந்தன.

கல்யாணமாகி வந்தபோது காரும் பங்களாவுமாய் இருந்த செல்வச் செழிப்பு அவளைக் கண்டு பயந்து ஓடியது போல் ஓடி விட்டன. மாமனார் விட்டுச் சென்ற கடன்கள் அடைபடுவதற்கு அவள் வந்த வேளையில்தானா காரும் பங்களாவும் விற்கப் படவேண்டும்!

இது தவிர, பரம்பரை பரம்பரையாய் அந்த வீட்டில் புழங்கி வந்த ராசியான ஒரு நெருப்பு வைரத்தோடுகள் விற்கப்பட்ட போது அவள் பாவியாய் கருதப்பட்டாள்.

''இவ கல்யாணம் ஆகி இந்த வீட்டு வாசப்படியேறி வைக்கிற வரையில் எத்தனை சந்தோஷமான குடும்பமாய் இருந்தது இது! சுப காரியம் பெருக்க நிலைப்புமாய் எப்படி இருந்தோம்! இவ வந்தப்புறம் அடைகிறது ஒவ்வொண்ணா... சந்தோஷமும் போயிடுத்து.'' மாமியார் பேசும்போதும் சொல்லும்போதும் இவள் காதுபட பேசுவாள் மாமியார்.

இதையெல்லாம் கேட்டு இந்த நெருங்கும் மாமனாரைப் பற்றிய தப்பான எண்ணம் படிந்திருப்பதில் அதிசயமில்லை! கல்யாணம் நெருங்குமுன் அடக்கிக் கொண்டாள்.

''ஸலீமா... துண்டப்பா கட்டுபவர்கள்... உங்க ஆபீஸ்லே ஏதாவது ஒரு லோன் இருப்பார் பெண்பார்த் சொல்லுங்கள். கேட்டு எழுதிப்ப முடியுமா?''

''ஏன்...''

''நாது மனிக்கு அவசரமா ஒரு இடத்துக்குப் போக பர்மிஷன் கேட்கணும்... அப்படின்னு என்ன காரணம் படித்துச் சொன்னா... மறந்துடாம சொல்லிடுங்க..''

—என். எஸ். வி. குருமூர்த்தி

''அம்மா... இன்டர்வியூவுக்குக் கொஞ்ச நேரம்... அவங்களுடன் பேசக் கொடுத்து வைக்கத் தோட்டத்துப் பக்கம் அழைக்கக் கூட்டிப் போயிடு... எங்கேயாவது எதிரில் வந்து வைக்கப் போறே...''

மெல்லமெல்ல மைத்துனன் தன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருப்பது அரையும் குறையுமாய் இவள் காதில் விழுந்தது.

அவளுக்கு இருந்ததெல்லாம் ஒரே ஆதரவு தான்! கணவன் சீனுதான்! அன்றைய இரவில் அவளைத் தன் மொத்தத்தையும் இரவில் கணவனிடம் கொட்டுவதில் தான் ஆறுதல் அடைவாள்.

முதலிலெல்லாம் அவன் அவளுக்கு நிறைய ஆறுதல்கள் சொல்வான்! கட்டுப்படியாகவில்லை போலும்! இப்போதெல்லாம் மௌனமாய், பொறுமையாய்க் கேட்டுக் கொள்வதுடன் சரி. சில சமயங்களில் அவள் பொறுமையிழந்து திரும்பிப் படுத்துக் கொள்வதும் உண்டு. எது எப்படியானாலும் அவள் மொத்தத்தையும் கொட்டித் தீர்த்து விட்டுத்தான் தூங்குவாள். அவனுக்குத் தன் நிலைமை தெரிந்தால் போதும் என்ற ஆதங்கம் அவளுக்கு!

அன்று தான் மாடியின் வராந்தாவில் உட்கார்ந்து தூங்கிய ஷாஷா வராந்தாவில் வந்து உட்கார்ந்து இருந்தபோதுதான் அந்தக் குரல் கேட்டது.

''அம்மா... மனிஷப் பூம்மா... வாசலே மல்லிப்பூ... தாயீ...''

தெருவெங்கும் இங்கிருந்து பூ வாங்கினும் மணம் பரப்பும் விசேஷ வரும்போதும் கிண்ணப் பூ வாங்கி வாசல் இன்னுமொரு தடவை நிறைய வைத்துக் கொண்டாளே விட்டது.

''வேண்டாம்மா... நிறைய இருக்கு...''

''அப்படிச் சொல்லாதே தாயி. நேத்திக்கு நீதான் முதல் முதலாய் போணி பண்ணினே. ராசியாய் இருந்திச்சு. பத்தாம் நிமிஷம் அம்புட்டுப் பூவும் வித்துப் போச்சு. ஒரு அரை மொழமாச்சும் இன்னிக்கு வாங்கு... வெச்சுக்கிட்டுக் கையில் ஆட்டட்டு வாசத்து...'' என்று வாசல் கதவைப் மாமனாருக்கு மட்டுமல்லாமல் அந்த வீட்டின் அத்தனை காதுகளுக்கும் அதிர்ச்சியை விடுவிப்பதாக.

மாலா அதிர்ந்து எழுந்தே விட்டாள்.

''இரு. வரேன்...'' என்று காசைக் கொண்டு வந்து கொடுத்தாள். பூவை வாங்கிக் கொண்டு அவளை அனுப்பினாள்!

மாலாவுக்கு இப்போதும்! தன் கை ராசி யானது எனது இந்த ஏழை புகழ்ந்தது. இனி யாருடைய எந்த வார்த்தையும் தாங்கும் தெம்பை அளிக்கும் பரிசுத்தமான சிரிப்பின் அந்த வீட்டுக்காரர்களின் எல்லாம் கூடப் பழிப்புகளாய் மாறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

தெரு முனையில் காத்து நின்றிருந்த சீனுவுக்கு. தான் சொன்னபடி செய்த பூக்காரிக்குப் பர்ஸைத் திறந்து பத்து ரூபாய் அன்பளிப்பு அளித்தான்! இனிமேல் தினமும் பூக்காரி, மாலாவைத்தான் போணி பண்ணச் சொல்லுவான்!

வயது 3, ஊசியின் 30!

பல் மருத்துவரான என் கணவரின் இரண்டு அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டு அவர்களை எச்சரிக்க விரும்புகிறேன்.

"வாய்ப் புண் அதிகமாக ஏற்பட்டு பதினைந்து நாட்களாக வைத்தியம் செய்தும் குணமாகவில்லை. காரணம் என்ன?" என்று கேட்டவாறு ஒரு மூன்று வயதுக் குழந்தையை மிகவும் ஏக்கத்துடன் பெற்றோர்கள் தூக்கி வந்தபோது, திடுக்கிட்டார் என் கணவர். ரத்தப் பரிசோதனை செய்ததில் வெள்ளை அணுக்கள் மிகக் குறைவாக இருந்தது. காரணம் என்ன என்று துருவித் துருவி விசாரித்தபோது, முப்பது டெட்ரா சைக்ளின் ஊசிகளைக் குழந்தைக்குக் காய்ச்சல் என்று கூறி வைத்திய அறிவு அற்ற ஒரு போலி டாக்டர் வைத்தியம் செய்திருப்பது தெரிந்தது.

என்ன பரிதாபம்!

ஒரே மகவை இரண்டே நாட்களில் கண் முன்னே பலி கொடுத்தனர் அப்பெற்றோர்.

மேலும் கொடுமையான வேதனை என்னவென்றால், குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டதால் அத்தாய்க்கு மற்றொரு குழந்தை பெறும் பாக்கியமும் இல்லை.

இதே போலவே, காய்ச்சல் என்று அறுபது வயது [illegible], நல்ல செல்வச் செழிப்புள்ளவர், குளோரோமைசிடின் மாத்திரைகளைத் தாமே வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அதனால் ரத்த அணுக்கள் குறைந்தது மட்டுமின்றி, வாயில் நிற்காத ரத்தக் கசிவு ஏற்பட்டு, சிகிச்சை அளித்தும் பயனளிக்காமல் எட்டுக் குழந்தைகளைத் தவிக்க விட்டு இறந்தார்.

இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்?

(1 மருத்துவர்களின் அனுமதிச் சீட்டு இல்லாமல் மருந்துகள் விற்கக் கூடாது என்ற சட்டம் மேல் நாடுகளில் போல் கடுமையாக அமுலாகாமல் இருப்பது.

(2 ஒரு முறை மருத்துவரால் தரப்பட்ட மருந்துச் சீட்டைக் காட்டி, பல முறை எப்போது எந்த நோயானாலும் மக்கள் தாங்களாகவே மருந்து வாங்கி உண்பது.

(3 வியாதி உடனடியாகக் குணமாக வேண்டும் என்று இரண்டு, மூன்று ஆன்டிபயாடிக்குகளை ஒரே சமயத்தில் உபயோகித்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வது.

மேலும், குற்றமற்றதாகக் கருதிப் பலரால் தினசரி வழங்கப்படுகிற ஆஸ்பிரின் போன்ற தலைவலி மருந்துகளால் 'பர்ப்யூரா' (ரத்தக் கசிவு) நோய்கள் உண்டாகின்றன.

ஆகவே எந்த ஒரு மருந்தையும் மருத்துவரின் அனுமதி இன்றி சாப்பிடுவது மிகவும் தவறானது.

-லட்சுமி நடராஜன்

செலவு அல்ல முதலீடு

கோகுலம்

பெரியவர்களுக்காக வெளிவரும் பத்திரிகைகளை நீங்கள் விரும்பிப் படிக்கிறீர்கள்.

சிறுவர்களுக்காக வெளிவரும் 'கோகுலம்'த்தை உங்கள் குழந்தைகள் படித்து மகிழ வேண்டாமா?

இதற்காக நீங்கள் கொடுக்கும் பணத்தை 'செலவு' என்று எண்ணுகிறீர்கள். அது ஒரு 'முதலீடு'! ஆம், உங்கள் அருமைக் குழந்தைகளின் வருங்கால வாழ்க்கையை வளம்பெறச் செய்வதற்கான 'முதலீடு' அது.

தனிப்பிரதி ரூ. 2/
ஆண்டுச் சந்தா ரூ. 24/-
'கோகுலம்' கிண்டி, சென்னை-32

1984 பிப்ரவரியில் புதிய தொடர் கதை ஆரம்பமாகிறது. 16 பக்க வண்ணச் சித்திர மடலும் இடம் பெறுகிறது.

அபிமானவல்லி

அத்தியாயம் 12

ஆலோசனை மண்டபம்

வீழுந்தும் பாலும் விழித்தெழும் நேரத் தில் தஞ்சையிலிருந்து புறப்பட்டுச் சோழத் தலைநகரான பழையாறை நோக்கிச் செல் லும் நெடுஞ்சாலையில் ஆதித்தன் குதிரையைத் தட்டி விட்டுப் பயணப் பட்டுக் கொண்டிருந் தான். கம்பீரமான உயர்ந்த அரேபியக் குதிரையின் நெளிந்து பளபளத்த தசை களின் அழகும் வாலும் பிடரி மயிரும் பறக்கின்ற நேர்த்தியும், கட்டுப்படுத்த முடி யாத வேகம் தாவிச்செல்லும் தாளகதி நடை யாத அதன் கால்களின் இயக்கமும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தன. ஆதித்த னுக்கு முத்து முத்தாக வியர்த்து வழிந் தோடி உடலெங்கும் ஈரமாகியிருந்தது ஆனால் அவன் சற்றும் சோர்வுறவில்லை. முதலில் கிளம்பும் போதும் போது விருப்ப மகிழ்வு என்ற போட்டி யில் இறங்கி, குதிரைக்கு இணையான சுற்றி தனக்குமிருக்கிற நம்பிக்கையுடன் அவன் விரித்து அமர்ந்து குதிரையைச் செலுத்துகி றான். அந்த அழகில் ஒரு கம்பீரத்துடன் கனிவும் இருந்தது.

பழையாறை அரண்மனை வாசலில் வந்து வாளைக் இழுத்துவிட்ட நின்று துள்ளிக்குதித்தது குதிரை. மின்னலெனக் கீழிறங் கும் காவலர்களுடன் குதிரையை விட்டு இறங்கிய ஆதித்தன் அதனைத் தட்டிக் கொடுத்தான். அப்புறம், [illegible] ஒரு வந்த பணியாளரிடம் "கடம்பாளியைச் சீ க்கிரம் வரச்சொல்" என்று உத்தரவிட்டு விட்டு அரண்மனைக் குள் சென்றான். அங்கே அவன் நேர [illegible] இருந்தது [illegible] பார்த்திருந்தன.

ஒரு நாழிகை நேரம் [illegible] அவன் [illegible] [illegible]

கி.ராஜேந்திரன்

மேக் அப் செய்வார் யார்?

செய்தி கோடுகள்

● திடீரென்று விலை 25 சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. -புது புக்கி செய்தி

★ இது 'விலைவாசி ஏற்றத்தைக் குறைக்கப் போகிறோம்' என்று சொன்னவர்களை நாங்கள் முகத்தில் தாங்களே 'கரிபூசிக்' கொள்ளும் நடவடிக்கை!

● இனிமேல், சுற்றுப்பயணத்தின் போது ஏழைகள் வீட்டில் தான் சாப்பிடுவேன். -என். டி. ராமாராவ்

★ ஒருவேளை சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் ஏழைகள் வீட்டில் இருக்கும் 'கொஞ்ச நஞ்ச' உணவையும் இவர் சாப்பிட்டு விட்டால் அவர்கள் கதி?

● கொழும்பில் அமிர்தலிங்கம், இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை. -செய்தித் தலைப்புகள்.

★ 'கொழும்பில்' போதுமோ 'வில்' எதற்கு சமாதான வார்த்தை பேச?

● 'மேக் அப்' கலை பயிற்சி செய்துள்ள தமிழ் மகளிரை அழைத்து வர கமலஹாசன் அழைக்கப் போகிறார். -சென்னைச்செய்தி

★ அவர் கொடுத்த 'கால்ஷீட்'டுக்கான நேரத்தை எப்படி 'மேக் அப்' செய்யப் போகிறார்!

—மகரம்.

வெளிக்காரப் படையினர்'' என்றும் பார்த்திர சொன்னான்.

''அப்படியானால் சொல்லுங்கள்'' என்று தொடங்கிய அதிகன், முதலில் தன் தந்தையை நினைவுகூர்ந்தான். அவர் வீரத்தை வர்ணித்தான். அவருடைய எண்ணங்களை நிறைவாக்க வேண்டிய கடமை தனக்கிருப்பதை விளக்கினான். அவர் ஆணையை நிறைவேற்றுவதாகத் தான் சபதம் செய்து தந்ததையும் சொன்னான்.

அவன் தான் கருத்துகளைச் சொல்லி முடித்தபோது சமரசேகர பிரம்மராயரும் ''பிரபோ இதெல்லாம் எங்களுக்குத் தெரிந்ததுதானே! தாங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது. கூறுங்கள். காத்திரப் படையெடுப்புகளைத் தானே காத்திருக்கிறோம்'' என்றார்.

''ஆம் பிரம்மராயரே. தருணம் நெருங்கித்தான் விட்டது. எந்த எந்தப் படைகள் எந்தக் கடலில் இருந்து கிளம்பி எந்த வழியாகச் சென்று, எங்கே அவை வரும் சந்திக்க வேண்டும்; பிறகு, எதிரி நாட்டில் எந்தெந்த வழிகளில் எப்படி எப்படிப் பிரிந்து நுழைய வேண்டும்; எந்தெந்தத் திசைகளிலிருந்து யார் யார் நெருங்கி வந்து ஒரே சமயத்தில் எதிரியை எவ்வாறு தாக்க வேண்டும் போன்ற பல அம்சங்களை நாம் விரிவாக அடுத்த சில நாட்களில் விவாதிக்கப் போகிறோம்.

''ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட விரும்புகிறேன். வடதிசைப் படையெடுப்பில் கலந்து கொள்ள அனைவருமே ஆர்வமாக இருப்பார்கள். ஆனால் பின் தங்கியிருந்து நாட்டு நிர்வாகத்திலும் ஒருவேளை தெற்கேயிருந்து பகைவர் பாய்ந்தால் அவர்களை எதிர்த்துப் போராடுவதிலும் கவனம் செலுத்த முன் வருகிற வீரர், படையெடுப்பில் கலந்து கொள்கிறவர்களைப் போலவே என் மதிப்பில் உயர்வானவர்கள்.

''தங்களுடைய அரசியல் அமைப்பிலே படை வீரர்களும் போர்க்கலை கடமைகள் மட்டுமின்றி அமைதிக் காலப் பணிகளும் இணைந்தே உண்டு. கடலன்னைக்கு வருவாயும் உண்டு. அதனைத் தக்கபடி மட்டும் மின்றிக் கோவில் ஏற்படுத்த, குளம் வெட்டு வது போன்ற நற்பணிகளுக்குச் செலவழிப்பதனை கருதிசாரும் உண்டு. அரசுக்குச் சேர வேண்டிய பல்வேறு விதமான வரிகளை வசூலிப்பதில் வரிப்பொட்டகத்தைச் சேர்த்த சுமதி, மக்களின் நலனுக்கும் இங்கும் இருந்து மாறும் பணி வீரர் உதவியை நாடு இருக்கும் அமைதிப் போர்க் காலத்தில் வீரத்தை மட்டுமின்றி நாட்டு மக்களிடம் கருணையும் காட்ட நாம் பழக வேண்டும். முக்கியமாக நாம் வட திசை செல்லும்போது இடையே எதிர்ப்படுவோர் கருணையோடு நடத்தப்பட வேண்டும். என் பெரும் ஆசைதான்; ஆனால் அது கண்டிப்புக் காட்டாமல் செய்யப்பட வேண்டாது.''

''அப்படியே செய்கிறோம்'' என்றார் சமரசேகர பிரம்மராயரும். ''பிரபோ! படையெடுப்புகளை நாளை நிர்ணயித்துப் போர்த் தந்திரங்களையும் விரிவாக விவாதிக்கத் தொடங்கு முன்னர் ஒரு வேதனையை வெளியிட்டு விளக்கம் பெறவும் விரும்புகிறோம். அதற்குத் தங்கள் அனுமதியும் கோருகிறோம்!''

வியப்புடன் அதிகன் அவர்களை ஏறிட்டுப் பார்த்தான். ''உங்களுடைய மனம் ஏதோ சொல்ல வேண்டுமென்று துடிப்பதை உணர்ந்து அதைச் சொல்லித் தரும் வரத்திருக்கிறேன். அனுமதி கேட்பது ஆச்சரியமளிக்கிறது!''

''பிரபோ... விக்கிரமன் தொடர்பாக...''

''ஓ! அதுவா!... செய்த குற்றத்துக்குத் தண்டனை பெற்றான். அதுபற்றி விவாதிக்க என்ன இருக்கிறது?''

''முன்னவா! குஞ்சரமல்லர்களின் தன்னிக ரற்ற தலைவன் அவன். மற்ற பல போர் முறைகளிலும் அபாரத் தேர்ச்சி பெற்றவன். யுத்த தந்திரங்களை அறிந்தவன்...''

''நீண்ட விளக்கம் எதற்கு?'' என்று குறுக்கிட்டான் ஆதித்தன். ''என் வலக்கர மாகத் திகழ்ந்தான் என்றால் போதாதா? அப்படியிருந்தும் அவனை நான் கண்டித்தேன் என்றால்... நீதி வழுவக் கூடாது என்று தானே... போதிக்க வேண்டுமா?''

''அதனால் நம் போர்த் திறன் எந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பதையும் சிந்திக்க வேண்டாமா? அதுவும் படையெடுப்பு நெருங்கி வரும் இவ்வேளை யில்...''

''அதை யோசனையே போதித்து விட் டேன்'' என்று ஆதித்தன் கூறவும், ''ஆ! அப்படியா!'' என்பது போன்ற பாராட்டுத் தொனியுடன் கூடிய வியப் பொலியும் எழுந்தது.

''ஆம் பிரம்மராயரே! பாண்டியனைப் பொறுத்தமட்டும் சோழ விஜய பாருன்றே! எனவே என் ஆருயிர் நண்பன் சேரமான் காறுமனுக்கு ஓலை அனுப்பியிருக் கிறேன். அவன் தன் குஞ்சரமல்லர்களின் தளபதியை இந்தப் படையெடுப்பு வெற்றி கரமாக முடியும் வரை எனக்குக் கடனாகக் கொடுத்து உதவ வேண்டும் என்று கோரி யிருக்கிறேன். தானுறவினை வடக்கே நான் படைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்லு முன் சந்திக்க ஆர்வமாய் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறேன். அவரே தன்னைக்கு விருப்பம் செய்தாலும் செய்யலாம்.''

திருப்தி அடைந்தவர்களாகத் தலையசைத்த பிரம்மராயர்கள். இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் நீடித்த ஆலோசனைகளைத் தொடர்ந்தனர்.

● ● ●

தில்லையிலிருந்து நம்பியாண்டார் நம்பி தம் சீடர்களுடன் புறப்பட்டுப் பல நாட் களாகி விட்டன. உறையூர் செல்லும் சாலையில் அவர்கள் ஒவ்வொரு திருத்தல மாகத் தரிசித்துக் கொண்டு முன்னேறினர். தெய்வ வழிபாடும் தலயாத்திரையும் தேவாரப் பாடல்களும் மன அமைதியைத் தனக்கு அளிக்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்தான் விக்கியண்ணன்.

அவன் தவிப்பைக் கவனித்து வந்த நம்பி ஒருநாள் அவனிடம் அன்புடன் பேச்சுக் கொடுத்தார். குடந்தை கிடைத்ததும் சிற்றன்பு சமைத்துண்ணவும் வசதி மிகுந்த ஓர் அம்பலத்தில் அவர்கள் இராத் தங்கியபோது அவனைத் தனியே அழைத்து விசாரித்தார். ''அப்பனே! உன் மனம் இறைவன் சன்னிதானத்தில் கூட நிம்மதி அடையாமல் குமுறுவது போலவே உணர் கிறேன், அப்படித்தானே?''

அவர் பரிவு காட்டவே காத்திருந்தது போல விக்கியண்ணனும் தன் வேதனைகளைக் கொட்டித் தீர்த்தான். ''சுவாமி! ஆதித்த னுக்காக நான் எப்படியெல்லாம் உழைத் தேன். அரசி வானவன்மாதேவியிடம் எவ்வளவு ஆழமான காதல் கொண்டிருந்தேன். தெய் வம் என்னை ஏன் சோதிக்கிறது? நான் முறை மறந்து ஒரு தவறும் செய்யவில்லையே!''

''அப்பனே நல்லவர்களைத் தான் கடவுள் அதிகமாகச் சோதிக்கிறார். அந்தச் சோதனை யில் நீ வெற்றி பெற வேண்டும்.''

''எந்த வகையில் சுவாமி?''

''உன் உள்ளத்தில் ஆதித்தன்மீது வெறுப்போ, கோபமோ, வஞ்சம் தீர்க்கும் எண்ணமோ, காழ்ப்புணர்வோ ஏற்படாமல் காக்க வேண்டும்.''

''அந்த எண்ணமே எனக்கில்லையே, சுவாமி! காதலையும் நட்பையும் திரும்பப் பெறத் தானே நான் ஏங்குகிறேன். அடுத்தடுத் ஏற் பட்ட ஏமாற்றங்களைத் தாங்க முடியாமல் பரிதவிக்கிறேன். ஆனால் நான் குற்றமற்ற வன் என்பதை எப்படி ஆதித்தனுக்கு நிரூபிப்பேன். அவர் நன்மதிப்பைத் திரும்பப் பெறும் மார்க்கம் என்ன? அபிமான வல்லியை மறுபடி என் வாழ்நாளில் நான் சந்திக்க முடியுமா? என் பரிசுத்தமான காதலை வெளிப்படுத்த இயலுமா?''

''கலங்காதே மகனே!'' என்று தேற்றினார் நம்பி.

''சுவாமி, சுலபமாகச் சொல்லி விட் டீர்கள். நான் படும் அவதி எனக்கல்லவா தெரியும்? செய்யாத குற்றத்துக்கு நான் ஏன் தண்டனை பெற வேண்டும்? பிறரது தப்பை மன்னித்து ஏற்று வாழ வேண்டும்? எத்தனை காலம் நான் மாறு வேடத்தில் திரிவது? சோழநாட்டை விட்டு வேறு நாடு சென்றாலும் மன அமைதி எனக்கு எவ்வாறு கிடைக்கப் போகிறது?''

''ஆண்டவன் வழிகாட்டுவான்!''

'கருவறையில் கல்லாக நிற்கும் கடவுள் நான் மானசீகமாக எவ்வளவோ வேண்டியும் இதுவரை எனக்கு ஏமாற்றத்தையே அளித்து வந்துள்ளார்.''

''இறைவன் எப்போது, எவ்வாறு, யார் மூலம் செயல்படுவார் என்பதை நாம் அறியோம். அப்பனே, எனக்கு ஓர் உபாயம் தோன்றுகிறது. கவனமாகக் காது கொடுத்துக் கேள்'' என்றார் நம்பி.

(தொடரும்)

''டே விசேஷமாக் கேட்டிருந்தீங்களே வந்துட்டதா?''

''இன்னும் வரலே. ஆறு பின் மட்டும் வர ஆரம்பிச்சுட்டது.''

—சேலம், அ. பதிவேல்.

கதை நிமிர்வதற்குள் கழுத்து தொங்கிப் போகிறது !



ஆனந்த கும்மி

● இளையராஜாவின் சொந்தத் தயாரிப்பு. 'வா... துபுா துபுா...' என்று கோரஸின் குரல்களின் கூட்டு அமர்க்களத்தோடு நிறைந்து உயிர் வருகிறது. [illegible]. [illegible]. இரட்டை அர்த்த வசனங்களுடன் ஆரம்பக் காட்சி.

'கவிஞர் வைரமுத்து'வின் கதை. விதவைத் தாயாருக்கு ஒரு பெண். அநாதையான பண்ணையாருக்கு ஒரு பையன். இரண்டு பேரும் [illegible] கட்டி விளையாடுகிற போது பின்னணியில் பாட்டு. பாட்டு முடிகிற போது பருவங்கள் மாறி அரும்பு மீசைப் பையன், தாவணி போட்ட பெண். ஆட்டோடு ஆடாய் பட்டணம். காலேஜ். தாவணி போய் மாடர்ன் உடை. கல்லூரியில் கலாட்டா, [illegible] [illegible]. ராத்திரி [illegible] என்று 'இளைய பிறவி'களின் கொட்டம். இடைவேளைக்கு அப்புறம். முக்கால்வாசி நேரம் வரை இதை வைத்தே கதை பண்ணி விட்டு ஒரு விக்ரமாதித்த முடிச்சு போட்டுக் கதையை நிமிர்த்துவதற்குள் நம் கழுத்து தொங்கிப் போகிறது. நாயகியின் அம்மாவும் நாயகனின் அப்பாவும் [illegible] மாறிப் போகும் காதலிக்கிற பெண்ணும் பையனும் அண்ணன் தங்கையா. [illegible] என்பது [illegible] பிரச்னை. ஆருக்கு ஆள் குழப்பிருக்கள், குழப்பிருக்கள். 'இந்தா வச்சுக்கோ' என்ற மாதிரி ஒரு முடிவோடு குழப்புகிறது.

பணக்காரன் பிரசவம். ஒவ்வொரு ஷாட்டோடு ஒவ்வொரு காமிரா (ஜெயனன் வின்சென்ட்) [illegible] இருவையைக் கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம்.) இனிமையான இசை (இளையராஜாவின் இரண்டு பாடல்களைக் காதில் ஒத்திக் கொள்ளலாம்.) ஆனால் இவையெல்லாம் சேர்த்துக் கருத்த கதை எடுப்பாய் இல்லை. பாடலாசிரியர் 'செவ்வந்தி' [illegible] இலைகளாவன. பூ. கல். மண். ஆண் முகம். பெண் முகம். மேகம். இருட்டுப் பின்னணி. ஒளி வெள்ளம். ஆட்டம், ஓட்டம் என்று [illegible] [illegible] எடுத்து ஒட்டிவிட்டு, பின்னும் கோர்வைப் போட்டு விட்டால் – எந்த அர்த்தப்போது என்றும் சரி. ட்ரெண்டே அப்படி என்றால் அழுத்தப் போகாது?

பொருளாக்க காதல் படங்கள் என்றும் படம் தேடி ஒரு கிறுகிறுப்பு [illegible] [illegible] படித்திருக்கும். [illegible] அதிகமான பாரதத்தின் அரும்பு மீசையை [illegible] அசைந்து. [illegible] [illegible] முடியவில்லை. [illegible] [illegible] [illegible] (அனில்?). பெயர்க் குழப்பம் [illegible]. [illegible] இப்போது பிடிக்கவில்லை. [illegible] [illegible] இருப்பார் என்று [illegible]. 'மப்பட்டுவாய்' [illegible] ஒரு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

-ஜெயமன்மதன்



மாணவர் பக்கம்

"Behold I bring the life eternal" என்ற வாக்கியத்தின் முதல் எழுத்துக்கள் சேர்ந்துதான் BIBLE என்ற சொல் உருவாயிற்று.

மாப்பிள்ளை காப்பி பார்

திருப்பூரில் கருமம்பாளையத்தில், மங்கலம் ரோட்டில் உள்ள ஒரு காப்பி கடையின் பெயர் "மாப்பிள்ளை காபி பார்." இங்கு 1 ரூபாய்க்கு [illegible] சாப்பிட்டால் ஒரு பொங்கல் தருகிறார்கள். [illegible]

'பூ ஏ'

தமிழ்ப்படங்களில் முதன் முதலில் 'பூ ஏ' என்ற சென்சார் முத்திரை பெற்றுள்ள படம் — "புதிராவிப் பைத்தியங்கள்!"

எம். சுதிரேசன்,
இளங்கலை இரண்டாம் ஆண்டு,
[illegible] அரசு கல்லூரி,
[illegible].

[illegible] ஒரே கவி!

கவி காளமேகம், செல்வந்தர் காத்தான் வைத்துள்ள தர்ம சத்திரத்தில் சாப்பிடுவதற்காகப் போனார். சத்திரத்தில் திண்ணைச் சாப்பாட்டைக் குறித்தும் விதமாகப் பாடிக் கொண்ட ஒரு கவிதைக் கவரில் எழுதி விட்டு நடக்கலானார்.

கத்துக்கடல் நாகைக்கு காத்தான் தன்
சத்திரத்தில் அத்தமிக்கும்போது அரிசி
வரும்;
குத்தி உலையிலிட ஊரடங்கும்; ஓரகப்பை
அன்னம் இலையிலிட வெள்ளி எழும்!

பொருள்: கடல் சூழ்ந்த நாகப்பட்டினத்து காத்தானுக்கு சத்திரத்தில் இருட்டும்போது அரிசி வரும். அதைக் குத்தி (தீட்டி) உலையில் இடும் போது ஊரெல்லாம் தூங்கி விடும். (ஊரடங்கும்) இலையில் சாதம் வைக்கும் போது விடிந்து விடும் என்பதாகும்.

காத்தான் அடுத்த கவியை வாங்கிப் பாட்டை மாற்றி எழுதும்படி கெஞ்சினான். புகழும் கேவலம் தனித்து. அந்தக் கவியே பொருளையும், பொருள் மாற்றிக்கொள்ளலாம் என்றும் சொன்னார்.

மாற்றுப் பொருள்: காத்தான் சத்திரத்தில் இருட்டும் போதும் அரிசி வரும். (அஸ்தமன கட்டம்). அந்த அரிசியோ கொஞ்சமில்லை. சமைத்தால் ஊரடங்கும். அதாவது ஊர் முழுவதும் சாப்பிட முடியும். ஓரகப்பை அன்னம் இலையிலிட (அந்த சோறு இட்டப்பட்ட அரிசி வாதனைகள்) பிரகாசிக்கும் (வெள்ளி எழும்).

கவிஞரும் பொருள் கொடுத்தார், [illegible] கவிஞருக்குப் பொருள் (செல்வம்) கொடுத்தார்.

—பேராசிரியர் சொன்னதைக் கேட்டு எழுதியவர்: ஆர். விஜயன் பி.ஏ. (பொருளாதாரம்)
மூன்றாம் ஆண்டு,
அரசினர் கல்லூரி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

மாணவர் பல போக்குவரத்தைச் [illegible] ''வடை'' [illegible] வெளியிட்ட [illegible] பேருந்தை [illegible] பிறகும் [illegible] போக்குவரத்துக் கழகத்தை [illegible] என்பதற்கு அடை[illegible] முன்புறம் உள்ள [illegible] திருக்கியுடன் [illegible] இறக்கிவிட்டு விடுகின்றனர். அதைப் புரிந்து கொண்டு ஓட்டுனர் [illegible] பேருந்துகளை [illegible] கொள்கிறார்கள்.

அது சரி! நான் சொல்லவேண்டு வேடு யாரும் இதைப் பரிட்சை செய்து பார்க்காதீர்கள்! அப்புறம் என் பாடு ஆபத்தாகி விடும்!

—நா. [illegible]
முதலாமாண்டு.
பி. எஸ்ஸி. வேதியியல் பிரிவு,
ஸ்ரீ[illegible] கல்லூரி,
தேவகோட்டை.

நகைவலம்

○ [illegible]

ஒரு புத்தகக் கடையில். ஆறு மாதங்களுக்கு முன் கொடுத்த புத்தகங்கள் ஷோகேஸில் அப்படியே இருப்பதுகண்டு ஆயாசப்பட்ட ஒரு கவிஞர், பிறகு மூன்று மாதம் கழித்துச் சென்றபோது, இரண்டே இரண்டு பிரதிகள் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தாராம். கடைக்காரரை விசாரித்தபோது, "இடமில்லாததால் மற்ற பிரதிகளை உள்ளே எடுத்து வைத்திருக்கிறேன்" என்றதும் மகிழ்ச்சி இருந்த இடம் தெரியாது போய்விட்டது" என்று புத்தக விற்பனையில் தேக்கம் பற்றி வருத்தப்பட்டார் அந்தக் கவிஞர். இடம்: தமிழ் குப்புசாமி செட்டியாரின் 'செய்யும் தொழிலே தெய்வம்' வெளியீட்டு விழா. அந்தக் கவிஞர் வைரமுத்து.

○ [illegible] கவிஞர்.

கவிஞர் ஒருவருக்கு அவர் வாழ்நாளில் [illegible] வைத்து. செலுத்திக் அவர்கள் [illegible] ஆசைப்பட்டு பத்தாயிரம் [illegible] செய்தாராம். இதை [illegible] அந்தக் கவிஞர் பேசும்போது, "ஆயிரம் ரூபாயில் ஒரு பிடத்தைக் கட்டிவிட்டு, மீதியை என்னிடம் கொடுத்து விடுங்கள்" என்றாராம். [illegible] "எனக்கும் பணம் கஷ்டம். [illegible] செத்தால் பிறந்த நாளில் [illegible] [illegible] போட்டு [illegible]. [illegible] [illegible] வந்து பீடத்தில் [illegible] [illegible] கொள்ளுகிறேன்" என்று [illegible] கவிஞர். [illegible] [illegible] விழாவில் [illegible] [illegible].

கொக்கரக்கோ என்றால் என்ன?

தமிழ்நாடு தலைவர் ஒருவர் மனைவியின் [illegible] இசை விழாவின் மேடையில், "சம்பூர்ணத்தில் வரும் ஏழு ஸ்வரங்களும், ஏழு சாகங்களின் பிரதிநிதிகளாவர்" என்று சொன்னதும், மேடையிலிருந்த பத்மா சுப்ரமணியம், சொல்லக் கேட்டுப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டார். பின்னே "சாகங்களையும், ஸ்வரங்களையும் போட்டுக் குழப்பிக்கொண்டு 'அபஸ்வரம்' தொனிக்கப் பேசினால் சிரிப்பு வராதா என்ன?

○ [illegible]

பாலகாடம். மந்திரத்தை கூட [illegible] [illegible]" என்று சொன்ன மந்திரத்தை [illegible] "இன்னும் இரண்டு மூன்று [illegible] நடத்திவிட்டு, மந்திரத்தை [illegible]" என்று கேட்டுக் கொண்டார் திருக்குறளார் "[illegible] 'திருக்குறளார் வந்தார். [illegible] [illegible] விட்டது' என்று பழி என்மேல் வந்துசேரும்!" [illegible] நடந்த ஒரு விழாவில் திருக்குறளார் [illegible] விஷயம் இது.

கொக்கரக்கோ என்றால் என்ன?

'கொக்கு' என்றால் மாமரம். 'அறு' என்றால் அறுத்தவர். 'கோ' என்றால் தலைவன். மாமரத்தை இரு கூறாக அறுத்த முருகனை இந்தச் சொல் குறிக்கிறது—புலவர் கீரன் சொற்பொழிவிலிருந்து.

-சின்ன கோபால்.



வட்ட மேஜை

● 8.1.84 இதழில் வெளியான கருத்துப் படம் என் மனத்தில் ஒரு கவிதையைத் தோற்றுவித்தது.

''ஓட்டுகளைப் பிடிப்பதும்
உயர்த்திப் பிடிக்கத்தான்
அடிக்கடியிரண்டு வேண்டுமென்று
அமைக்கிறேம் சின்னங்களை.
வார்த்தை வெறும் வசனங்களே
வருகின்றன அரசியலார்.''

சீர்காழி. அருள்செல்வன்.

● தெளிவானவன் கருப்பு மாலையின் ''தூரத்தில் தூறல்கள்'' ஒரு மனோரஞ்சிதம்.
மதுரை–1. நிருபதி. தேவநாதன்.

● நடுப்பக்கத்தில் பிரமுகர்கள் தெரிவித்த ''புத்தாண்டு வாழ்த்துக்கள்'' அட்டகாசம். வெட்டல் – துவைத்தலை – உளுவது!
சென்னை. செ. பாபு.

● கவர்ச்சி மிகுந்த நான்கு பக்க செய்திப் படங்கள் – வாசகருக்கு வாழ்த்து – எங்களுக்கு கல்வி தரும் புத்தாண்டு இதழல்லவோ?
கோவை–35. ஏ. எஸ். கண்ணன்.

● என்னதான் பாசத்தைக் கொட்டினாலும் மோசத்தில் முடியும் பாசங்களும் இருக்கத் தான் செய்கின்றன. 'நிலாத் தேடும் கோளங்கள்' சிவாஜனிமைனைப் போல அன்பைத் தேடும் இதயங்கள் மிகப்பல உண்டு.
திண்டுக்கல். எஸ். பி. டி. ராஜன்.

● 'கனல் மூட்டும் கடமை' பிரசுரத்தில் ''சம்பிரதாயம், இல்லாட்ட நாகரிகமுது! பேரூர் சொல்லுங்கோ; கடமையன்று! சொல்லாதீங்கோ'' – மகனின் தர்க்கம்! கட்டுப்போட்ட (புதுக்) கவிதை வரிகள் போல என்றென்றும் நெஞ்சில் நிற்கத் தக்க கவியது!
தஞ்சாவூர். இந்திரா மோகன்.

● உலகை ஓர் உலகம் கல்வியின் மகுடம்.
விருத்தாசலம். பாலாம்பிகா.

● 'தாழ்த்தப் பட்டோரின் தேசம்' தலைவர்கள் மூலம் இந்திரா அவர்களின் துணிவைத் துணிந்து தங்கள் பத்திரிகை யின் வாயிலாகக் கூறி, தாங்கள் என்றும் 'மொழிக்காக்கும் தேசம்' என்பதை நிரூபித்து விட்டீர்கள்!
விழுப்புரம்–2. என். சிந்தாமணி.

● உங்கள் தலையங்கம் ''தாழ்த்தப்பட் டோரின் தேசம்'' விருட்சமானது. சாதிப் பித்தும் பிடித்தது. திரு. இந்திராவின் ஒரு திட்டமிட்ட பிற்போக்கு வாதி. அவர் பிரசங்கத்துக்கு பாரிவெண்டிக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது மிகவும் சரியே.
சென்னை–11. எம். வி. நீ. சுவாமி.

● கட்டுப்போட்ட
கவிதை
வரிகளே
கல்லுக்கு
கண்டோமய்யா...
கவிப்புனிதக்
கொண்டோமைய்யா
மக்களி(டம்)
கன்னியோடே
கட்டுக
கொண்டோமய்யா!
சென்னை–81 [illegible].

● தங்களுடைய 1.1.1984 இதழில் ''சொகுசான சவாரி'' என்ற கட்டுரையில், திரு. ரஞ்சித் பிரதாப் அரும்பாடு பட்டு சிப்காட் (SIPCOT) நிறுவனத்திடமிருந்து பொருளுதவி பெற்றார் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இது சிப்காட்டிடமிருந்து நிதியுதவி பெறுவது ஒரு கடினமான செயல் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. இந்நிறுவனத்திடமிருந்து நிதியுதவி பெறுவதன் எளிய முறையில் என் அனுபவம் முற்றிலும் மாறுபட்டது. சிப்காட் உள்ள மையில் வேலை வரும் தொழிலுக்கு நண்பன். தகுதியுள்ள எந்தக் கடன். தருவதற்கு நாள் நிர்ணயிக்கத் தகுதியில்லை. அந்த சிவப்பு நாடாவும் இல்லை.
சென்னை–41. என். சுப்பிரமணியம்

[illegible]

சிகப்புநாடா இல்லாத 'சிப்காட்'!



CIGARETTE SMOKING IS INJURIOUS TO HEALTH

"ஐ.நா. பொதுச் சபையில் இலங்கை பற்றி என் கணவர் பேசி முடித்ததுடன் யாரும் கைதட்டவில்லை. எனக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது. ஐ.நா. சபையில் பேசி முடித்ததுடன் யாரும் கைதட்டக் கூடாது என்று விதி உண்டாம்! கைகுலுக்க நான் அனுமதி. இந்த விஷயத்தைப் பின்னர் தான் தெரிந்து கொண்டேன்'' என்றார் அமெரிக்காவில் மூன்று மாதம் தங்கி விட்டுத் திரும்பிய மின்சார அமைச்சர் திரு ராமச்சந்திரனது மனைவி திருமதி சாந்தி.

● நியூயார்க்கில் எங்கே தங்கியிருந்தீர்கள்?
'அங்கு 'மன்ஹாட்டன்' என்ற ஹோட்டலில் 'அபார்ட்மென்ட்' மாதிரியுள்ள ஒரு பகுதியை எங்களுக்குக் கொடுத்திருந்தார்கள். நாங்களே சமைத்துச் சாப்பிட வசதியாக இருந்தது.

● ஐ.நா. சபையில் அமைச்சர் எத்தனை முறை பேசினார்?
மொத்தம் மூன்று முறை பேசினார். இலங்கைப் பிரச்னை தவிர, உணவு நிலை, தமிழர் போன்ற பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினார்.

● அமெரிக்காவில் வேறு எங்கு போயிருந்தீர்கள்?
கலிபோர்னியா, பிளோரிடா மாகாணங்களுக்குச் சென்று இருந்தோம். டிஸ்னி உலகம், நயாகரா நீர்வீழ்ச்சி மற்றும் மின்சார நிலையங்கள் பலவற்றிற்குச் சென்றிருந்தோம். நயாகரா நீர்வீழ்ச்சியை மறக்க முடியாது. மலை, ஆறு போன்றவைகள் நீர்வீழ்ச்சியில் உள்ளே இருக்கின்றன. அந்த நீர்வீழ்ச்சியில் படம் எடுத்தால் வெளிப்புறப் படப்பிடிப்புக்குப் போகவே வேண்டாம்.

● அமெரிக்காவில் இருந்து என்ன வாங்கி வந்தீர்கள்?
நாங்கள் வாங்கி வந்தது துணிமணிகள் தான். ஐ.நா. சபையில் பேசியதற்கு அடையாளமாக ''அமைதி'' என்ற எழுத்துக்கள் உள்ள டாலருடன் கூடிய தங்கச் சங்கிலி ஒன்றை அங்கிருந்து வாங்கி வந்தோம். அந்தச் சங்கிலியை முதல்வருக்கு அன்புப் பரிசாக வழங்கி விட்டார் என் கணவர். அங்கேயே ஒரு காமிரா வாங்கி என் கணவர் பல்வேறு இடங்களுக்குச் செல்லும் போது படம் எடுத்தேன். என் கணவருக்கு நான் தான் போட்டோகிராபர்.

● நீங்களும் அரசாங்க செலவில்தான் சென்றீர்களா?
'இல்லை'. மீனம்பாக்கத்தில் விமானம் ஏறியது முதல் மீண்டும் அங்கு வந்து இறங்கும் வரை எங்கள் சொந்த செலவில் தான் சென்று இருந்தேன். அமைச்சருக்கு மட்டும்தான் அரசாங்கச் செலவு. அவர் இங்கிருந்து அமெரிக்கா சென்று நான்கு நாட்களுக்குப் பிறகு தான் நான் சென்று அவருடன் சேர்ந்து கொண்டேன்.

● அமெரிக்காவாழ் இந்தியர்கள்—குறிப்பாகத் தமிழர்கள் எப்படி இருக்கிறார்கள்?
அங்கு வசதியாகத் தான் வாழ்கிறார்கள். கணவன் — மனைவி இருவரும் வேலைக்குச் சென்று விடுகிறார்கள். காலையில் சென்றால், இரவு தான். குழந்தைகளைக் கவனிக்க நேரமே இருப்பதில்லை. அப்பா—அம்மா வேலைக்குச் சென்றதும், குழந்தைகள் இஷ்டப்படி இருக்கிறார்கள். 'டீன் ஏஜ்' உள்ள பையன்கள், பெண்கள் டி.வியிலும் ஆபாசமான படங்களைப் பார்த்துக் கெட்டுப் போகிறார்கள். 'டேட்டிங்' வைத்துக் கொள்கிறார்கள். இதனால் பெற்றோர்கள் மிகவும் கவலைப்பட்டுப் போயிருக்கிறார்கள். தங்கள் குழந்தைகள் தாய்நாட்டில் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

● அமெரிக்காவில் ஏதேனும் கோவில்கள் தென்பட்டனவா? சென்றிருந்தீர்களா?
எங்கள் குடும்பத்தில் யாரும் கோவில் குளம் என்று போவதில்லை. எங்கள் வீட்டில் பூஜை அறை கிடையாது. பண்டிகைகளில் கூட பொங்கல் மட்டும் தான் கொண்டாடுவோம். என் தந்தையார் திராவிடக் கழகப் பிரமுகர். அமைச்சருக்கு நம்பிக்கையும் விருப்பமும் இல்லை' என்று கூறும் திருமதி சாந்தி ராமச்சந்திரன் சென்னை எம்.ஏ. பி.எட். வரை படித்தவர். 1964-ல் சென்னையில் அமைச்சரைச் சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டார்.

—நமது நிருபர்

என் கணவருக்கு நான்தான் போட்டோகிராபர்

ஈழத் தமிழர் தலைவர் அமிர்தலிங்கத்தின் மனைவி திருமதி மங்கையர்க்கரசி. அரசு விருந்தினர் மாளிகையின் அறை எண் 201-ல் சந்தித்தேன் அவரை.

பேசிக் கொண்டிருந்த போது அவர் 50 வயதுக்காரர் என்று தெரிய வந்தாலும், பார்க்க அப்படித் தோன்றவில்லை.

பள்ளிக்கூட, கல்லூரி நாட்களில் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று, பரிசுகள் வாங்கிக் குவித்திருக்கிறாராம். கர்நாடக இசையில் மிகுந்த ஆர்வம். கச்சேரிகள் கூடச் செய்திருக்கிறாராம்.

51-ல் இவர் படித்த கல்லூரி விழாவில் இறைவணக்கம் பாடின போது, இளம் வக்கீல் – எம்பி – அரசியல்வாதி அமிர்தலிங்கம் இவரை முதல் தடவையாகப் பார்த்தாராம். ''ரொம்பவும் பிடித்து விட்டது அவருக்கு'' என்றார்.

முதல் பார்வையிலேயே பிடித்துவிட்டது

''திருமணம் 54, நவம்பர் 8-ம் தேதி.

''[illegible]. மறியலில் பங்கு பெற்று, தாக்கப்பட்டு, ரத்தக்கறையுடன் வீட்டுக்கு வந்ததுமே ஒரு சவால் நிறைந்த மண வாழ்க்கைக்குத் தயாராகி விட்டேன்.

''திருமணத்துக்குப் பின் பல மறியல் போராட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கிறேன். கட்சிக் கூட்டங்களில் ஆரம்பகாலத்தில் பாடல்கள் பாடி வந்தேன். பிறகு பேசவும் ஆரம்பித்தேன்.

''சிங்கள எழுத்தில் கார் நம்பர் பிளேட்களில் பொறித்த போது, அதை எதிர்த்து, அவற்றை அழித்து, தமிழ் எழுத்துக்களை எழுதுகிற போராட்டத்தின் போது, மூத்தவன் காண்டீபன் ஒரு வயதுக் குழந்தை. அப்போது குழந்தைக்குப் பாலூட்டி விட்டு, வரும் கார்களை மறித்து, நம்பர்களை அழித்து எழுதினோம். கைது செய்தார்கள். ஒருநாள் சிறை தண்டனை.

''61 போராட்டத்தின் போது, 74 தலைவர்கள், தொண்டர்களுடன் என்னையும் சேர்த்துக் கைது செய்து, இரவோடிரவாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கொண்டு சென்று ராணுவ முகாமில் காவல் வைத்தனர். 6 மாதங்கள் அங்கே இருந்தோம்.

''நான்கு மாதங்களுக்குப் பின் என் அம்மாவிடம் வளர்ந்த என் மூத்த மகன் காண்டீபன் (அப்போது வயது 4) இளையவன் பகீரதன் (வயது அப்போது ஒன்று) இரண்டு பேரையும் பார்க்க அனுமதித்தார்கள். எங்களை முகாமில் பார்த்ததும் மூத்த மகன் அடையாளம் தெரிந்து கொண்டான். ஆனால் குழந்தை பகீரதனுக்கு என்னை அடையாளம் தெரியாமல், என்னிடம் வர மறுத்து அழுதான். பெற்றவளையே பிள்ளைக்கு அடையாளம் தெரியாது போனதைக் கண்டு எனக்கு அழுகை தாங்க முடியவில்லை, அங்கிருந்த சிங்களக் காவலர்களையே சஞ்சலப் படுத்திவிட்ட சம்பவம் அது.

''இப்போது காண்டீபன் இங்கிலாந்தில்; பகீரதன் மதுரை மருத்துவக்கல்லூரியில். மூத்தவன் இலங்கை அரசு அறிவித்துள்ள 38 பயங்கரவாதிகளுள் ஒருவன்.''

மேலும் திருமதி அமிர்தலிங்கம் சொன்னார்: ''நான்தான் வீட்டில் சமைப்பேன். என் கணவருக்குக் காரம், எண்ணெய் இவை கூடாது. அவருக்கு இடியாப்பம் ரொம்பப் பிடிக்கும். அரிசி சாப்பிடுவது கிடையாது. சப்பாத்திதான். ஸ்வீட் ரொம்பப் பிடிக்கும். விதவிதமாகச் செய்து கொடுப்பேன்.''

வேறு ஏதாவது மறக்கமுடியாத சம்பவம்?

''நிறைய. இவர் பார்லிமெண்டுக்கு எதிரில் போராட்டத்தில் இருக்கிறார். நான் பிரசவ வேதனையில் ஆஸ்பத்திரியில். அவருக்கு என்னை வந்து பார்க்க முடியாத சூழ்நிலை. எனக்கோ சிசேரியன் செய்து ஆக வேண்டிய நிலை. அவர் வந்த பின்தான் பெற்றுக்கொண்டு முடிவெடுக்க முடியும். இந்தக் குழப்பமான சூழ்நிலையில் எனக்கு மயக்க மருந்து தந்து, நாலு நாட்கள் மயக்க நிலையில் இருக்க வைத்து, அவர் பயங்கர தாக்குதலுக்குள்ளாகி, மண்டையுடைபட்டு, என்னைப் பார்க்க வந்தபின், அனுமதி பெற்று, சிசேரியன் செய்தார்கள். அடுத்த குழந்தையும் சிசேரியன்தான்.

''என் மண வாழ்க்கையில் நான் கண்ட குழப்பமான சூழ்நிலைகள், துக்கமான – கோரமான சம்பவங்கள் – ஏராளம். ஆனாலும் என் கணவருக்குத் துணை நின்று, தமிழின உயர்வுக்கு உழைப்பது எனக்கு சந்தோஷத்தையும், மன நிம்மதியையும் தருகிறது.'' பேட்டி: என். சந்திரமௌலி

படம்: ஸ்ரீதரன்

ஜீன்ஸ் - ஜிந்தாபாத்

ஜீன்ஸ்' - இதை அணிவதற்கு வயது வரம்பு கிடையாது. நாற்பது வயதுக் காரர்கள் கூட ஜீன்ஸை விரும்பி அணிந்து கொண்டிருக்கிறார்கள். ஆண்-பெண் இடைவெளி, ஏழை - பணக்காரர் பாகுபாடு இந்த உடைக்கும் ஜீன்ஸுக்கும் கிடையாது. ஒரு காலத்தில் ஹிப்பிகள் மட்டுமே அணியும் உடை என்று கருதப்பட்டதை, இப்போது குழந்தை முதல் பாட்டிகள் வரை மகிழ்ச்சியுடன் அணிகிறார்கள். எல்லா நாட்டவரும் அணிகிறார்கள்.

ஆங்கில அகராதி ஜீன்ஸ் என்பதற்குப் பின்னல் இழையுடைய உறுதியான பருத்தித் துணி என்று அர்த்தம் சொல்கிறது. இதன் வரலாற்றைப் பார்க்க வேண்டுமென்றால் கொலம்பஸ் காலத்திற்கே செல்ல வேண்டும். அமெரிக்காவைக் கண்டுபிடிக்கச் சென்ற போது ஜெனோவாவிலிருந்து வந்த நல்ல வலிமையுள்ள துணியைத் தம் கப்பல் பாய் மரத்தில் விரித்தாராம். ஜெனோவாவின் மறு சொல் ஜீன்ஸ் ஆகிவிட்டது.

ஒரு இளம் விற்பனையாளருக்கு டென்ட் துணி விற்பனை ஆகாமல் தேங்கி விட்டது. இந்த கான்வாஸ் துணியால் புரோசர்கள் தைத்து விற்பனை செய்தார். இதுதான் டெனிம் பான்டுகளின் ஆரம்பம்.

இதைத் தொடர்ந்து மேலை நாடுகளில் கௌபாய் உடை பிரபலமாயிற்று. சில ஆண்டுகளில் இதற்கு மவுசு குறைந்து விட்டது. ஆனால் ஜீன்ஸ் தொடர்ந்து அணியப்பட்டது. 1950, 60-களில் பாப், ஹிப்பி, பீட்டில்ஸ் புரட்சி, ஜீன்ஸை மேல் நாட்டு மக்களிடம் உலகமெங்கும் பிரபலமாக்கி விட்டது. ஜீன்ஸ் உடையாக மட்டும் கருதப்படுவதில்லை. ஒரு புதிய பண்பாடு, ஒரு சமுதாய இயக்கம் இவற்றைக் குறிப்பிடுகிறது. இந்தியாவிற்கு ஜீன்ஸ் வந்தது 1960-க்குப் பிறகு. இதை உற்சாகமாக வரவேற்றார்கள் நகர வாலிபர்கள். நாளடைவில் தமிழ்நாட்டு வியாபாரிகள் ஆண், பெண், குழந்தைகளுக்கு விதவிதமான ஜீன்ஸ் தயாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்திய ஜீன்ஸ்களே வெளிநாட்டு பெயர்களில் (உதாரணமாக ஜீன் ஜாக்கெட், ஸ்கர்ட்டுகள் போன்றவை) தயாரிக்கப்பட்டன.

ஜீன்ஸின் பல ரகங்கள்:

ஜிப் வைத்துத் தைத்தது. லேசாகப் போனது. பட்டுப் போட்டது. ஜீன் ஷர்ட்ஸ். ஜீன் ஜாக்கெட்ஸ்... இப்படி. இப்போது டெனிம், பிரஷ் டெனிம், காட்ராய், வெல்வெட், கான்வாஸ், ட்வில், மற்றும் சாடின், பாலியஸ்டர் ரகங்களிலும் ஜீன்ஸ் கிடைக்கிறது. முதலில் ஒரு நிறத்தில்தான் ஜீன்ஸ் தயாரிக்கப்பட்டது. ஆனால் இப்போது கறுப்பு, மிலிட்டரி பச்சை, காக்கி, வெள்ளை, சாம்பல் நிறம், பிரௌன் ஆகிய நிறங்களில் அணிகின்றனர்.

கட்டடமாக உள்ள ஜீன்ஸ் வேலை செய்வதற்கு வசதியாகவும், கொஞ்சம் தொள தொளவென்று கால்கள் பாகம் நேராகவும், ஸ்டிக் இல்லாமலும் இருக்கும் ஜீன்ஸ் பாணிகளும் கருதப்படுகிறது. தற்போதைய நாகரிகம் தடவிப்பாணியில் டெபரத் தோலில் அப்ளிக் ஜீன்ஸுடன் சேர்த்துத் தைப்பது தான்.

ஜீன்ஸை ஜனாதிபதி கார்ட்டர் அலுவலகத்துக்கே அணிந்து வந்தார் என்றால் ஜீன்ஸ் நாகரிகத்தை ஒரே ஒரு வார்த்தையில்தான் வர்ணிக்க முடியும்— வாவ்!

—வைஜயந்தி

எதிர்ப்பக்கத்தில் ஜீன்ஸ் அணிந்துள்ளவர்: குமாரி ரஞ்சனி

வண்ணப்படம்: ஜெயமோகன்

குரு தம் மாணவர்களிடம் ஆளுக்கொரு மாம்பழத்தைக் கொடுத்து, 'யாரும் பார்க்காத இடத்தில் இந்த மாம்பழத்தை நீங்கள் உண்ண வேண்டும்!' என்றார். சீடர்கள் பல்வேறு திசைகளில் சென்று ரசித்துச் சாப்பிட்டு விட்டுத் திரும்பினார்கள். ஒரே ஒருவன் மட்டும் எடுத்துப் போன கையில் முழு மாம்பழத்துடனேயே திரும்பினான். ''நான் எந்தத் திசைக்குச் சென்றாலும் என்னை நான் மறைக்க முயன்றாலும் கடவுள் என்னைக் கண்காணித்துக் கொண்டிருப்பதைக் கண்டு கொண்டேன்!'' என்று கூறி குருநாதரின் ஆசியைப் பெற்றான்.

சொன்னவர்: பு. ரா. நல்லமுத்து.

-சி. என். ம.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Mosaic Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani   Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka